


“தோழர் **வே.ஆனைமுத்து**

**சுவடி : 1    ஏடு : 3**

**ஆகத்து – செப்டம்பர் 2022**

வாலாசா வல்லவன்

ஆசிரியர் குழு
க.முகிலன்
சா.குப்பன்
தி. துரைசித்தார்த்தன்
முனைவர் முத்தமிழ்
சி.நடராசன்
ந.கருணாகரன்
இரா.திருநாவுக்கரசு

இதழ் வடிவமைப்பு :
வானவில் கணினி
சென்னை - 600 005.
பேசி : 8668109047

**அனைத்துத்**
ஆசிரியர் **‘புதிய சிந்தனையாளன்’**
2/12, சி.என்.கே.சந்து,
சேப்பாக்கம், சென்னை - 600005.

**86681 09047, 98947 28032**
**94885 34225**

**மின்னஞ்சல் :**
sinthanaiyalantamilmonthly@gmail.com

**இணையத்தில் படிக்க**
www.keetru.com




# பெரியார் 144-வது பிறந்த நாள் சிந்தனை

1919 முதல் 1925 வரை தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியில் செயலாளராகவும் தலைவராகவும் இருந்த பெரியார் வகுப்புவாரி உரிமை வேண்டும் எனக் கொண்டுவந்தத் தீர்மானங்கள் பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் நிறைவேற்ற முடியாத நிலையில், காங்கிரசில் இருந்து வெளியேறி 1926-இல் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

பார்ப்பனர் அல்லாதார் சமூக விடுதலை, பெண் விதலை ஆகியவற்றை முன்நிறுத்தித் தீவிரமாகச் செயல்பட்டு வந்தார். அதற்குத் தடையாக இருந்த, இந்து மதத்தையும் பார்ப்பனர் களையும் கடுமையாக எதிர்த்து வந்தார்.

1929இல் செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் தமிழக சமூக அரசியலில் ஒரு புரட்சி கரமான மாற்றத்தை ஏற்படுத்தியது.

சமதர்ம கொள்கையை 1928 முதல் தன்னுடைய இறுதிக் காலம் வரை பெரியார் பரப்புரைக் செய்து வந்தார்.

1937இல் இராசாசி சென்னை மாகாண முதல்வராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன் சென்னை மாகாணப் பள்ளிகளில் இந்தியை கட்டாயப்பாடமாக்கினார். இதைக் கண்டித்து தமிழ் நாட்டில் மாபெரும் போராட்டம் வெடித்தது. ஆண்களும் பெண்களும் கைக்குழந்தைகளுடன் சிறையேகினர். தமிழர் பெரும்படை 1938 ஆகத்து ஒன்று, அன்று திருச்சியிலிருந்து வழிநடைப் பயணமாக 42 நாள்கள் இந்தி எதிர்ப்பு பரப்புரை மேற்கொண்டு, 11-9-1938 அன்று சென்னை வந்தடைந்தது. கடற்கரையில் மாபெரும் வரவேற்புக் கூட்டத்தில் பெரியார் தமிழ்நாடு தமிழருக்கே என்று முழங்கினார்.

1938திசம்பர்29,30,31நாள்களில்சென்னையில்நடைபெற்ற தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தின் மாநாட்டில் பெரியார் அக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது மொழிவழி மாநிலம் பிரியவில்லை, சென்னை மாகணமாக இருந்தது. அன்றைய நீதிக்கட்சித் தலைவர்களின் கருத்தின் அடிப்படையில் திராவிட நாடு திராவிடருக்கே என்று முழங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. திராவிட நாடு பிரிவினையை பெரியார் தீவிரமாக மேற்கெண்டார். 1.11.1956இல் மொழி வழி மாநிலங்கள் பிரிந்த பின்பு, ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்பதை தமிழ்நாடு தமிழருக்கே என்று மாற்றினார்.

1950 சனவரி 26 முதல் புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் காரணமாக நீதிக்கட்சி ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட வகுப்புரிமை ஆணை செல்லாது என்று செண்பகம் துரைராசன் வழக்கில் சென்னை உயர்நீதி மன்றமும், இந்திய உச்ச

நீதிமன்றமும் 1950இல் தீர்ப்புக் கூறியதை கண்டித்து, ஓர் ஆண்டு முழுவதும் தமிழ்நாட்டிற்கு வரும் ஒன்றிய அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்டும் போராட்டமும் கடைஅடைப்பும் நடத்தச் செய்தார். வகுப்புரிமை செல்லாது எனக்கூறும் அரசியல் அமைப்புச் சட்டம் ஒழிக எனவும் முழங்க வைத்தார். வகுப்புரிமைக்கு ஆதரவாக மாணவர்கள் கல்லூரிப் புறக்கணிப்பு என தமிழ்நாட்டையே போர்களமாக்கினார். அதன் விளைவாகத் தான் இந்திய அரசியல் சட்டத்தில் 1951இல் முதல் திருத்தம் செய்யப்பட்டு 15 (4) என்ற விதி சேர்க்கப்பட்டு கல்வியில் இட ஒதுக்கீடு மீட்கப்பட்டது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சாதிக்கு பாதுகாப்பு அளிக்கும் விதிகள் 13,25,372 உள்ளன என்று கூறி, அந்த பிரிவுகளை எரிக்கும் போராட்டத்தை 1957 நவம்பர் 26 அன்று நடத்தினார். சுமார் 10,000 பேர் எரித்தனர்; 3000 பேர் ஓராண்டு முதல் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனைப் பெற்றனர்.

பார்ப்பனர்கள் தாங்கள் உயர்ந்த சாதியினர் என்று கூறிக்கொள்ள இடமளிக்கும் கோயில் கருவறை நுழைவுப் போராட்டத்தை 1969இல் அறிவித்தார். தமிழ்நாட்டு முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று அப்போராட்டத்தை தள்ளி வைத்தார். கலைஞர் ஆட்சியில் 02.10.1970 இல் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என நிறைவேற்றப்பட்டச் சட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் பார்ப்பனர்கள் வழக்குத் தொடுத்தனர்.

14.03.1972இல் உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பில் பரம்பரை அர்ச்சகர் முறை ஒழித்தது செல்லும்; ஆனால் ஆகமக் கோயில்களில் ஆகமத்தின் அடிப்படையில்தான் அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும் என்று கூறியது.

கலைஞர் மீண்டும் முதலமைச்சராக இருந்த போது 23.05.2006இல் அனைத்துச் சாதியினர் அர்ச்சகர் ஆக நியமிக்கச் சட்டமியற்றினார்; அதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. 16.12.2015இல் தீர்ப்பளித்த நீதிபதிகள் இந்தச் சட்டம் செல்லும் அதே நேரத்தில் ஆகம அடிப்படையில் அமைந்த கோயில்களில் ஆகம விதிகளை மீறி அர்ச்சகர் நியமனம் செய்யப்பட்டால் பாதிக்கப்பட்டவர்கள் கீழ்நீதி மன்றத்தை நாடலாம் என தீர்ப்பு வழங்கியது.

தமிழக முதல்வர் அவர்கள் தமிழக அரசின் ஆகமப் பள்ளிகளில் படித்து முடித்த அர்ச்சகர்களை 14.08.2021 அன்று அர்ச்சகர் பணிகளில் நியமனம் செய்தார். இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் 22.8.2022 அன்று சென்னை உயர்நீதி மன்றம் வழங்கியத் தீர்ப்பில் தமிழக அரசின் அர்ச்சகர் பணியமர்த்தம் செல்லும் என்று கூறியது. அதே தீர்ப்பில் ஆகமத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட கோயில்களை கண்டறிய 5 பேர் குழுவை நியமித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க உத்தர விட்டது. ஆகமத்தின் அடிப்படையில் அமைந்த கோயில் களில் ஆக விதிகளின் படி அர்ச்சகர் நியமனம் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளது. மீண்டும் கருவறைத் தீண்டா மைக்கே வழிவகுக்கிறது, இதற்கு எதிராக நம்முடைய போராட்டம் தொடரவேண்டும்.

1925 செப்டம்பர் 27 அன்று 'இராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்' (ஆர்.எஸ்.எஸ்) தொடங்கப்பட்டது. அதன் குறிஇலக்கு இந்தியாவை இந்து நாடாக (இந்து இராஷ்டிரம்) ஆக்குவது. இதற்காக "பாரதிய ஜனசங்கம்" (பி.ஜே.எஸ்,) என்ற ஆர்.எஸ்.எஸ்-இன் அரசியல் கட்சியை 1951 இல் சியாமா பிரசாத் முகர்சி என்ற பார்ப்பனர் உருவாக்கினார். அது தொடங்கிய 25 ஆண்டுகள் கழித்து, 1977இல் உருவான ஜனதா கட்சியில் இணைந்து, இந்திய ஒன்றிய ஆட்சியதி காரத்தில் பங்குப்பெற்றது. ஜனதா கட்சியில் உறுப்பினராக இருந்தவர்கள் ஆர்.எஸ்.எஸ்-இலும் உறுப்பினராக - இரட்டை உறுப்பினராக இருந்ததற்கு எதிர்ப்புக் கிளம்பியதால், 1980இல் தனியாகப் பிரிந்து 'பாரதிய ஜனதாக் கட்சி' என்ற பெயரில் செயல்பட்டு வருகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ்-இன் குறிஇலக்கு, அது தொடங்கிய நூறாவது ஆண்டிற்குள் இந்தியாவை இந்து நாடு என்று ஆக்க வேண்டும் என்பதே. பா.ச.க. அதற்கு முதல் படியாக பார்ப்பனரான அடல்பிகாரி வாஜ்பாயி தலைமையில் 1999 முதல் 2004 வரை இந்திய ஒன்றிய அரசதிகாரத்தில் கோலோச்சியது. அப்போதே தோழர் வே.ஆனைமுத்து "2ஆம் புஷ்ய மித்ர சுங்கன்" ஆட்சி எனக் கடுமையாக எதிர்த்தார். அது கூட்டணி ஆட்சியாக இருந்ததால், வெளிப் படையாகப் பெரிய செயல்களைச் ஈடேற்றிக் கொள்ள இயலவில்லை "இந்து தேசியம்", "இந்துத்துவம்" என்ற கொள்கையின் தந்தையாகக் கருதப்படும் வி.டி.சாவர்கர் படத்தை நாடாளுமன்ற நடுமண்டபத்தில் திறந்து வைத்தார்கள்.

ஆர்.எஸ்.எஸ் தொடங்கிய 90ஆம் ஆண்டில் அடுத்த படியாக, பா.ச.க 2014இல் தனிப் பெரும்பான்மையுடன் இந்திய ஒன்றிய அரசதி காரத்தைக் கைப்பற்றியது. 2024இலும் ஆட்சியதி காரத்தைக் கைப்பற்றி, கடந்த 8 ஆண்டுகளாக

மளமளவென்று பலவற்றை செயல்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ் - பா.ச.க. மத உணர்வைத் தூண்டி ஆதாயமடைவது என்ற செயலுத்தியை 1992இல் அயோத்தியில் பாபர் மசூதியை இடித்ததில் தொடங்கினர். மசூதி இடித்த இடத்தில் இராமன் கோயில்கட்ட இந்தியத்தலைமைஅமைச்சரானநரேந்திர மோடி 2020இல் அடிக்கல் நாட்டி விட்டார். 18,000 கோடி செலவில் 2023 இல் கட்டி முடித்து 2024 தைத்தில் திங்கள் முதல் நாளில் திறப்பது என்று நேற்று நடை பெற்ற இராமர் கோயில் கட்டுமானக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (தினமணி 13.09.2022) கோயிலைத் திறக்க விரைவாக வேலைகள் நடைபெறுகின்றன.

தேசிய குடிமக்கள் பதிவு (NRC) தேசிய குடிமக்கள் பதிவேடு என ஒரு பக்கம்; பண்பாட்டு தேசியம் (Cultural Nationalism) என்று சொல்லிக்கொண்டு இசுலாமிய எதிர்ப்பு - இசுலாமிய அடையாளங்களை அழித்தல் இன்னொரு பக்கம் என்று செயல்படுகிறார்கள். மற்றொரு பக்கம் பிரித்தானிய காலனிய அடையாளங்களை அழிப்பது என புதிய நாடாளுமன்றக் கட்டடம் கட்டப் படுகிறது. இராஜபாதை என்பதை "கடமைப் பாதை" எனப்பெயர் மாற்றப்படுகிறது. அதாவது "கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே" என்ற கீதையின் வாசகத்தை நினைவுபடுத்துகிறார்கள்.

மெக்காலே கல்வி முறையான மேலை நாட்டுக் கல்வி முறை, இந்திய கல்வி முறையையும் கலாச்சாரத்தை சீரழித்து விட்டது என்று சொல்லி, தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் மாநிலங்களின் கல்வி உரிமைகளைப் பறிப்பதுடன் கல்வியில் இந்தியை - சமற்கிருத்தைத் திணித்து கல்வியை அறிவியலுக்கு மாறாகக் காவிமயமாக்கும் வேலையைச் செய்கிறார்கள். தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை அனைத்திலும் ஊடுருவி கல்வியைக் காவிமயமாக்கி வருகின்றனர்.

ஒரு புறம் இந்துத்துவத்தை - அதன் மூட நம்பிக்கைகளை, பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்த பகுத்தறிவு வழி எழுத்தாளர்கள் - அறிஞர்கள் - செயற் பாட்டாளர்களான நரேந்திர தபோல்கர், எம்.எம். கல்புர்கி, கோவிந்த் பன்சாரே, கவுரிலங்கேஷ் போன்றவர்களைக் காவிப் பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்கின்றனர். இன்னொரு புறம் 2018இல் மராட்டியத்தில் பீமா கே ரேகான் போரின் 200ஆம் ஆண்டு விழாவில் பங்கேற்றதற்காக ஆனந்த் டெல்டும்டே, கவுதம் நவ்லகா, வரவரராவ், ஸ்டேன் சாமி. சுதா பரத்வாஜ். வெர்னான் கன்சால்வஸ் போன்ற அறிஞர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள் 16 பேரை பலவிதமான பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்தும் அரசு பயங்க ரவாதச் செயல்களை நிறை வேற்றுகின்றனர்.

இந்து ராஷ்ட்டிரத்திற்குகான அரசியல் அமைப்புச் சட்வரைவின் சுருக்கத்தை "தரன்சன்சாது" என்கிற அமைப்பு 13.3.2022 அன்று வெளியிட்டுள்ளது. அதில் வாரணாசி இந்து ராஷ்டிராவின் தலைநகராக இருக்கும் என்றும் மநு உள்ளிட்ட இந்து சாத்திர நூல்களே சட்ட நூல்களாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இசுலாமியர்கள் கிறித்துவர்கள் வாழலாம் ஆனால் அவர்களுக்கு வாக்குரிமை கிடையாது என்று அறிவித்-துள்ளது.750 பக்கங்கள் கொண்ட இந்து ராஷ்ட்டிரா அரசமைப்புச் சட்டம் 2023க்குள் எழுதி முடிக்கப்படும் என்று அவ்வமைபினர் அறிவித்துள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ் - இற்கு நேர் எதிரானக் கொள்கை யைக் கொண்டுள்ள பெரியாரியலாளர்களான நாம் நம்முடையக் கொள்கைகளை வென்றெடுக்க என்ன என்ன திட்டங்கள் வைத்துள்ளோம்? எப்படிச் செயல்படப் போகின்றோம்? என்பதை இந்தப் பெரியாரின் 144ஆம் பிறந்த நாளில் - சுயமரியாதை இயக்கம் தொடங்கிய 96ஆம் ஆண்டில் மீளாய்வுச் செய்ய கடமைப்பட்டுள்ளோம். பெரியார் வெற்றிப் பெற்று விட்டார் எனப் போலிப்பெருமை பேசி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதில் பயனில்லை.

**ஆர்.எஸ்.எஸ் -இன் இந்துத்துவ சித்தாந்ததை தமிழகத்தில் வேர்பிடிக்காமல் வீழ்த்துவோம்!**

**பாசிசப் பா.ச.க.வை ஆட்சி அதிகாரத்திலிருந்து தூக்கியெரியப் பாடுபடுவோம்!**

**தமிழகத்தின் தன்னாட்சி உரிமைகளுக்குப் போராடுவோம்!**

**பெரியாரின் கொள்கைகளை உரத்து முழங்குவோம்!**

- வாலாசா வல்லவன்
15.9.2022

# சமூகநீதியைச் சீர்குலைக்கும் ஒன்றிய அரசின் ஆபத்தான போக்கு

பேராசிரியர் மு.நாகநாதன்

இந்தியா விடுதலைப் பெற்ற காலம் தொடங்கி ஒன்றிய அரசின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரசு, பாரதிய ஜனதா கட்சிகள் பெரும்பான்மையான ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்கு எதிராகவே இருந்து வருகின்றன என்பதைப் பல தொடராய்வுகள் அம்பலப்படுத்தி வருகின்றன. காங்கிரசுத் தலைவர் களில் பெரும்பாலானோர் முற்பட்ட சமூகத்தைச் சார்ந்த வர்களாகவே இருந்தது இதற்கு முதன்மையான காரணமாகும்.

இந்திய விடுதலைக்குப் பின் இந்தியச் சமூக பொருளாதாரச் சூழலை ஆய்வு செய்த நோபல் பரிசுப் பெற்ற அறிஞர் குன்னர் மிர்தல் "இந்தியா உயர் வர்க்கத்தினரால் ஆளப்படுகிறது. இதற்கு நேர்மாறாக பெரும்பான்மையான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். தேசிய அரசியல் தலைவர்கள் அனைவரும் ஆதிக்க வர்க்கத்தினராகவே உள்ளனர். கிடைத்த புதிய அதிகா ரமும் பொறுப்பும் மேலும் அதிக சலுகைகளை அவர்களுக்கு வழங்குகிறது" (India is ruled by upper class citizens. In contrast to the poverty – stricken masses, national political leaders were all members of the privileged upper class, and their new positions of responsibility and power rapidly invested them with still greater privileges) எனக் குறிப்பிட்டார்.

அறிஞர் குன்னர் மிர்தலின் மேற்குறிப்பிட்ட கருத்து இன்றும் இந்தியாவில் தொடர்வதுதான் கொடுமையிலும் கொடுமையாகும்.

குன்னர் மிர்தலின் மகன் ஜேன் மிர்தல் மிகச் சிறந்த சமூகவியல் அறிஞர். இவர் 2010ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து மாவோயிஸ்ட் கட்சியின் கொள்கை செல்வாக்குள்ள காட்டுப் பகுதிகளுக்குச் சென்று அவர்களுடன் உரையாடி, தனது "இந்தியாவின் மீது சிகப்பு நட்சத்திரம்" என்ற நூலினை 2012ஆம் ஆண்டு வெளியிட்டார்.

"ஒடுக்கப்பட்ட மக்கள் குறிப்பாக தலித் மக்கள் இன்றைய இந்தியாவில் விடுதலைப் பெற்றார்களா? என்ற வினாவை எழுப்பி ஒருவர் இந்தியாவை முழுமையாகப் பார்க்கவேண்டும். சுதந்திரம் என்பது சிலருக்குத்தான் பெரும்பான்மையான மக்களுக்கு அல்ல. பெரும்பான்மையான மக்களுக்கு இந்தியா இன்றும் விடுதலை அடையவில்லை" என்ற அதிர்ச்சியான கருத்தினை ஜேன் மிர்தல் பதித்துள்ளார். அவர் 93 ஆண்டுகள் வாழ்ந்து 2020இல் மறைந்தார். (Could the Dalits in today's formally independent India be called free? One needs only to look around in India. Freedom is for the privileged few, not for the majority of the Indian people. For them India is still not free," – 'Red Star Over India' by Jan Myrdal, New Delhi, 2012, p.72).

மேற்கூறிய அறிஞர்களின் கருத்துகள் இன்றும் மென்மேலும் உறுதியாகி வருகிறது. நிர்வாகம், நீதித் துறை, சட்டமன்றம் ஆகிய துறைகளில் இடம் பெற்றோர் பெரும்பாலும் ஆதிக்கச் சமுதாயத்தைச் சார்ந்தவர் களாகவே இருந்து வருகின்றனர். இவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து சதிச் செயல்களை அரங்கேற்றி வருகின்றனர். விதிவிலக்காகத் தமிழ் நாடு உட்படச் சில தென் மாநிலங்களில் தந்தை பெரியார் தலைமையில் இயங்கிய சமூக சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகளால் இந்தப் போக்கு ஓரளவிற்குத்தான் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் 2014இல் பாஜக ஆட்சி ஒன்றிய அரசில் அமைந்த பிறகு சனாதன சங் பரிவாரங்களின் கைகளில் ஆட்சி அதிகாரம் சென்றுவிட்டது.

இதற்கு அண்மைக்காலமாக நடைபெற்று வரும் பல அரசியல் நிகழ்வுகள் சான்று பகர்கின்றன. உயர் வகுப்பினரின் ஆதிக்கம் மென்மேலும் நிலைப்பெற, வலுப்பெற அரசமைப்புச் சட்டத்தை அவசர அவசர மாகத் திருத்தி 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு முற்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப் பட்ட 10 விழுக்காடு இட ஒதுக்கீடு உரிமையை பிரதமர் மோடி அளித்தார்.

ஆனால் பாஜக சங்கிகள் இந்தச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது ஒரு தவறான அறிக்கையைச் சுட்டிக்காட்டினர். 2010இல் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி நடந்த போது முற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அளிப்பது தொடர்பாகத் திரு.சின்ஹோ தலைமையில் (Sinho Commission) ஒரு குழு அமைக்கபட்டு ஆய்வறிக்கை அளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் மாநிலங்கள் முற்பட்ட பிரிவினரில் உள்ள ஏழைகளுக்கு உரிய சலுகை



களை அளிக்கலாம். அதற்கான திட்டங்களுக்கு உரிய தொகையை வழங்கலாம். ஆனால் அவர்களுக்கு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி சமூக கல்வி தளத்தில் பின்தங்கியவர்களுக்கு வழங்கியது போன்று இட ஒதுக்கீட்டைப் பொருளாதாரத்தை அளவுகோலாக எடுத்து அளிக்க முடியாது என உறுதியாகத் தெரிவித்தது.

இக்குழு அளித்த தெளிவான பரிந்துரைகளுக்கு மாறாக மோடி அரசுத் திட்டமிட்டு முற்பட்ட வகுப்பினருக்குப் பொருளாதார அடிப்படையில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் வழியாக 10 விழுக்காட்டு இட ஒதுக்கீட்டை வழங்கியது. ஆனால் தமிழ்நாடு இன்று வரை இச்சட்டத்தை ஏற்கவில்லை.

இந்திய அரசமைப்புச் சட்ட விதிகளின்படி குறிப்பாக 1951இல் கொண்டு வரப்பட்ட முதல் திருத்தத்தின்படி சமூகம், கல்வித் தளங்களில் பின்தங்கியோர்க்கு மட்டுமே இட ஒதுக்கீடு எனத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

மகாராட்டிர மாநிலத்தில் பொருளாதார அடிப் படையில் முற்பட்ட பிரிவினருக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டம் மாநில அரசால் நிறை வேற்றப்பட்டது. இந்தச் சட்டம் செல்லாது என நீதி மன்றம் அறிவித்தது. இக்காலக்கட்டத்தில் 1991இல் நரசிம்மராவ் பிரதமராக இருந்த போது முற்பட்ட வகுப்பினருக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு கொள்கையை நடைமுறைப்படுத்த ஓர் அரசாணையை ஒன்றிய அரசு வெளியிட்டது. இதை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்ட போது உச்ச நீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் அடங்கிய அரசமைப்புச் சட்ட அமர்வு பல மாதங்கள் ஆய்வு செய்து 1993இல் வழங்கிய தீர்ப்பில் பொருளாதார அளவுகோலின் அடிப்படையில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு கொள்கையை வழங்கியது இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது எனக் குறிப்பிட்டு இந்த இட ஒதுக்கீடு அரசாணையை நீக்கியது.

2014ஆம் ஆண்டு ஆட்சியமைத்த மோடி அரசு இந்த அரசமைப்புச் சட்ட அமர்வின் தீர்ப்பிற்கு எதிராக 2019இல் முற்பட்ட பிரிவினருக்குப் பொருளாதார அடிப்படையில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்து, அதை அரசமைப்புச் சட்டத் திருத்தமாகக் கொண்டு வந்தது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போது உச்ச நீதிமன்றம் இதற்கு இடைக் காலத் தடையை விதிக்க மறுத்துவிட்டது. இந்த வழக்கு இன்றும் நிலுவையில் உள்ளது.

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் மண்டல் குழுவின் பரிந்துரைகளின்படி இதரப் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார். இந்த இட ஒதுக்கீட்டு ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட போது இந்த வழக்கை 101 முறைகள் தள்ளி வைத்து பல ஆண்டுகள் காலம் தாழ்த்தியது உச்ச நீதிமன்றம். 1994ஆம் ஆண்டில்தான் ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புகளில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு 27 விழுக்காடு வழங்கிய இட ஒதுக்கீடு உரிமையை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்தது. காலந் தாழ்ந்து வழங்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்ற கூற்றுக்கு உச்ச நீதிமன்றமே துணை போனதோ என்ற நிலையும் நினைப்பும் உருவானது.

உச்ச நீதிமன்றத்தின் இத்தகைய இரட்டை நிலைப்பாட்டினைக் கண்டு பல சட்ட வல்லுநர்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர். உச்ச நீதிமன்றத்தின் மீதிருந்த நம்பிக்கையும் மக்களிடம் தளர்ந்துவிட்டது. உயர் சாதிக்கு ஒரு நீதி ஒடுக்கப்பட்ட சாதியினர்க்கு ஒரு நீதியா? என்ற வினா இன்றளவும் சட்டவியல் தளங்களில் எழுப்பப்பட்டு வருகிறது.

மும்பையிலிருந்து வெளிவரும் 2022 ஆகஸ்ட் 6ஆம் நாளிட்ட அரசியல் பொருளாதார வார இதழில் முற்பட்ட வகுப்பினர்க்கு வழங்கப்பட்டு வரும் சலுகை களைப் பற்றி அசுவினி தேஷ்பாண்டே ராஜேஷ் ராமச்சந்திரன் என்ற இரு ஆய்வாளர்கள் ஆய்வு செய்து ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளனர். அக்கட்டுரையில் கர்நாடகா ஆந்திரா தெலங்கானா ஆகிய மாநிலங்களில் பார்ப்பனர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வரும் சிறப்புத் திட்டங்களையும் சலுகைகளையும் பற்றி விளக்கி யுள்ளனர்.

2011-12ஆம் ஆண்டில் இந்திய மானுட மேம்பாட்டு ஆய்வின் புள்ளிவிவரங்களை அடிப்படை யாகக் கொண்டு (அக்காலக்கட்டத்தில் ஆந்திராவும் தெலங்கானாவும் ஒரே மாநிலமாக இருந்தன) பார்ப்பனர்கள், பார்ப்பனர் அல்லாத முற்பட்ட இந்து சாதியினர், இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப் பட்ட வகுப்பினர் பழங்குடியினர் மற்றும் உயர்

வகுப்பு இசுலாமியர்களிடம் ஓர் ஒப்பீடு ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. இந்த ஆய்வானது கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் மேற்கொள்ள பட்டது. இந்த ஆய்வின் முடிவில் பார்ப்பனர்கள் கல்வி, சுகாதாரம் (Human Capital measures) உள்ளிட்ட மானுட மூலதன அளவீடுகளில் மற்ற அனைத்து சமூகங்களைவிட மிக உயர்ந்த நிலையில் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவில் தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிவரங்கள் "பார்ப்பனர்கள் சமூக, கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட பல தளங்களில் மற்ற சமூகத்தினரை ஒப்பிடும்போது உச்ச நிலையில் உள்ளனர். மண்டல் (இட ஒதுக்கீடு) கொள்கைகளின் செல்வாக்கு அரசியலில் இதரப் பின்தங்கியோரின் வளர்ச்சியை ஊக்குவித்தாலும் காலம் காலமாக ஆதிக்கம் செலுத்தி வருகின்ற உயர் வர்க்கப் பார்ப்பனர்களை மண்டல் குழு பரிந்துரை களினால் ஏற்பட்ட விளைவுகள் எவ்விதத்திலும் பாதிக்கவில்லை" (Viewing Caste Inequality Upside and Down – The Perversity of Special Schemes for Brahmins in South India by Ashwini Deshpande and Rajesh Ramachandran, EPW,p.48) என்று சுட்டுகின்றன.

பார்ப்பனர்களுக்கிடையில் வறுமை ஒரு பிரச்சினையா? என்ற வினாவையும் இந்த ஆய்வாளர்கள் எழுப்பி அதற்கான விடையையும் கண்டுள்ளனர். "மற்ற சமூகங்களில் இருப்பதைப் போலப் பார்ப்பனர் களிலும் ஏழைகள் உள்ளனர். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டமும் (2005) அதற்குப் பிறகு நடைமுறைக்கு வந்த இத்திட்டமும் இதன் வழியாக வழங்கப்படும் ஊதியம் பொது விநியோகத் திட்டமும் இதன் வழியாகக் குறைந்த விலையில் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் எல்லோருக்கும் முழுமையாகச் சென்றடைகிறதா? என்ற வினாவையும் எழுப்பியுள்ளனர்.

கொரானா தொற்று நோய் பரவல் 2019க்குக் பிறகு மேற்கூறிய திட்டங்களின் வழியாக வழங்கப்படுகிற உதவிகள் தேவையான அளவிற்குக் கிடைக்கவில்லை. இத்திட்டங்களை மேலும் செம்மைப்படுத்தி எல்லாச் சமூகங்களிலும் காணப்படுகிற வறுமையைப் போக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு மேயன்றி பார்ப்பனர்களுக்கு மட்டும் பயன்படுகிற சிறப்புச் சலுகைகளை வழங்குகிற இந்த முறையற்றத் திட்டத்தை எவ்விதத்திலும் நியாயப்படுத்து முடியாது. பார்ப்பனர்களுக்கு வழங்கப்படும் இந்தச் சிறப்புத் திட்டங்கள் உறுதியான சாதியக் கட்டமைப்பு முறையைத் தகர்க்காமல் அதற்கு நேர் எதிராக இந்த மூன்று மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் அமைகின்றன" என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியல் தேர்தல் கொள்கைச் சார்ந்த (இந்துத்துவா) அடிப்படையில் பார்ப்பனர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்புத் திட்டங்களை தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்குச் சமூகநீதி அடிப்படையில் வழங்கப் படுகின்ற (இத்திட்டத்திற்கும் நிதியை ஒன்றிய அரசு குறைத்து வருகிறது) திட்டங்களுடன் சமமாக ஒப்பிட முடியாது. இத்தகைய அற்பமான திட்டங்களைக் கொண்டு உலக குரு (Modi) கூறுகிற புதிய இந்தியாவை உருவாக்கவே முடியாது. "(Viewing Caste Inequality Upside and Down – The Perversity of Special Schemes for Brahmins in South India by Ashwini Deshpande and Rajesh Ramachandran, EPW, pp.43-49).

அரசியல்-பொருளாதார 2022 சூன் 25 முதல் சூலை 2 வரையிலான வார இதழில் சமூக நீதி தொடர்பான இரண்டு ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந் துள்ளன. ஊர்ப்புற நகர்ப்புற வேலை வாய்ப்புகளில் சாதி வேற்றுமைகளும் வருவாய் ஏற்றத்தாழ்வுகளும் என்ற கட்டுரையில் ஆனந்த் சகஸ்ரநாம் நிஷாந்த் குமார் என்ற இரு ஆய்வாளர்கள் 2014 முதல் 2019 வரை உள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சில அரிய தகவல்களை வழங்கியுள்ளனர். சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள பிரிவினரின் வருமான அளவு தொடர்ந்து குறைந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

சிறு குறு வேளாண் குடியினர் வேளாண் தொழிலா ளர்களின் வாழ்வாதாரமும் இந்தக் காலக்கட்டத்தில் பெருமளவிற்குப் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. குறைந்த வருமானப் பிரிவினர்களில் பெரும்பாலானோர் தாழ்த்தப் பட்டோரும் பழங்குடியினரும்தான் (Income and Inequality across Rural – Urban, Occupational, and Caste Divides by Anand Sahasranaman, Nishanth Kumar, EPW, June 25- July 2 Issue, 2022, pp.23-30) என இந்த ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதே இதழில் மற்றொரு கட்டுரையில் தீபிகா ஜஜோரியா, மனோஜ் ஜாதவ் ஆகிய ஆய்வாளர்கள் வேளாண் சாராத் தொழில்களில் காணப்படும் சாதிய ஏற்றத்தாழ்வுகளும் அதனால் தொழில்துறை உறவுகளில் ஏற்படும் விளைவுகளும் (2004-05 முதல் 2018-19 புள்ளிவிவரங்கள் அடிப்படையில்) என்ற கட்டுரையில் "வேலைவாய்ப்பு படிநிலை களையும் அவற்றால் பெறப்படுகின்ற வருமானத்தையும் கணக்கிட்டு 9 பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளனர். அதே போன்று தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், இதரப் பிற்படுத்தப்பட்டோர், முற்பட்ட வகுப்பினர் ஆகியோரின் வேலைவாய்ப்பு படிநிலைகளை இக்கட்டுரையில் விளக்கியுள்ளனர்.

பல ஆண்டு தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டுள்ளன. உயர்

வகுப்பினர்தான் மிக அதிக வருமானம் பெறுகிற அனைத்துப் பதவிகளிலும் இடம் பெற்றுள்ளனர். மற்ற சமுதாயப் பிரிவினர் உயர் பதவிகளில் மிகமிகக் குறை வாகவே இடம் பெற்றுள்ளனர். குறைந்த ஊதியம் வழங்கப்படுகிற கடைநிலை பணிகளில் மற்ற பிரிவினர் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ள 9 நிலை வேலைவாய்ப்பு படிநிலை களில் 9வது கீழ்நிலை படியில்தான் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் அதிக அளவில் பணியில் உள்ளனர்.

தொழில் தொடங்குவதற்குத் தாழ்த்தப்பட்டோ ருக்கு மூலதனம் கிடைப்பதில்லை. சமுதாய அரசியல் நிதித் துறைகளிலும் இப்பிரிவினர் பின்தங்கியுள்ளனர். மேலும் நிரந்தரமான அரசு வேலைவாய்ப்புகள் குறைந்து வருவதாலும் தனியார்த் துறை வளர்ந்து வருவதாலும் இப்பிரிவினர் பெருமளவு பொருளாதாரப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர் (Caste Inequalities in Access to Regular Non-Farm Jobs and the likely Implication of the Industrial Relation code by Deepika Jajoria and Manoj Jatav, EPW, June 25- July 2 Issue, 2022, pp.31-37).

இந்தியாவின் பிற மாநிலங்களில் சனாதனக் கொள்கைகளைப் புகுத்தி ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி உயர்வகுப்பினரின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது போன்று தமிழ்நாட்டிலும் கொண்டு வர சங் பரிவாரங்கள் துடிக்கின்றன. இதற்கு முதலாளித்துவ பார்ப்பன சக்திகள் ஒன்றிணைந்து ஊடகங்கள் வழியாக எதிர்மறையான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றன.

எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்த போது தமிழ்நாட்டில் ஊடுருவிய இந்த சங்கிகள் இன்று ஆளுநர் வழியாகப் பல்கலைக்கழகங்களில் தங்களின் சனாதன ஆதிக்கப்போக்கைத் திணிக்க முற்படுகின்றனர். தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைச் சீர்குலைப் பதற்கு ஆளுநரை ஒரு கருவியாகப் பயன்படுத்தி ஒன்றிய அரசு குழப்பங்களை ஏற்படுத்தி வருகிறது.

பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் ஆட்சிக்காலங்களில் தொடர்ந்து பின்பற்றப்பட்ட இட ஒதுக்கீடு சமூக நீதிக் கொள்கைகளைச் சிதைக்க ஒன்றிய அரசு முற்பட்டு வருகின்றது.

தந்தை பெரியார் தனது தன்னலமற்ற பணிகளால் கட்டமைத்த சமூக நீதியை சமூக அமைப்பை வீழ்த்திவிடலாம் என்று திட்டமிடுகின்றனர்.

தமிழ்நாட்டில் மட்டும்தான் சமூக நீதி சார்ந்த சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. சான்றாக இக்கட்டுரை யாசிரியர் 11ஆம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (2006-11) மாநில அரசின் திட்டக்குழுத் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றிருந்த போது மொத்த திட்டச் செலவான ரூபாய் 92 ஆயிரம் கோடி தொகையில் 42 விழுக்காடு அளவிற்குக் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட மானுட மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவே செலவிடப்பட்டது. எனவேதான் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் இந்திய மாநிலங்களின் வரிசைப் பட்டியலில் 1983லிருந்து முதல் மூன்று இடங்களில் இடம் பெற்று வருகிறது. இவற்றையும் சீர்குலைக்கும் நோக்கோடுதான் ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசிற்கு வரி வருவாய் நிலுவைத் தொகையை வழங்காமலும் நீட் தேர்வை நீக்கும் சட்டமன்றத் தீர்மானத்திற்குச் செயல் வடிவம் கொடுக் காமலும் கடந்த ஓராண்டாக இழுத்தடிப்புச் செய்கிறது.

இன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தந்தை பெரியார், அறிஞர் அம்பேத்கர் ஆகியோரின் பிறந்த நாள்களை சமூக நீதி நாளாகவும் சமத்துவ நாளாகவும் அறிவித்து அவர்களின் கொள்கை களை அரசின் வழியாக உயர்த்திப் பிடித்து வருகிறார். இப்போக்கைத் தடை செய்வதற்காக அரசியல், கலைத் துறைகளில் செல்வாக்குப் பெற்றவர்களை மிரட்டிப் பணிய வைத்து அவர்களைச் சனாதனத் தரகர்களாக பாஜக அரசு மாற்றி வருகிறது.

இந்தியாவின் மற்ற மாநிலங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட, பழங்குடியினப் பிரிவினரின் வாழ்நிலையை ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில்தான் கல்வி, அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் இப்பிரிவினர் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்று வளர்ந்து வருகின்றனர். 50 ஆண்டுக்கால சமூகப் புரட்சியைப் புறந்தள்ளி சனாதனத்தை மீண்டும் தமிழ்நாட்டிலும் புகுத்துவ தற்கு ஒன்றிய அரசும் பாஜகவும் சங் பரிவாரங்களும் பலபல வடிவங்களில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தந்தை பெரியாரிய, அம்பேத்காரிய, இடதுசாரி, தமிழ் முற்போக்கு இயக்கங்கள் இந்தப் பேராபத்தைத் தடுப்பதற்குப் பெருமளவில் விழிப்புணர்வு பரப்புரை களை மக்களிடமும் குறிப்பாக இளைஞர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே காலத்தின் கட்டாய மாகும்.

■

**புதிய சிந்தனையாளன் இதழ் வளர்ச்சி நிதி, ஆண்டு, வாழ்நாள், புரவலர் கட்டணங்களை அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

**- ஆசிரியர் குழு**

# இந்தியாவின் கூட்டரசிய நிதிக் கொள்கையின் இழிநிலை

ஆ. கலையரசன்

சுதந்திர இந்தியாவை உருவாக்கியவர்கள் சமூக - பொருளியல் சமனின்மையைச் சரிசெய்திடக் கொண் டிருந்த அக்கறைகள் மறக்கடிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசமைப்பு அவையில் 1949இல் மேதை பி.ஆர்.அம்பேத்கர் ஆற்றிய தன் கடைசி உரையில் முரண்பாடுகளுடனான வாழ்க்கையில் இந்தியக் குடியரசு அடியெடுத்து வைப்பது பற்றி ஓர் எச்சரிக்கை விடுத்தார். “அரசியலில் நாம் சமநிலைப் பெற்றிருப்போம்; ஆனால் சமூக மற்றும் பொருளியல் வாழ்வில் சமனின்மையைப் பெற்றிருப்போம். இந்த ஏற்றத்தாழ்வுகள் நம் கவனத்தை ஈர்ப்பன. இவற்றைக் களைந்திடத் தவறினால், இதனால் பாதிப்புக்கு உள்ளாகின்றவர்கள் இந்த அரசியல் ஜனநாயகக் கட்டமைப்பைத் தகர்த்துவிடுவார்கள்” என எச்சரித்தார். திட்டங்கள் உறுதியாக நிறைவேற்றப்படுவதன் மூலம் இந்தச் சமனின்மைகளைச் சரிசெய்திட இயலும் என நேரு உண்மையாக நம்பினார். சமூக-பொருளியலிலும் மாநிலங்களுக்கு இடையேயும் உள்ள ஏற்றத்தாழ்வைக் களைந்திடுவதற்கு நிதியதிகாரம் ஓரளவு மய்யப்படுத்த வேண்டியதுத் தேவை என நேரு கருதினார்.

## ஒன்றிய அரசு பகிர்ந்தளிப்பதற்கு மாறாக பறித்தெடுத்தலைச் செய்கிறது.

அரசமைப்புச் சட்டத்தில் உள்ளார்ந்துள்ள சீர்மையற்றக் கூட்டரசியம் 2014 முதல் அரசியல் மய்யப்படுத்தல் மூலமாக மேலும் சீர்குலைக்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு அதிகாரங்களைப் பகிர்ந் தளிப்பதற்கு மாறாக பறித்துக் கொண்டுள்ளது. இந்திய அளவில் சரக்கு, சேவை வரிமுறைமை நடைமுறைப் படுத்தப்பட்டதால் மாநிலங்களின் வரி விதிக்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இதனால் மாநிலங்கள் வருவாய்ப் பெருக்கும் திறனை இழந்துள்ளன. ஒன்றிய நிதியளிப்புத் திட்டங்கள் என்ற பெயரால் ஊடுருவி மாநில அரசுகளின் செலவின மாதிரியைக் கூட சிதைத்து விட்டது.

## அரசயிலாக்கப்பட்ட ஒரு நிறுவனம்

நீண்ட காலமாகத் திட்டக்குழு மற்றும் நிதிக்குழு எனும் இரண்டு அமைப்புகளின் வழியாக நிதிப் பகிர்வு செய்யப்பட்டு வந்தது. ஆனால், திட்டக்குழு 1990இல் இருந்து தேய்ந்து, 2014இல் ஒழிக்கப்பட்டு விட்டதனால் நிதிக்குழு வழியாகவே நிதிப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒன்றிய அரசு விதிக்கும் பொருள் உற்பத்திவரி (E.D), வருமான வரி ஆகிய இரண்டின் வருவாயை மட்டும் பங்கீடு செய்து வந்ததை மாற்றி 2000 முதல் ஒன்றிய வரிகள் அனைத்தும் பகிர்ந்தளிப்பது என விரிவாக்கப்பட்டது. இன்று நிதிக்குழு ஒன்றிய அரசுக்கு உள்ளார்ந்து சார்பானதாகவும் தான்தோன்றித்தன மாகவும் நடக்கும் அரசியலாக்கப்பட்ட நிறுவனமாகி விட்டது. மய்யப்படுத்தப்பட்ட நிதிக் கொள்கையின் விளைவாக உலகில் மிகவும் பிற்போக்கான வரி விதிப்பு முறையைக் கையாள்வதால் சமனின்மையைச் சரிசெய்ய வேண்டும் என்ற மூலநோக்கம், உயர்ந்த எண்ணம் உண்மையில் உருமாறிவிட்டது.

அதனால், 2014இல் இருந்து என்ன மாறியுள்ளது என்பதைக் காண்போம். இன்றைய நிதிக் கொள்கையை இயக்கும் அரசியல் அதிகாரங்களை மய்யப்படுத்தும் பண்பாட்டுத்தேசியவாதக்காலத்தில்சுதந்திர இந்தியாவை உருவாக்கியவர்கள், சமூக-பொருளியல் சமனின்மையைச் சரிசெய்திடக் கொண்டிருந்த கொள்கை மறக்கப்பட்டது. ‘தாமாகச் சேர்ந்த கூட்டமைப்பாக’ இருப்பதற்கு மாறாக சேர்த்துப் பிடித்து வைக்கப்பட்ட வட்டமைப்பாக உள்ளது, இந்தியா எப்போதும் ஒரு உண்மையானக் கூட்டமைப்பாக இருந்ததில்லை என்பது உறுதி. தாமாகச் சேர்ந்த கூட்டமைப்பில் சிறிய சுதந்திர நாடுகளும் வந்து சேர்ந்து ஒரு கூட்டாட்சியாக உருவாக வேண்டும் (அமெரிக்க அய்க்கிய அரசுகள் போல) 1950 சனவரி 26இல் ஏற்கப்பட்ட அரசமைப்புச் சட்டம் அளிப்பதைவிட 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தில் கூட்டாட்சி இயல்பு மிகுந்திருந்தது; மாகாண அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்தது.

இந்த அதிகாரக் குவிப்பு அச்சுறுத்தலை எதிர்பார்த்துத்தான் சி.என்.அண்ணாதுரை அவர்கள் 1967இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் “இந்திய இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பேண ஒன்றிய அரசுப் போதுமான வலுவுள்ளதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இங்கே (மாநிலத்தில்) உள்ள துறைகளான கல்வியையும் நல்வாழ்வுத் துறையையும் அவர்கள் (ஒன்றியத்தில்) வைத்திருக்க லாமா... அது எந்தவகையில் இந்தியாவின் இறையாண் மையையும் சுதந்திரத்தையும் வலுப்படுத்தும்?” என்று

வினவினார். அதன்பின் 1969இல் தி.மு.க.அரசு, ஒன்றிய - மாநில நிதி உறவுகள் பற்றியும், அதிக நிதிஉட்பட பகிர்வுகள் பற்றியும், மாநில அரசுகளுக்கு வரிவிதிக்க அதிக அதிகாரங்கள் அளிப்பது பற்றியும் ஆராய்வதற்காக நீதிபதி பி.வி.இராசமன்னார் தலைமையில் ஒரு குழு அமைத்தது. ஒரு மாநில அரசு இத்தன்மையிலான ஒரு குழு அமைத்தது இதுவே முதன்முறை ஆகும். இது இந்தியாவின் பிற பகுதிகளில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. 1990 மற்றும் 2000களில் ஒன்றியத்தில் கூட்டணி ஆட்சிகள் இருந்தும் விளைவு ஒன்றுமில்லை. அதிகாரக் குவிப்பு 2014 இல் மிகவும் உச்சத்தைத் தொட்டது.

## திறனற்றதாகும் நிதிக் கொள்கை

1955-56இல் மாநிலங்கள் தங்கள் சொந்த நிதி வருவாயிலிருந்து 69% செலவினங்களைச் செய்யும் வலுவுள்ளதாக இருந்தன. 2019-20இல் இது 38%க்கும் குறைந்து விட்டது. மாநில அரசுகளின் செலவினங்கள் உயர்ந்து வரும் வேளையில் வருவாய் உயரவில்லை. இப்போதும் கல்விக்கு 85%ம் நல்வாழ்வுக்கு 82%ம் என இந்திய அளவில் 60% செலவினங்களை மாநிலங்களே செலவிடுகின்றன. மறைமுக வரி விதிப்புக் கட்டுப்படுத்தப் பட்டதாலும் பெட்ரோல், டீசல், மின்சாரம், மது மீதான வரிவிதிப்புத் தவிர, பிற வரி விதிப்பு அதிகாரங்களை சரக்கு - சேவை வரி (GST) எடுத்துக்கொண்டுள்ள தாலும் மாநிலங்கள் வரி வருவாயை உயர்த்த இயலாத தால் மாநிலங்களின் வருவாய் கடந்த பத்தாண்டாக உள்நாட்டு செல்வ உற்பத்தி (GDP)யில் 6% என்கிற அளவிலேயே தேங்கி நிற்கிறது.

14ஆம் நிதிக்குழு (2013 சனவரியில் அமைத்தது) வின் முடிவின்படி மாநிலங்களுக்கான பகிர்ந்தளிப்பு 32% இல் இருந்து 42% ஆக உயர்த்தப்பட்டாலும், அதன்பின் விதிக்கப்பட்ட மேல் வரி (செஸ்), கூடுதல் வரி (சர்சார்ஜ்) மாநிலங்களுக்குப் பிரித்தளிக்காதத் தொகுப்பில் நேரடியாக ஒன்றிய அரசின் பெட்டிக்குச் செய்வதால், (உயர்த்திய நோக்கம்) வீழ்த்தப்பட்டது. இந்த பிரித்தளிக்காதத் தொகுப்பில் ஒன்றிய அரசின் மொத்த வருவாய் 2012இல் 9.43ரூ இலிருந்து 2020இல் 15.7% ஆக உயர்ந்துள்ளது. இதனால், மாநிலங்களுக்குப் பிரித்தளிக்கக்கூடியத் தொகுப்பில் வருவாய் சுருங்குகிறது. மேலும் அண்மையில் கார்பரேட் வரியைக் கடுமையாகக் குறைத்ததன் தாக்கம் பிரித்தளிக்கும் தொகுப்பிற்கான வருவாய் மிகவும் சரிந்தது; சரக்கு சேவை வரிக்காக மாநிலங்களுக்கு அளிக்கும் இழப்பீட்டிலும் பெரிய விளைவுகளை ஏற்படுத்துவதில் முடியலாம்.

இவற்றுடன் கூட, மாநில அரசுகள் சந்தையில் பெறும் கடனுக்கு வேறுபட்ட வட்டியாக 7%க்குப் பதிலாக



10% வரை அளித்திடுமாறு ஒன்றிய அரசு கட்டாயப் படுத்துகிறது. இதுவுமின்றி, முற்றாகத் திறமையற்ற நிதி மேலாண்மை காரணமாக மாநிலங்கள் இழப்புக் குள்ளாகின்றன. மாநில அரசுகளிடம் சந்தையில் அதிக வட்டிக்குப் பெறும் பணம் கையிருப்பில் உபரியாக உள்ள நிதியை ரிசர்வ் வங்கி அறிவுரைப்படி ஒன்றிய அரசு வெளியிடும் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் திறைசேரி உண்டியலில் (treasury bills) குறுகிய காலத்திற்கு முதலீடு செய்வதால் மாநிலங்களைச் சுரண்டி ஒன்றிய அரசு ஆதாயமடைகிறது.

ஒன்றிய அரசின் திட்டங்களை நிறைவேற்றும் முகமைகளாக மாநிலங்கள் மாற்றப்படுவதால் மாநிலங் களின் தன்னாட்சியைக் கட்டுப்படுத்துகிறது. ஒன்றிய அரசு நிதியளிக்கும் திட்டங்கள் 131 உள்ளன. இவற்றுள் குறைந்த எண்ணிக்கையிலான திட்டங்களுக்கு மட்டுமே 90% நிதி ஒதுக்குகிறது. செலவின் ஒரு பகுதியை மாநிலங்கள் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாகும். தங்களுக்கான திட்டங்களுக்கு செலவிடுவதைக் குறைத்து, இணைமாணியமாக 25% இலிருந்து 40% வரை செலவிட வேண்டியுள்ளது. மக்கள நாயக அரசியலில், தேர்தலில் மாநில மக்கள் தீர்ப்புக்கு ஏற்ப நிறைவேற்ற வேண்டிய மாநில முன்னுரிமைத் திட்டங்களைப் பின்னுக்குத் தள்ளி, எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரித் திட்டங்களைத் திணிக்கும் ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு முதல் முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளது.

சொல்லப்போனால், மாநிலங்கள் உருவாக்குகின்ற செயல்திட்டங்களே மக்களுக்குப் பயனுள்ளவை என்பதும் சமூக மேம்பாட்டிற்கு உதவியுள்ளது என்பதும்

மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மகாராட்டிரத்தின் வேலை உறுதித் திட்டம், தமிழ்நாட்டின் பகல் உணவுத் திட்டம், கர்நாடாகா மற்றும் கேரளத்தின் உள்ளாட்சி மற்றும் இமாசால பிரதேசத்தின் பள்ளிக்கல்வி போன்ற வெற்றியடைந்த மாநிலத் திட்டங்கள் மக்கள் நாயக உந்துதல் காரணமாக இந்தியா முழுமைக்கும் தேசிய அளவில் ஏற்றுப் பின்பற்றப்படுகின்றன.

மாநிலங்களுக்கு உரிமையான நிதியை ஒன்றிய நிதியளிப்புத் திட்டங்களுக்கு மாற்றுவதால் மாநிலங்களின் சொந்த திட்டங்களுக்கு நிதியாதாரம் குறைந்து விடுகிறது. இது அரசமைப்புச் சட்ட விதிகளை மீறுவதாகிறது. மாநிலங்களுக்குரிய பட்டியலில் உள்ள இனங்களுக்கு ஒன்றிய அரசு நிதியளிப்புத் திட்டங்கள் ஏன்? அதேபோல் ஒன்றிய அரசுக்குரிய பட்டியலில் உள்ள இனங்களுக்குரிய திட்டங்களுக்கான செலவிற்கு மாநில அரசுகள் ஏன் பங்களிக்க வேண்டும்? சான்றாக, மாநிலங்களுக்குரிய பட்டியலில் உள்ள மக்கள் நல்வாழ்வுக்கானத் திட்டத்திற்கு ஒன்றிய அரசின் திட்டத்தை மாநிலங்களின் மீது திணிப்பது ஏன்? தமிழ்நாடு, கேரளா ஆகிய செயல்திறன் செம்மையாக உள்ள மாநிலங்களின் மீதும் கூடத் திணிப்பது ஏன்? இது மாநிலங்கள் தங்கள் சொந்த தன்னாட்சி வளர்ச்சிப் பாதையில் திட்டமிடுவதைத் தடுக்கிறது.

## விரிவடையும் ஏற்றத்தாழ்வு

இந்த அரசியல் அதிகாரத்தை மய்யப்படுத்துதல் ஏற்றத்தாழ்வை விரிவடையவே செய்யும், தேசிய வருவாயில் தனியார் செல்வத்தின் விகிதம் 1980இல் 290% இலிருந்து 2020இல் 555%ஆக உயர்ந்தள்ள-தாக உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை மதிப்பிட்டுள்ளது. இது உலகில் மிகவேகமான உயர்வு . உலகின் மொத்த செல்வத்தில் மூன்றில் இரண்டு பங்கு செல்வத்தை 10% மேல் தட்டினர் பெற்றுள்ள அதே வேளையில் உலக மக்கள் தொகையில் பாதியாக உள்ள மிகவும் ஏழையர் 6% செல்வத்தைப் பெற்றுள்ளனர். பணக்காரர்களுக்கு வரிவிதிப்பதில் இந்தியா கீழ்நிலையில் உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) - வரி வருவாய் விகிதத்தில் இந்தியா உலகத்தில் மிகவும் கீழே உள்ளது. வளர்ந்து வரும் சந்தை பொருளாதார நாடுகளின் சராசரியான 21 விழுக்காட்டை விட கீழே 17 விழுக்காடாக உள்ளது. கூட்டுறவு மற்றும் வளர்ச்சி அமைப்பு (OECD) நாடுகளில் இந்த விகிதம் கிட்டத்தட்ட 34 விழுக்காடாக உள்ளது.

வரலாறு முழுவதும் இந்திய மேல்தட்டு வர்க்கம் ‘ஒரு ஆளுக்கு ஒரு வாக்கு’ அளித்துள்ள அரசியல் சமத்துவம் தங்களை அச்சுறுத்துவதாக நினைத்து, நிதித்திறனை குறைமதிப்பிற்கு உட்படுத்து கின்றனர் என்று இலண்டன் பொருளியல் ஆய்வு மய்யத்தின் புனிதா சூரிய நாராயண் விளக்கியுள்ளார். சுதந்திரத்திற்குப் பிறகு நிதித்திறனைப் பயனற்றதாக்குவது பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்து கொண்டுள்ளது. இதன் விளைவு மறைமுக வரிவிதிப்பு முறையின் அடித்தளம் உலகில் மிகவும் பிற்போக்கானதாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

சொத்துடைய வர்க்கத்திற்கு வரிவிதிக்க இந்தியா தவறியுள்ளது. 1970இல் வேளாண்மை செழித்திருந்த போது வேளாண்மை வருவாய்க்கு வரிவித்தல் எதிர்க்கப்பட்டது. 1990களில் முதலாளியத்திற்கு சார்பாக மாறிய காரணத்தினால் அடுத்தடுத்து வந்த அரசு களால் கார்பரேட்டுகளுக்கான வரி குறைக்கப்பட்டது. இந்தியாவில் செல்வ வரி விதிப்பும் இல்லை. இந்தியாவில் வருமான வரிவிதிப்புக்கான வாய்ப்பும் குறுகலானது. மொத்த வரி வருவாயில் இப்போதும் மறைமுக வரி 56 விழுக்காடு பங்களிக்கிறது. நேரடி வரிவிதிப்பை அதிகப்படுத்துவதற்கு மாறாக ஒன்றிய அரசு 2019இல் கார்பரேட் வரியை 35% இலிருந்து 25% ஆகக் குறைந்துள்ளது.

ஒன்றிய அரசு தன் பொதுத்துறை நிறுவனங் களின் சொத்துகளை விற்று பணமாக்குகிறது. அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்க இவ்வாறு செய்வதாக அரசு கூறுகிறது. திட்டமிடல்கள் - மூலமாக சமமின்மைகளைத் தணிக்கலாம் என சுதந்திர இந்தியாவை உருவாக்கியவர்களின் கனவுக்கு முரணாக அரசியல் அதிகாரத்தை மய்யப்படுத்தப் படுபவர்களால் இந்திய நிதிக்கொள்கையில் கூட்டாட்சியியல் சமூக பொருளியல் ஏற்றத்தாழ்வை மேலும் அதிகப்படுத்துகிறது. இது மாநிலங்களுக்கு இடையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கூட திருத்தி யமைத்திடவில்லை. வறுமை ஒழிப்பு, சமமின்மைக் குறைப்பு, மக்கள் நல்வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதெனின் அவை மாநில அரசுகளின் திட்டங்களால் விளைந்தவையே, ஆனால் அவையும் இப்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

(28.07.2022 அன்று ‘The Hindu’ ஏட்டில் வெளிவந்த கட்டுரை) தமிழில் சா.குப்பன் இக்கட்டுரை யாளர் ஆ.கலையரசன் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் உதவிப் பேராசிரியர் மற்றும் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் தெற்காசிய நிறுவனத்தில் ஆய்வாளர் The Dravidian Model : Inteáreting the Political Economy of Tamilnadu நூலின் இணையாசிரியர். மா.பெ.பொ.க.யின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ஆ.கு.ஆறுமுகம் அவர்களின் இளைய மகன்.

■

# தந்தை பெரியார் காட்டிய 'தமிழ் மூவர்'!

புலவர் செந்தலை ந.கவுதமன்

புலவர் படிப்பு சாமியார் படிப்பா?

புலவர் பட்டத்திற்குப் படிக்க நான் விரும்பிய போது, "அது சாமியார் படிப்பு" எனத் தடைபோட்டார் என் தந்தையார்.


தஞ்சைக்கு அருகே உள்ள செந்தலையில் திராவிடர் கழகத் தலைவராக 1944ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தவர் என் தந்தையார். திராவிடர் கழகப் பொறுப்பாளர்களும் முன்னோடிகளும் எங்கள் இல்லத்திற்கு அடிக்கடி வந்து செல்வதை இளமை யிலிருந்தே பார்த்திருக்கிறேன்.

நான் பிறந்தசமயம் எங்கள் செந்தலை இல்லத்திற்குத் தந்தைபெரியார் வந்துள்ளார். அப்போது அவர் எனக்கு வைத்த பெயர்தான் கவுதமன்!

தொடக்கப்பள்ளிப் பருவத்திலிருந்தே திராவிடர் கழகக் கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் அப்பா அழைத்துச் செல்வார். வீட்டில் படிக்கக் கிடைப்பது 'விடுதலையும்', பெரியார் நூல்களும்தாம்! சாமி படம், வழிபாடு என்பவை எங்கள் வீட்டில் பார்த்தறியாதவை! குடும்பச்சூழலால் பெரியாரியக்கப் பற்று தானாகவே எனக்குள் வளர்த்தது. பார்ப்பன, ஆரிய வைதீக எதிர்ப்பை வடமொழி எதிர்ப்பாகவும், தமிழ்ப்பற்றாகவும் எனக்குள் வளர்த்தது திராவிடர்கழகமே!

தென்மொழி இதழ்த் தொடர்பும் பாவாணர், பெருஞ்சித்திரனார் எழுத்துகளும் என் தமிழ்ப்பற்றைப் பள்ளிப் பருவத்திலேயே செழுமைப்படுத்தின. அதற்குக் காரணமானது என் திராவிடர்கழகத் தொடர்பே! பள்ளிப் படிப்பு முடிந்தது. புலவர் கல்லூரியில் படிக்க வேண்டும் என்னும் உறுதி எனக்குள் துளிர்விட்டது. புலவர் படிப்பு சாமியார் படிப்பு. அது எதற்கு?' என எனது விருப்பத்திற்குத் தந்தையார் எதிர்ப்பு காட்டியது கவலை தந்தது.

பெரியார் அப்போது உயிரோடிருந்தார். திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் எங்கள் இல்லத்திற்கு அப்போது வந்தார். நான் புலவர்படிப்பு படிக்க விரும்புவதைக் குற்றச்சாட்டு போல் அவரிடம் சொன்னார் என் தந்தையார்! அதனை ஆதரிப்பதுபோல் ஆசிரியர் கி.வீரமணி அவர்களும் பேசினார்: "புலவர் படிப்பு வேண்டாம். ஆசிரியர் பணிக்கு மட்டும்தான் அது பயன்படும். தமிழ் பி.ஏ படியுங்கள். பணிவாய்ப்பு ஏராளம். பி.ஏ.படிக்க நான் ஏற்பாடு செய்கிறேன்." இப்படி மாற்றுவழி காட்டி விட்டுப் புறப்பட்டார் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள்!



வெறும் வாய்க்கு 'அவல்' தந்த பெரியார் 'படித்தால் புலவர் படிப்பு தான்' என நான் காட்டிய உறுதிக்கு அப்பாவின் ஒத்துழைப்பு மெதுவாகக் கிடைத்தது. கனவு நிறைவேறித் திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் வகுப்பு மாணவராகிவிட்டேன். கல்லூரியில் அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா விற்குத் தந்தைபெரியாரை அழைத்தோம்; வர இசைந்தார்.

23-9-1972ஆம் நாள் பிற்பகல் எங்கள் திருவை யாறு அரசர் கல்லூரிக்கு வந்து பேசினார் பெரியார். அதேநாள் இரவு திருவையாறு பகுத்தறிவாளர் கழகப் பொதுக்கூட்டத்திலும் பேசினார்.

அரசர்கல்லூரி விழாவில் பேசியபோது , எங்கள் கருத்திற்கு எதிர்நிலைபோல் பேசிவிட்டார். பேச்சிலும் நடப்பிலும் தனித்தமிழ் உணர்ச்சிக்கு வலிமையூட்டும் மாணவர் இயக்கமாக நாங்கள் செயற்பட்டு வந்தோம்!

தனித்தமிழையும்கலைச்சொல்முயற்சிகளையும் ஒதுக்குவது போல் பெரியாரின் அன்றைய பேச்சு அமைந்து விட்டது:

"பட்டன், கோட்டு இதுக்கெல்லாம் ஏன் தமிழைத் தேடுறீங்க? அப்படியேசொல்லிவிடவேண்டியதுதானே!" இப்படி நீண்டுசென்றது பெரியாரின் அன்றைய பேச்சு.

பெரியாரைத் தமிழ்எதிரியாகக் காட்டக் காரணம் தேடிக் கொண்டிருந்த எங்கள் கல்லூரி மாணவர் களிலும் பேராசிரியர்களிலும் சிலர், வெறும்வாய்க்கு அவல் கிடைத்ததுபோல் 'மெல்லத்' தொடங்கினர். "உங்க தலைவரு உங்களுக்கு எதிர்ப்பா பேசிட்டுப் போறாரே" என்றனர்.

## பெரியார் புகழ் பேசிய புலவர்கள்

திருவையாறு அரசர் கல்லூரி வடமொழிக் கல்வியை வழங்கிக் கொண்டிருந்தபோது, அதில் தமிழ்ப்புலவர் கல்வி தொடங்கக் காரணமாய் இருந்தது திராவிடர் இயக்கம்தான்! அந்த நன்றியுணர்வு புலவர் படித்த அனைவருக்கும் இருந்தது. அரசர் கல்லூரி தமிழ்ப் புலவர் படிப்புக்கு இடம் தந்தாலும், மாணவர் விடுதியில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் எனும் வருணாச்சிரம உணவுப்பந்திப் பாகுபாடு 1941 வரை மாற்றமின்றித் தொடர்ந்துகொண்டிருந்தது. தந்தை பெரியார் காதுக்கு இச்செய்தியை மாணவர்கள் கொண்டுசென்றனர்.

கொதிப்படைந்த பெரியார், புலவர்கல்லூரி மாணவர்கள் ஒரேபந்தியில் உணவருந்த வேண்டும் என அறிக்கை விடுத்தார்.

பெரியார் எழுப்பிய சமத்துவக் குரலால் ஊக்கம் பெற்ற மாணவர்கள் போராட்டத்தைத் தொடங்கினர். எல்லோருக்கும் ஒரே பந்தியில் உணவு உண்ண 27-1-1941ஆம் நாள் கல்லூரி நிருவாகம் சம்மதித்தது. சூத்திர மாணவர்களோடு ஒரே பந்தியில் பிராமணாள் உட்கார்ந்து சாப்பிடுவது ஆச்சாரக் கேடு எனச் சங்காராச் சாரியார் தூபம் போட்டார்.

உசுப்பி விடப்பட்ட பார்ப்பன மாணவர்கள் ஒரே பந்தியில் உட்கார்ந்து சாப்பிட மறுத்தனர். உண்ண மறுத்த அவர்களுக்கு உணவு தர அக்கிரகாரம் ஓடிவந்தது. பார்ப்பனர்களின் வெறுப்புக்கு ஆளாக விரும்பாத அன்றைய தஞ்சை மாவட்டக் கழகப் (ஜில்லா போர்டு) பொறுப்பாளர்கள் நாடிமுத்து பிள்ளையும் கிருட்டிணசாமி வாண்டையாரும் 'சமையலுக்குத் தேவையான அனைத்தையும் சமைக்காமலேயே பார்ப்பன மாணவர்களுக்குத் தந்துவிடுவது' என முடிவெடுத்தனர்.

பிராமணர்களின் கோபத்திற்கு ஆளானால் 'பிரம்மஹத்தி தோஷம்' பிடிக்கும் எனத் தமிழர்கள் நம்பவைக்கப் பட்டிருந்தனர். சூத்திரத் தலைவர்கள் 'தோஷத்திற்கு' அஞ்சி நடுங்கிய காலம் அது!

வெட்கக் கேடான காரியம் எனத் தந்தை பெரியார் குடிஅரசு (20-11-1943) இதழில் இதனைக் கண்டித்து எழுதினார்: நமது இழிவுக்கும் தாழ்வுக்கும் நம்மவர்களே பொறுப்பாளர்கள் எனச் சினத்தை உமிழ்ந்தது பெரியாரின் கட்டுரை.

(சான்று : உலகத் தலைவர் பெரியார் வாழ்க்கை வரலாறு -2ஆம் பாகம், கி.வீரமணி, 2007, ப.132.)

அதன்பின்பே ஒரே பந்தி எனும் உறுதிக்குப் பணிந்து 'சூத்திரப்பந்தி'யில் சேர்ந்து சாப்பிட்டார்கள் பார்ப்பன மாணவர்கள்!

சாதித்திமிரை ஒழித்த பெரியாரைத் திட்டத் தொடங்கிய பார்ப்பனர்களின் செயல் இன்றும் தொடர்கிறது - எட்டப்பத் தமிழர்களின் துணையோடு! தமிழ்ப்புலவர் கல்விக்கும் சமத்துவ உணவுப்பந்திக்கும் காரணமான தந்தைபெரியாரை வரலாறு தெரிந்த எவரும் மறப்பதில்லை.

அந்த நன்றியுணர்ச்சி காரணமாகவே தமிழ்நாடு முழுவதும் பள்ளிதோறும் தமிழாசிரியர்கள் பெரியார்புகழ் பேசுவோராகவும் திராவிடர் இயக்கத்திற்குப் படைதிரட்டுவோராகவும் இருந்தனர். திராவிடர் இயக்க வளர்ச்சிக்குக் காரணமானவர்கள் தமிழ்ப்புலவர்களே என 1976இல் கல்கண்டு இதழில் தமிழ்வாணன் எழுதக் காரணம் இந்தப் பின்னணிதான்! தமிழ்ப்புலவர்களைக் கைது செய்தால் திராவிட இயக்க வளர்ச்சியைத் தடுத்துவிடலாம் எனவும் அதே கட்டுரையில் தமிழ்வாணன் அரசுக்கு அறிவுரை கூறியிருந்தார். அப்படி எழுதியபின், செல்லும் இடமெல்லாம் எதிர்ப்புக்கு ஆளாகி முடங்கிப்போனது தமிழ்வாணன் வாழ்வு!

## கசப்பும் இனிப்பும்

தமிழைத் தாங்கிய வரலாறு பெரியாருக்கு இருந்தாலும், தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் அவ்வப்போது இடித்துக்காட்டும் இயல்பு உடையவராகவே அவர் இருந்து வந்தார். அதனால், திராவிடர் கழகத்தில் ஒருபிரிவினருக்குத் தமிழ், தமிழ்ப்புலவர் என்றால் ஓர் ஏளனப் பார்வை இருக்கத்தான் செய்தது. என் தந்தையாரும் அந்தவகை! புலவர் படிப்பில் நான் சேர இணக்கம் காட்டாததற்கு, அவருக்கிருந்த அந்தப் பார்வையும் ஒரு காரணம்.

"உங்கள் மொழிக்கொள்கை எங்களுக்கு உடன்பாடில்லை" எனக் கருப்புச் சட்டை அணிந்தபடியே பெரியாரிடம் நேருக்குநேர் பேசிய புலவர்களும் அப்போது இருந்தார்கள். அதற்குச் செவிமடுக்கும் பெருந்தன்மையான இயல்பும் பெரியாரிடம் இருந்தது. புலவர் 'வை.பொன்னம்பலனார்' பெரியாரிடம் அப்படிப் பலமுறை பேசியவர். வை.பொன்னம்பலனாருக்குச் சேலம் தமிழ்ப்பேரவை சார்பில், 'தமிழ் மறவர்' பட்டம் வழங்கியவர் பெரியார். அதே '28.7.1957' ஆம் நாளில் 'திராவிட மொழிநூல் ஞாயிறு' பட்டத்தை 'ஞா.தேவநேயப் பாவாணர்' அவர்களுக்கு வழங்கியவரும் பெரியார் தாம்! விருதுப்பட்டம் வழங்கியதோடு இருவருக்கும் ஐநூறுஉரூபா பணமுடிப்பும் வழங்கி 1957இலேயே பாராட்டியவர் தந்தை பெரியார்.

பாவாணர் தம்வாழ்வில் முதன்முதல் பெற்ற பட்டம் 'திராவிட மொழிநூல் ஞாயிறு' பட்டமே! இதனை 'மொழிஞாயிறு' என 8.9.1970ஆம் நாளிலிருந்து

தென்மொழி இதழில் சுருக்கி வழங்கத் தொடங்கியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

## பெருந்தன்மைப் பெரியார்

பெரியாரின் தமிழ்ப்பார்வைக்குத் தெளிவு தரும் நிகழ்ச்சியாக அமைந்தது 30-6-1968ஆம் நாள் நிகழ்ந்த உடையார்பாளையம் செமீன்தத்தனூர் திருமண நிகழ்ச்சி ! அந்தத் திருமணத்தில்தான், தம் தமிழ்க் கொள்கையை மூவர் தீர்மானித்தால் ஏற்றுக் கொள்கிறேன் என்று அறிவித்தார் பெரியார்!

## தந்தைபெரியார் அறிவித்த அந்த மூவர் :

(1) தமிழ் மறவர் புலவர் வை.பொன்னம்பலனார்

(2) பெரியாரியல் அறிஞர் தோழர் வே.ஆனைமுத்து

(3) பேராசிரியர் புலவர் முனைவர் பொற்கோ .

பெரியார் வரலாற்றிலும் இயக்க வரலாற்றிலும் பேசப்பட வேண்டிய 'திருப்புமுனை நிகழ்ச்சி' இது. இந்நிகழ்ச்சியில் தந்தைபெரியார் ஆற்றிய சொற்பொழி வின் ஆழமும் நேர்மையும் விரிவாகக் கவனிக்கப்பட வேண்டும்.


## பெரியார் கூறிய மூவர்

30-6-1968ஆம் நாள் காலை இரு திருமணங் களை நடத்திவைக்கப் பெரியார் இசைந்திருந்தார். இரண்டுமே புலவர்கள் இல்லத் திருமணங்கள்!

தமிழ்மறவர் 'புலவர் வை.பொன்னம்பலனார்' மகள் எழிலரசி - பொன். இராசமாணிக்கம் திருமணம் முதல்நிகழ்ச்சி! அரியலூர் 'புலவர் சி.தமிழ்மணி' (இராமசாமி) வி.கமலம் திருமணம் அடுத்த நிகழ்ச்சி. (சான்று : பெரியார் ஈ.வெ.ரா பயணக் காலக் கண்ணாடி, வே.ஆனைமுத்து. 2012, ப.375)

பொன்னம்பலனார் மகள் எழிலரசி - பொன் அராசமாணிக்கம் திருமணம் 30.6.1968 காலை பெரியார் தலைமையில் செந்துறை அருகே உள்ள மருவத்தூரில் நிகழ்ந்தது. வே.ஆனைமுத்து, பொற்கோ இருவரும் வாழ்த்துரை வழங்கினர். அடுத்த தமிழ்மணி - கமலம் திருமணம் நடந்தது உடையார் பாளையம் செமீன் தத்தனூரில்! தந்தைபெரியார், வை.பொன்னம்பலனார், வே.ஆனைமுத்து முதலியோர் மூடுந்தில் சென்றதால் திருமணவீட்டிற்கு விரைவாகச் சென்றுவிட்டனர்.

வாழ்த்திப்பேசவேண்டிய பொற்கோ அவர்களுக்கு வாகனம் கிடைக்கவில்லை. நண்பர்களோடு மிதி வண்டியில் புறப்பட்டுத் திருமண வீட்டை மெதுவாகச் சென்றடைந்தார். அப்போது பெரியார் பேசத் தொடங்கிவிட்டார். இடையில் நுழைந்தால் பெரியார் பேச்சுக்கு இடையூறாகிவிடும் என எண்ணி, மணப்பந்த



லுக்குள் நுழையாமல் மிதிவண்டியில் அமர்ந்தபடி, பெரியார் பேசுவதைப் பொற்கோ கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

பொற்கோ வந்தவுடன், மேடைக்கு அழைத்து வாருங்கள் - எனக் கழகத்தோழர்களிடம் கூறிய பிறகே பெரியார் பேசத்தொடங்கியிருந்தார். தோழர்கள் அழைத்தும் உள்ளே செல்லத் தயங்கினார் பேராசிரியர். தோழர் பொற்கோ அவர்களை மேடைக்கு வருமாறு அழைக்கிறேன் என்று தந்தைபெரியாரே ஒலி பெருக்கியில் அறிவித்து விட்டார்.

புலவர் பொற்கோ அவர்கள் இப்போது பேசுவார். அவர் பேசி முடித்ததும் மீண்டும் என் பேச்சைத் தொடர்வேன் என்று பெரியார் அறிவித்ததைக் கேட்டு அனைவருக்கும் வியப்பு!

## திகைப்பும் தெளிவும்

தமிழுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் எதிராகப் பெரியார் பேசிவந்த நேரம் அது! பெரியாரைத் தமிழ் எதிரியாகக் காட்ட இனஎதிரிகள் அவற்றைப் பெரிது படுத்தி கொண்டிருந்தனர்.

மணமக்களை வாழ்த்திப் பேசத் தொடங்கிய பொற்கோ, பெரியாரை நேருக்குநேர் விரல் நீட்டிக் குற்றம் சாட்டுவதுபோல் செய்திகளை அடுத்து அடுத்து அடுக்கத் தொடங்கிவிட்டார்:

நான் தமிழ்ப்புலவன் மட்டுமல்ல; ஆங்கிலம் நன்றாகப் படித்தவன்; மொழியியலும் படித்தவன்! தமிழ் தொடர்பான அய்யா பெரியாரின் கருத்துகள் யாவும் தவறானவை. மூடத்தனமும் கடவுள் செய்தி களும் தமிழ் இலக்கியத்தில் இருப்பது போல், ஆங்கில இலக்கியங்களிலும் ஏராளமாய் இருக்கின்றன. மில்டன், சேக்சுபியர் முதலிய எவரும் இதில் விதிவிலக்கு இல்லை.

ஆங்கிலத்தைப்போற்றும் பெரியார் தமிழைத் தாழ்வாகக் கருதுவதும் பேசுவதும் தவறு!

(12-12-2017ஆம் நாள் பேராசிரியர் பொற்கோ அவர்கள் கோவை வந்திருந்தபோது, ந.கவுதமன் இரணியன் இருவரிடமும் நேரில் கூறிய செய்திகள்

இவை.)

பொற்கோ இப்படிப் பேசியதுகண்டு தந்தை பெரியார் சினம் அடைவாரோ எனத் திகைப்புடன் இருந்தது திருமணக் கூட்டம்! ஆயிரம் பேருக்குமேல் மக்கள் மாநாடுபோல் அமர்ந்திருந்தனர்.

பாதியில் நிறுத்திய பேச்சைப் பெரியார் மீண்டும் தொடர்ந்தார்:

பேராசிரியர் பொற்கோ பேசிய கருத்துகளை அப்படியே நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர் பேசிய கருத்துகளில் சிறிதும் எனக்கு முரண்பாடு இல்லை. ஆங்கில இலக்கியங்களிலும் மூடத்தனம், பக்தி இருப்பதை அவர் சொன்னார். மூடத்தனம் உள்ளது என ஆங்கில இலக்கியங்களைக் குற்றஞ்சொல்லவும் ஆராய்ச்சி செய்யவும் அங்கே அனுமதிப்பார்கள். இங்கே முடியுமா? தமிழில் அப்படியா உள்ளது?

எந்தத் தமிழ்நூலைத் தொட்டாலும் அதைப் பற்றிப் பேசாதே, ஆராயாதே என்று தடை போடு கிறார்கள். மாற்றுக் கருத்தைச் சொன்னால் புனிதம் கெட்டுவிடும் என்கிறார்கள். அதுதான் எனக்குக் கோபம்! அதனால்தான் கடுமையாகப் பேசுகிறேன்.

எனக்கு நன்றாகத் தெரியும். எனக்குப் பக்கபலமாக இருப்பவர்கள் தமிழ்ப் புலவர்கள் தான்! அவர்களால் தான் நம்இயக்கம் இந்த அளவுக்கு வளர்ந்துள்ளது. எல்லாம் தெரிந்துதான் பேசுகிறேன்.

உரிமையுள்ள இடத்தில்தானே கோபப்பட முடியும்! அதனால்தான் புலவர்கள்மீது கோபப்படுகிறேன்.

எனக்குத் துணையாக யார் இருக்கிறார்கள்? நம் கருத்தைச் சொல்ல அனாதை போல சுற்றிவருகிறேன். எனக்குத் தெரிந்ததைச் சொல்லி வருகிறேன். சரியான செய்திகளை எனக்குக் கொடுங்கள். என்னைத் திருத்திக் கொள்கிறேன்.*

தமிழைப் பற்றிய எந்தச் செய்தியாக இருந்தாலும் இந்த மூவரும் சொல்லட்டும். புலவர் பொன்னம் பலனார், ஆனைமுத்து, பொற்கோ மூவரும் சொல்வதை என் கொள்கையாக இனி ஏற்றுக்கொள்கிறேன்.

இவர்கள் மூவரையும் கொண்ட 'தமிழ் ஆராய்ச்சிக் குழு' அமைக்க விரும்புகிறேன். இவர்கள் சொல்லும் நூல்களையும் கருத்துகளையும் என் தலைமேல் சுமந்து மக்களிடம் பரப்பத் தயாராக இருக்கிறேன்.

பெரியார் பேசிய உருக்கமான பேச்சு, அரங்கத் திலிருந்த அனைவரையும் உணர்ச்சிவயப்பட வைத்தது.

## முப்பதாண்டிற்கு முன்னும்பின்னும் !

பெரியாரின் இயல்பே, தகுதியானவர்களை முன்னே நிறுத்திப் பின்னால் இருந்து செயல்படும் பெருந்தன்மைதான்! அவர் வரலாறு முழுதும் இந்த இயல்பு எதிரொலித்திருப்பதைத் தொடர்ச்சியாகப் பார்க்கலாம்.

கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து 1938இல் நிகழ்ந்தது முதலாவது மொழிப்போர்! மறைமலை அடிகளாரையும் நாவலர் ச.சோமசுந்தர பாரதியாரையும் முன்நிறுத்தித் தம்மைக் களப்பணியாளராக அப்போது காட்டிக் கொண்டவர் பெரியார்!

1968இல், முப்பதாண்டு இடைவெளிக்குப் பின்னும் பெரியாரின் பணிவும் பெருந்தன்மையும் மாறவில்லை. 1938இல் இருவரை முன்னிறுதியது போல், தமக்கு மிக இளைய மூவரை 1968இல் முன்நிறுத்திப் பேசினார் பெரியார்.

மொழித்துறையில் எனக்கு வழி காட்டுங்கள்' எனத் தத்தனூர் மணவிழா மேடையில் வெளிப்படை யாகவே அறிவித்தார்.

மூவரில் இருவரான வை.பொன்னம்பலனாரும் வே.ஆனைமுத்தும் காலத்தில் கரைந்துவிட்டனர். பேராசிரியர் பொற்கோ (பொன்.கோதண்டராமன்) இன்று நம்மோடு இருக்கின்றார். பெரியார் பின்பற்றிய நடைமுறைகளும் அவர் வாழ்ந்துகாட்டிய வழிமுறை களும் தொடர்ந்து நினைவுகூரப்பட வேண்டும். அப் போதுதான், பெரியார் வெல்வார்; பெரியாரியல் வெல்லும்.

■

### இசுலாமியர் உள்ஒதுக்கீடு குறித்த பயில்ரங்கம்

**4.8.2022 அன்னு SDBI கட்சியினர் தங்கள் கட்சியின் முதன்மையானவர்களுக்கு திருவல்லிக்கேணி, பி.எம்.மகாலில் நடத்திய முழுநாள் பயிலரங்கில் இடஒதுக்கீட வரலாறும் இசுலாமியர் இடஒதுக்கீடும் என்றத் தலைப்பில் நடத்திய பயிலரங்கில் வாலாசா வல்லவன் கலந்து கொண்டு இடஒதுக்கீடு வரலாறும் இசுலாமியர் உள்ள ஒதுக்கீடும் என்றத் தலைப்பில் பயிற்றுவித்தார்.**

### *மேற்கு வங்க அரசின் துர்கா பூசைக்கான சலுகைகள்*

**மம்தா பானர்ஜியின் மேற்கு வங்க அரசு துர்கா பூசைக் கொண்டாடுவதற்காக சமூக குழுக்களுக்கு 2018இல் ரூ. 10,000 வீதம் வழங்கியது. 18 ஆயிரம் குழுக்களுக்கு 2022 இல் ரூ.60,000 வீதம் 423 ஆயிரம் குழுமக்களுக்கு 258 கோடி செலவில்.**

- "The Hindu 5.9.2022"

# இந்தியாவுக்குத் தாரை வார்க்கப்பட்ட நெய்வேலியைத் தமிழ்நாட்டிற்கு மீட்போம்!

பொழிலன்

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் 2022 சூலை மாதத்தில் பணியில் சேர்க்கப்பட்ட 299 பொறியாளர்களுள் ஒருவர் கூடத் தமிழர் இல்லை என்பது தமிழ்நாட்டின் கட்சிகள் இயக்கங்களைப் பெரிய அளவில் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பலரும் கண்டன அறிக்கை வெளியிட்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இந்திய அரசதிகாரத்தின் கீழ் இயங்கும் பொதுத்துறை நிறுவன மான நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணி அமர்த்து கிற உரிமை தமிழ்நாட்டரசிடம் இல்லை என்பது மட்டுமல்ல பணி ஏற்கிற உரிமையைக் கூடத் தமிழர்கள் பெற்றிருக்கவில்லை. தமிழ்நாட்டில் இயங்குகிற நிலக்கரி தொழிற்சாலையில் பணி வாய்ப்பு தமிழர்களுக்கு இல்லை என்கிற கொடுமையைவிட நெய்வேலி ஊரோ, அங்கிருந்து கிடைக்கிற கனிம வளங்களோ தமிழ் நாட்டிற்கு இல்லை என்பதுதான் மிகப் பெரும் கொடுமை.

தன்னுடைய சொந்த நிலமான 620 குறுக்க (ஏக்கர்) நிலத்தை (மூன்றரை சதுர அயிர மாத்திரி (கிலோமீட்டர்) நிலக்கரித் தொழிற்சாலை அமைக்க இலவயமாகக் கொடுத்தார் திரு சம்புலிங்கம் என்பவர். அதன்பிறகு வெள்ளையாங்குப்பம், பெருமாத்தூர் உள்ளிட்ட ஏறத்தாழ 23 சிற்றூர்களிலிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு திருமுதுகுன்றம்(விருத்தாசலம்) அருகில் உள்ள புதுக்கூரைப்பேட்டையில் குடியேற்றப் பட்டனர். அவர்களுக்கெல்லாம் தகுந்த இழப்பீடும் கொடுக்கப்படவில்லை. வேலையும் கொடுக்கப்பட வில்லை.. இந்நிலையில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் கடலூர் மாவட்டத்தில் மேலும் 1320 மெகாவாட் உருவாக்கத் திறன் கொண்ட (2660 MW THERMAL POWER STATION II (2ND EXPANSION) அனல்மின் நிலையம் மற்றும் இந்த அனல்மின் நிலையத்திற்காக ஆண்டிற்கு 115 இலக்கம் கல்லெடை (டன்) பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும் வகையில் புதிய சுரங்கம் ஒன்றையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. உரூ.3755,71 கோடி செலவில் நிலக்கரி சுரங்கத் திட்டத்தையும், உரூ. 11,189.20 கோடி செலவில் அனல்மின் நிலையத் திட்டத்தையும் செயல்படுத்துவ-தற்கான ஒப்புதலை 21.07.2022 அன்று நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இயக்குநரகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிலக்கரிச் சுரங்கத் திட்டம் ஏறத்தாழ 50 சதுர அயிரமாத்திரி(50 சதுரக் கிலோமீட்டர்) பரப்பளவில் செயல்படுத்தப்படவுள்ளது. (அதாவது 4841.99 எக்டேர் நிலப்பரப்பு) அதன் ஒட்டுமொத்தப் பரப்பளவில் சின்ன நெற்குணம், கோ.ஆதனூர், பெருவரப்பூர் உள்ளிட்டு 30 சிற்றூர்கள் பாதிக்கப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் கடந்த 2018ஆம் ஆண்டு திசம்பர் மாதம் நடந்தபோது கடும் எதிர்ப்பையும் போராட்டத்தை யும் நெய்வேலி நிர்வாகம் சந்தித்தது. இத்திட்டத்தால் பாதிப்படைபவர்கள் குறித்த சமூக தாக்க ஆய்வொன்றை என்.எல்.சி. நிறுவனம் உருவாக்கிச் சுற்றுச்சூழல் இசைவுகோரி விண்ணப்பம் செய்திருந்தது. அந்த ஆய்வின் படி இச்சுரங்கத் திட்டத்தால் 11 சிற்றூர்கள் முழுமையாகவும், 19 சிற்றூர்கள் பகுதியாகவும் பாதிக்கப் படும் - என்றும், இந்தச் சுரங்கத்தால் 2,420பேர் தங்கள் நிலத்தை இழப்பார்கள்- என்றும், 6,331 பேர் தங்கள் நிலத்தையும் , வீடுகளையும் இழப்பார்கள்- என்றும், ஒட்டுமொத்தமாக 8,751 குடும்பங்கள் திட்டத் தால் பாதிப்படைவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

வெளியேற்றப்படும் சட்டத்தின் கீழ் உரிய இழப்பீடு மற்றும் மாற்று இடம் வழங்கப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்காக ஒரு குடும்பத்திற்கு 11.13 லட்சம் வீதம் மொத்தமாக 8751 குடும்பங்களுக்கு உரூ. 705 கோடி செலவிட என்.எல்.சி. திட்டமிட்டுள்ளதாக வும் கூறப்படுகிறது. ஆனால், ஏற்கனவே கையகப் படுத்திய நிலங்களுக்கு உரிய இழப்பீடோ, நில உரிமையாளர்களுக்கு வேலைவாய்ப்போ, சிற்றூர் களுக்கான கட்டமைப்பு ஏந்துகளோ எதையும் இதுவரை முறையாக என்.எல்.சி. நிறுவனம் வழங்கவில்லை என்பதை அறியும் போது என். எல். சி. நிறுவனத்தின் கூற்றை எவரும் நம்பமுடியாது. அதேபோல் கடந்த ஐந்-தாறு ஆண்டில் மட்டுமே நெய்வேலியில் 19 முறைகள் அளவில் நேர்ச்சிகள்(விபத்துகள்) நடந்து எண்ணற்ற ஒப்பந்தத் தொழிலாளர்கள் இறந்து போயிருக்கின்றனர். அதற்கான ஓரளவு இழப்பீடுகளைக்கூடப் போராடித் தான் பெற முடிந்திருக்கிறது. 1956ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்தின் இன்றைய ( 2020



ஆண்டின்) சொத்து மதிப்பு 54,488.13 கோடி என்றும், வருமானம் உரு. 8,672.84 கோடி

(2017) என்றும், ஆண்டு மிகை (Profit) வருமானம் 2,368.81 கோடி (2017) என்றும் நிர்வாகமே அறிவித்துள்ளது. பணியாளர் 12874 (30.09.2019) என்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.. இங்குள்ள அனல் மின் நிலையத்தின் மின் உருவாக்கத் திறன் ஏறத்தாழ 5200 மெகாவாட். ஆனால், இதில் தமிழகத்திற்கு 30 விழுக்காடு, ஆந்திராவிற்கு 19 விழுக்காடு, கர்நாடகத்திற்கு 14 விழுக்காடு, கேரளா விற்கு 10 விழுக்காடு, புதுச்சேரிக்கு 5 விழுக்காடு, இந்திய மின்தொகுப்புக்கு 15 விழுக்காடு. மொத்தத்தில், மற்ற தென்மாநிலங்களுக்கும், இந்திய அரசுக்கும் சேர்த்து மொத்தம் 63 விழுக்காடு கொடுக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்திற்கு வெறும் 30 விழுக்காடு மட்டும்-தான் கிடைக்கிறது. தமிழகம் இந்த மின்சாரத்தையும் விலைகொடுத்துத்தான் வாங்குகிறது.

இந்தக் கொடுமை இப்படி இருக்க, நெய்வேலியில் எடுக்கப்படும் பழுப்பு நிலக்கரிக்கான உரிமைத் தொகை (இராயல்டி)யும் சரிவர இந்திய அரசால் கொடுக்கப்படுவதில்லை. நிலக்கரியின் கல்லெடை (டன்) யின் விலை மதிப்பு உரு. 3,655(2018) என்றிருக்க தமிழ்நாடு அரசின் தொடர்ந்த வலியுறுத்தலில் ஒரு கல்லெடைக்கு (டன்னுக்கு) 1990 ஆண்டு முதல் உரு. 2.50 மட்டுமே உரிமைத் தொகையாக இந்திய அரசு கொடுத்தது. அதன் பிறகு 1994 ஆண்டு முதல் ஒரு கல்லெடைக்கு (டன்னுக்கு) உரு. 50 கொடுப்பதாகப் பதிவு உள்ளது. ஆனால் குசராத்திலிருந்து எடுக்கப்படும் கன்னெய்க் (பெட்ரோலுக்)கும், அசாமில் எடுக்கப்படும் கன்னெய்க் (பெட்ரோலுக்)கும் 15 விழுக்காடு உரிமைத் தொகையை (இராயல்டியை) அந்தந்த அரசுகள் பெற்றுக்கொள்கின்றன.

குசராத்து, அசாம் கன்னெய்க்கு உரிமைத் தொகை அளிக்கப்படுவது போல் தமிழ்நாட்டிலிருந்து எடுத்துச்செல்லும் நிலக்கரிக்குக் குறைந்த அளவான 15 விழுக்காடு மதிப்புத் தொகையை 1956 முதல் பெற்றாலே இந்தியச் சுரண்டல் அரசு தமிழ்நாட்டிற்குப் பல இலக்கம் கோடிகளைத் தர வேண்டியிருக்கும். ஆக, தமிழ்நாட்டின் நெய்வேலியிலிருந்து மட்டுமே இந்திய அரசு பன்னூறாயிரம் இலக்கம் கோடிகள் மதிப்பளவில் நிலக்கரியைச் சூறையாடிக் கொள்ளையடித்துச் சென்று கொண்டிருக்கிறது. யார் சொத்தை யார் கொள்ளை யடிப்பது? இந்த நிலக்கரிக் கொள்ளை நெய்வேலியோடு நின்று விடப் போவதில்லை. செயங்கொண்டம் வழியாக நீளப் போகிறது..

தமிழ்நாட்டின் கனிம வளங்களும், கடல் வளங்களும், காட்டு வளங்களும், தொழில் வளங்களும் இந்திய அரசால் சூறையாடப்படுவதிலிருந்து, வணிக உரிமைகளும், கல்வி உரிமைகளும், சாலை வழியாகச் செல்கிற உரிமைகளும் உள்ளிட்ட எண்ணற்ற உரிமைகள் பறிக்கப்படுகிற கொடுமைகளிலிருந்து மீள வேண்டுமானால் தமிழ்நாட்டளவில் அவற்றைத் தீர்மானிக்கிற உரிமையைத் தமிழ்நாடு அரசு பெற்றாக வேண்டும். இழந்திருக்கிற ஒவ்வொரு உரிமையையும் நாம் போராடிப் பெற்றாக வேண்டும். அதிகார உரிமையை இந்திய ஆட்சியர்களிடம் கொடுத்து விட்டு. தமிழர்களுக்கு வேலை கொடு, என்றளவில் மட்டும் கெஞ்சிக் கொண்டிருப்பது தமிழர்களின் உரிமையை மீட்காது. தமிழ்நாட்டிற்குள் பன்னாட்டு முதலைகளும், அம்பானி, அதானி உள்ளிட்ட பனியா கும்பல்களும் நுழைந்து தொழில் நடத்துவதும்.. அவர்களிடம் தமிழர்களுக்கு வேலை கொடு என்றளவில் மட்டும் நாம் கோரிக்கை வைப்பதும் எப்படித் தமிழர்களுக்கு, தமிழ்நாட்டிற்கு உரிமையைத் தந்துவிடாதோ, அப்படி-யே, நம் தமிழ்நாட்டிற்குச் சொந்தமான நெய்வேலியை இந்தியப் பார்ப்பனியக் கயவாளிகளிடம் இழந்துவிட்டு, அங்குப் பணியாளர்களாய்த் தமிழரை அமர்த்து என்கிற கோரிக்கை மட்டுமே தமிழர்களுக்கு உரிமை களைத் தந்துவிடாது.. தெரிந்தோ தெரியாமலோ கடந்த காலங்களில் நாம் இழந்துவிட்ட… நம்மிடமிருந்து ஏமாற்றிப் பறிக்கப்பட்டுவிட்ட… நெய்வேலியை… அதன் அரசதிகார உரிமையைத் தமிழ்நாடு மீட்டாக வேண்டும்.

நெய்வேலியைத் தமிழ்நாட்டிற்கு மீட்போம் எனும் முழக்கத்தை வலுப்படுத்தவேண்டுவது காலத்தின் கடமையாகிறது. கச்சத்தீவை இலங்கை அரசிடமிருந்து திரும்பப்பெற வேண்டும் என்பதை விட இந்திய முதலை வாயில் மாட்டிக் கிடக்கிற நெய்வேலியை மீட்டாக வேண்டுவது மிகவும் கட்ட-ாயம் என்பதை உணரவேண்டும். நெய்வேலியைக் களவாடி வைத்திருக்கும் இந்திய அதிகாரத்தை அடிசாய்க்கத் தமிழ்நாட்டின் கட்சிகள், இயக்கங்கள் எல்லாம் ஒருங்கிணைந்து முழங்கியாக வேண்டும். இந்தியாவுக்குத் தாரை வார்க்கப்பட்ட நெய்வேலியைத்

தமிழ்நாட்டிற்கு மீட்போம்! - என்பது இன்றைய முதன்மை முழக்கமாகக் கடலூர், அரியலூர், மயிலாடு துறை மாவட்டங்களில் போர் முழக்கமாக எழுப்பப் பட்டாக வேண்டும் என்பது அந்த மாவட்டங்களின் மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்காரிய, தமிழ்த் தேசியக் கட்சிகளின், இயக்கங்களின் முதற் பெரும் கடமையாகும்.

■

# ஸ்ரீமதி மரணத்திற்கு நீதி வேண்டும்

பொழிலன்

கடலூர் மாவட்டம் பெரிய நெசலூர் கிராமத்தைச் சேர்ந்த இராமலிங்கம் - செல்வி இணையரின் மூத்த மகள் ஸ்ரீமதி கள்ளக்குறிச்சிக்கு அருகே உள்ள கனியாமூர் 'ஸ்ரீ சக்தி இண்டர்நேஷனல்' உண்டு உறைவிடப் பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்து வந்தார்.

13.07.2022 அன்று காலை 6.30 மணிக்கு ' உங்கள் மகள் மூன்றாவது மாடியில் இருந்து விழுந்து விட்டார். மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கிறோம்' என்று பள்ளி நிர்வாகத்தினர் ஸ்ரீ மதியின் தாய் செல்விக்கு அவர்களுக்குத் தொலைபேசி கூறிள்ளனர். அங்கு சென்று பார்த்தபோது மாணவி இறந்த பிறகே மருத்துவமனைக்கும் கொண்டு வரப்பட்டார் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

தன் மகளின் மரணத்தில் அய்யம் அடைந்த செல்வி, உறவினர்கள் மற்றும் இந்திய சனநாயக வாலிபர் சங்கத்தினர் 4 நாள்கள் தொடர் போராட்டங் களை நடத்தியுள்ளனர்.

17.07.2022 அன்று பெருந்திரளாக பொது மக்களும் முற்போக்கு அமைப்பினரும் மிகப்பெரியப் போராட்டத்தை நடத்தினர். அப்போது சிலர் பள்ளிப் பேருந்துகளை எரித்தும் பள்ளியினுள் சென்று கணினி உள்ளிட்ட பொருள்களை அடித்து நொறுக்கினர். ஒரு சிலர் மாணவர்களின் கான்றுகள் முதலியவற்றைத் தீயிட்டு எரித்தனர் என்று கூறப்படுகிறது.

இந்த நிகழ்வு நடைபெறுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு, தமிழ்நாட்டு அரசின் காவல் துறைத் தலைவர் சைலேந்திரபாபு பள்ளி நிர்வாகத்தின் மீது எந்தத் தவறும் இல்லை என்று ஊடங்களுக்கு பேட்டி அளித்தார். மிகப்பெரும் போராட்டம் நடைபெற்ற பிறகு பள்ளியின் தாளாளர் இரவிக்குமார், பள்ளியின் செயல-ாளர் சாந்தி, பள்ளி முதல்வர் சிவசங்கரன், வேதியியல் ஆசிரியை ஹரிப்பிரியா, கணித ஆசிரியை கீர்த்திகா ஆகியோரை சி.பி.சி.ஐ.டி.காவல்துறையினர் கைது செய்தனர்.

மாநில குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் சரசுவதி ரங்கசாமி அவர்கள் 21.07.2022 அன்று ஆய்வு மேற்கொண்டார். "விடுதி முறையான அனுமதியின்றி நடத்தப்பட்டது. இது தண்டனைக்குரிய குற்றம்; இது போன்று நடத்தக் கூடாது" என்று கூறினார். "விடுதி முறையான அனுமதி பெற்றிருந் தால், விடுதி காவலர், பெண் காப்பளார் உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டு, விதிமுறைகள் பின்றபற்றப்பட்டு விடுதிக் கென இயங்கியிருக்கும். பள்ளி நிர்வாகம் விடுதிக்கு முறையான அனுமதி பெறாமல் இயங்கியதை காவல் துறை புகாராக அளித்து முதல் தகவல் அறிக்கையில் திருத்தம் செய்ய பரிந்துரைப்போம்" என்றார். (இந்து தமிழ் 22.7.22)



தேசியக் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையர் பிரியங்க்கனூங்கோ 27.07.2022 அன்று 7 பேர் கொண்ட குழுவினருடன் வந்து ஆய்வு நடத்தினார். காவல்துறை விசாரணை அதிகாரியின் கவனக்குறைவும் இருந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

காவல்துறையின் விசாரணையின் தொடக்கத்தில் சில குறைபாடுகள் இருந்துள்ளதை அவர் சுட்டிக் காட்டி யுள்ளார். விடுதி அனுமதியின்றி இயங்கி வருவதையும், விடுதியில் தங்கியுள்ள மாணவர்களிடம் அவர்களின் தேவைகள் குறித்து ஆய்வு நடத்தப்படவில்லை என்றும் குற்றம்சாட்டியுள்ளனர். ஸ்ரீமதியின் இல்லத்திற்குச் சென்று, அவரின் பெற்றோரிடம் விசாரனை நடத்தி விட்டுச் சென்றனர் (The Hindu 28.7.22)

உளவுத்துறையினர் இந்த பெரும் கலவரங் களுக்குக் அந்தப் பள்ளியைச் சுற்றியுள்ள கிராமங்



களைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டவர்கள் தான் காரணம் என்று கூறியதால் காவல்துறையினர் பள்ளியின் சுற்றுப் புறங்களில் கிராமங்களில் உள்ள ஏராளமான இளைஞர்களை கைது செய்தனர். இந்தச் செயலைக் கண்டித்தும்மாணவியின்குடும்பத்திற்குநீதிவேண்டியும் வளவன் முனைவர் தொல். திருமா அவர்கள் தலைமையில் வி.சி.க.சார்பில் கள்ளக்குறிச்சியில் ஆர்பாட்டம் நடத்தப்பட்டது.

மாணவியின் தந்தை இராமலிங்கம் உயர்நீதி மன்றத்தில் மகள் கொலைச் செய்யபட்டள்ளார் என்று கூறி நீதி மன்றத்தில் வாக்குத் தொடர்ந்தார். உடற்வறு ஆய்வில் தங்கள் தரப்பு மருத்துவரும் இடம் பெற வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார் அவ் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 10 நாட்களாக மாணவின் உடல் கள்ளக்குறிச்சி மருத்துவ மனை மருத்துவக் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்தது.

முதல் இரண்டு உடற்கூறு ஆய்வுகளிலும் சில மாறுவேறுபாடுகள் உள்ளதாக கூறுகிறார்கள். எனவே, ஜிப்மர் மருத்துவமனையின் உடற்கூறு ஆய்வை வழங்குமாறுவழங்குரைஞர்சங்கரசுப்புவேண்டுகோள் விடுத்தபோது, அரசு வழக்குரைஞரே ‘‘அதை கொடுக்க வேண்டாம். ஸ்ரீமதியின் பெற்றோரிடம் முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்துள்ளார் வழக்கு விசாரனை பல கோணங்களில் நடத்தப்பட்டு நன்றாக சென்றுக் கொண்டிருக்கிறது’’ என்று கூறித்தடுவிட்டார். ஆகையால் நீதிபதி ஜிப்மர் உடற்கூறு ஆய்வை வழங்க உத்தரவிடவில்லை.

பள்ளியின் நிர்வாகிகள் 5 பேரையும் 3 நாள் சி.பி.சி.ஐ.டி. காவலில் எடுத்து விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். ஒரு நாள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் அரை நாளிலேயே விசாரணை முடிக்கப்பட்டு நீதி மன்றத்தில் நேர் நிறுத்தி சிறைக்கு அனுப்பி விட்டனர்.

பள்ளியின் நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் உள்பட 5 பேரின் பிணை மனுவை விசாரித்த உயர்நீதி மன்ற நீதிபதி இளந்திரையன் அவர்கள், ஸ்ரீ மதியின் மரணம் தற்கொலை என்றும் பள்ளி நிர்வாகிகளுக்கும் மரணத்திற்கும் தொடர்பில்லை என்று கூறிப் பிணை வழங்கினார்.

வழக்கு விசாரணையே தொடங்காத நிலையில் நீதிபதி இப்படி ஒரு கருத்தைக் கூறியிருப்பது தீர்ப்பின் போக்கையே திசைத் திருப்புவதாக உள்ளது. இந்த நீதிபதியிடமிருந்து இந்த வழக்கை வேறு நீதிபதிக்கு மாற்ற வேண்டும் என்று பலரும் கோரிக்கை வைத்துள்ளனர். சி.பி.அய்! எம். பொதுச் செயலாளர் கே.பாலகிருட்டிணன் அவர்கள் இக்கோரிக்கையாக வலிமையாக முன்வைத்துள்ளார்.

மற்றொரு உயர்நீதி மன்ற நீதிபதி என்.சதிஷ்குமார், ஸ்ரீமதி மரணம் தொடர்பாக கருத்து தெரிவித்த வழக்குரைகள் மீது பார்கவுன்சில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், வளையொலி, வாட்ச்ஆப், டுவிட்டர் உள்ளவற்றை முடக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டு கருத்துரிமையை பறித்துள்ளார். நீதிமன்றத்தின் போக்கு அத்துமீறாலாகவே அதைக் கண்டிக்க வேண்டியு உள்ளது.

மக்கள் சிவில் உரிமைக்கழகத்தின் உண்மை அறியும் குழு அங்கு செய்ய நடத்தியபின் ஸ்ரீமதியின் மரணத்தை கொலை வழக்கு என்ற தன்மையில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது. இந்த வழக்கு முடியும் வரை ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் ஒரு குழு அமைத்து அந்தப் பள்ளி நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளது. அந்தப் பள்ளியின் காவலர், மாணவியின் உடன் தங்கியிருந்தவர்கள், பள்ளித் தாளாளரின் இரண்டு மகன்கள் ஆகியோரையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தள்ளது.

போராட்டத்தில் கலந்து கொண்ட அப்பாவிகடிளை விடுதலைச் செய்யவேண்டும், போராட்டத்தை தடுக்கத் தவறிய அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைததுள்ளது. (The Hindu 21.8.2022)

பள்ளியின் தாளாளர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்தவர்; அங்கு பலமுறை ஆர்.எஸ்.எஸ். முகாம்கள் நடந்துள்ளன. எனவே ஒன்றிய அரசின் அழுத்தம் காரணமாகவே காவல்துறை இந்த வழக்கில் தொடக்கம் முதலே மெத்தனம் காட்டி வருகிறது எனக் கருதவேண்யுள்ளது.

மாணவியின்மரணம்அய்யத்திற்கு இடமளிக்கும் வகையில் உள்ளதால் தொடர்புடையவர்கள் மீது தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்டிட வேண்டும் என்பதே பெரும்பாலன வர்களின் கோரிக்கை ஆகும்.

■

# பெரியாரின் கொள்கைக் களவீரர் அரியலூர் ஆ.செ.தங்கவேலு

சா.குப்பன்

''சாதி களைந்திட்ட ஏரி - நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே - நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்''

என்ற புரட்சிக் கவிஞரின் பாடலுக்கு இலக்கணமாக அரியலூர் ஆ.செ.தங்கவேலு, தன் மூத்த மகள் தைரியத்திற்கும் தான் பிறந்த சாதி அல்லாத உடையார் (நத்தமர்) சாதியில் பிறந்தவரான ந.கோவிந்தசாமிக்கும் 9.7.1961-யில் வாழ்க்கை இணை ஏற்பு நிகழ்ச்சியை நடத்தினார். மணமக்களை மலர் மாலையை மாற்றிக் கொண்டு, மேதிரம் மட்டும் அணிவித்துக் கொண்டனர்; தாலி அணிதல் இல்லை; மணமக்கள் வடக்குமுகமாக அமர்ந்தவாறு நிகழ்ச்சி நடைபெற்றது. தன் மகன் அறிவுடை நம்பிக்கும் தான் பிறந்த சாதி அல்லாத, திருச்சியைச் சார்ந்த நாடார் சாதியில் பிறந்த கோவிந்த சாமி-மங்கையர்க்கரசி இணையரின் மகள் குணசந்தரிக்கும் 10.12.1972இல் அரியலூர் சக்தி திரை யரங்கத்தில் தோழர் வே.ஆனைமுத்து தலைமையில் வாழ்க்கை இணை ஏற்பு விழாவை நடத்தினார். இந்நிகழ்விலும் தாலி அணிவித்தல் விலக்கி மோதிரம் அணிவித்ததுடன் நிறைவுபெற்றது. நிகழ்வில் மணமக்கள் தெற்கு நோக்கி அமர்ந்து அமர்ந்திருந்தனர். மற்றொரு மகள் அவ்வையாருக்கும் முத்தரையர் சாதியில் பிறந்த தம்புரான் என்பவருக்கும் தம் இல்லத்திலேயே சாதிமறுப்புத் திருமணம் செய்து வைத்தார். நடுமகள் நாகமணிக்கு, மகள் விருப்பப்படி பெரியார் தலைமையில் திருமணம் நடந்தது.

தம் மக்கள் நால்வரில் மூவருக்கு மூன்று வேறுவேறு சாதியில் பிறந்தவர்களை வாழ்விணை யராக்கினார், கொள்கை வீரர் ஆ.செ.தங்கவேலு.

ஆ.செ.தங்கவேலு பிறந்து வளர்ந்த சிற்றூரான இலந்தங்குழி அரியலூருக்கு மேற்கில் மூன்றுகல் தொலைவில் அமைந்துள்ளது. அவ்வூரில், 1956இல் பெரியாரை அழைத்துப் பொதுக்கூட்டத்தில் உரையாற்ற ஏற்பாடு செய்தார். அந்த ஊருக்கு மகிழுந்து வர சாலை வசதிசரிவரஇல்லை. பக்கத்து ஊரான தொண்டப்பாடியில் இருந்து இலந்தங்குழி வரை 3 கி.மீ. நீளப் பாதையின் இருபுறமும் மண்ணை வெட்டிப்போட்டு, பாதையைச் சீர்படுத்தி, பெரியார் வந்து உரையாற்றச் செய்தார். ஆ.செ.தங்கவேலுவின் இச்செயல் அவ்வூர் மக்களுக்கு மறுமலர்ச்சிச் சிந்தனையை ஏற்படுத்தியது.



## இளமைப் பருவம்

இலந்தங்குழி எனும் சிற்றூரில், ஒரு வேளாண் குடும்பத்தில் செல்லமுத்து, சிவபாக்கியம் வாழ்விணை யரின் மூத்த மகனாக 20.4.1921 பிறந்தார். அவ்வூர் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படிக்க, எழுதக் கற்றார். பின் சிறிது காலம் ஆடுகள், மாடுகள் மேய்த்தார். சிற்றூரிலிருந்து பிழைப்புத் தேடிச் சென்னை செல்லும் சிலரைப் பார்த்து சிறுவயதிலேயே இவரும் சென்னை சென்றார். சென்னை, கொத்தவால் சாவடியில் காய்கறிக் கடைகளில் மூட்டைகளை இறக்குதல் ஏற்றுதல் போன்ற கூலி வேலைச் செய்து, ஊரிலுள்ள வீட்டாருக்குப் பணம் அனுப்பி வந்தார். சிறிது காலத்திலேயே சென்னையிலிருந்து இலந்தங்குழிக்கு திரும்பி வந்து, தன் தந்தை செய்து வந்த, ஊர் அம்மன் கோயில் பூசாரி வேலையை மேற்கொண்டார். சிவப்பானத் தோற்றமும்,

நீண்ட தலைமுடியும், நல்ல குரல்வளமும் இருந்ததால், அவ்வூரில் நடைபெற்ற நாடகங்களில் நடித்தார். சிறுதொண்டர் நாடகத்தில் சிறுதொண்டரின் மனைவி யாகவும் அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதி வேடத்திலும் நடித்து, ஊர் மக்களிடம் நற்பெயர் ஈட்டினார். பின்னர் பூசாரி வேலையை விட்டு, ஒரு பெட்டிக் கடையும் தேநீர்க் கடையும் வைத்தார்.

## தன்மான இயக்கப் பணி

1948 முதல் தோழர் வே.ஆனைமுத்து தொடர்பு ஏற்பட்டதால், திராவிடர் கழகத்திலும் அதன் கொள்கைகளிலும் ஈடுபாடு காட்டினார். 1950இல் குன்னம் ஊரில் ஆசிரியர் ந.கணபதி அவர்கள் முயற்சியில் நடந்த திராவிடர் கழக மாநட்டில் வே.ஆனைமுத்துவுடன் ஆ.செ.தங்கவேலுவும் கலந்து கொண்டு பெரியார் உடை ரயைக் கேட்டார். அப்போது முதல் சுயமரியாதைக் கொள்கைகளைப் பின்பற்றுவதில் உறுதியுடன் வாழ்ந்தார்.

பட்டியல் வகுப்புத் தோழர்கள் ஊருக்குள் மாட்டு வண்டி ஓட்டிக்கொண்டு வந்தால், வண்டியில் அமராமல் இறங்கிநடந்துசெல்வதுவாக்கமாகஇருந்தது. தங்கவேலு அவர்களை வண்டியில் அமர்ந்து ஓட்டிச்செல்லச் செய்தார். பெரியாரின் 77ஆம் பிறந்த நாளை ஒட்டி, 24.9.1955 அன்று இலந்தங்குழித் தெரு ஓரங்களில் இரண்டு கல் தூண்களை நடச்செய்து, அதன் உச்சியில் கண்ணாடி கூண்டமைத்து, அதனுள் மண்ணென் ணெய்விளக்குகள்ஏற்றிவைத்துஊர்ஒளிபெறச்செய்தார். இலந்தங்குழியில் 1948இல் தொடக்கப் பள்ளித் தொடங்குவதற்கு ஆவண செய்தார். இச்செயல்களால் தோழர் தங்கவேலுவுக்கு ஊரில் நல்லபெயர் ஏற்பட்டது.

ஊரில் இவருக்கு இருந்த நற்பெயர் காரணமாக இலந்தங்குழி ஊர்மக்கள் தண்ணீர் எடுக்கச் சென்று வரும் பாதைக்கு இடையூறாக இருந்த சிறிய கோவிலான இளையபெருமாள் கோவிலை ஊர்மக்களைக் கொண்டு இடித்தகற்றச் செய்து, பாதையை சீர்செய்தார்.

பெரம்பலூர் வட்டத்தில் திராவிடர் கழகச் செயலாளராக 1949 முதல் செயல்பட்டு, பல ஊர்களில் பெரியார் பிறந்த நாள் பொதுக்கூட்டங்கள் ஆண்டு தோறும் நடத்தப்பட காரணமாக இருந்தார். 21.11.1957இல் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சாதியமைப்பைப் பாதுகாக்கும் பிரிவுகளின் நகலை எரித்துவிட்டு, திராவிடர் கழகத்தின் முதன்மைத் தோழர்கள் பலரும் சிறையில் இருந்து காலத்தில் 20 பொதுக்கூட்டங்கள் நடத்தி, எழுச்சி குறையாமல் இருக்கச் செய்தார். ஆ.செ. தங்கவேலு நடத்திய பொதுக்கூட்ட வரவு - செலவினை அடுத்த கூட்டத் துண்டறிக்கையில் அச்சிட்ட அளிப்பது அவர் வழக்கம்.

## கூட்டச் செலவு

| | |
|---|---|
| பேச்சாளர் எஸ்.டி.விவேகி அவர்களுக்கு | உரு. 10/- |
| துண்டறிக்கை அச்சிட | உரு. 2/- |
| ஒலிபெருக்கி அமைக்க | உரு. 5/- |
| பெட்ரோமாக்சு விளக்கு வாடகை | உரு. 1 /- |
| ஆக ஒரு கூட்டச் செலவு | உரு. 18/- |

சட்ட எரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு, திருச்சி சிறையில் இருந்தத் தோழர்களைப் பார்த்து விட்டு வருவதற்காக அரியலூர் இரயில் நிலையத்திற்கு வரும் அரியலூர் வட்டாரத் தி.க.தோழர்களின் குடும்பத் தினருக்கு ஆ.செ.தங்கவேலு இல்லமே தங்குமிடமாக அமைந்தது. அரியலூர் ஆ.செ.தங்கவேலு ஆனார்.

இலந்தங்குழியில் 5ஆம் வகுப்புக்கு மேல் படிக்கப் பள்ளி இல்லாததால் தன் மகனை செந்துறையில் பள்ளியில் மாணவர் விடுதியில் சேர்த்துப் படித்திடச் செய்திடுவதற்கு, செந்துறைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்தத் தமிழ் மறவர் வை.பொன்னம்பலனார் உதவியை நாடிச்சென்றார். பொன்னம்பலனாரை சந்தித்ததும், அவர் கேட்ட முதல் வினா? 'மகன் பெயர் என்ன?' விடை : ஜெயராஜ் 'இது வடமொழிப் பெயராயிற்றே' என அப்போதே சிறுவன் ஜெயராஜ் என்ற பெயரை 'அறிவுடைநம்பி' என மாற்றினார். செந்துறையில் படிக்கவைக்க மாணவர் விடுதியில் இடம் கிடைக்காததால், அறிவுடைநம்பியை அரியலூர் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார். அன்றாடம் இலந்தங்குழியிலிருந்து அரியலூருக்கு நடந்து சென்று வருதல் துன்பம் எனக் கருதி, 1956இல் தங்கவேலு அரியலூருக்குக் குடிபெயர்ந்தார். அரியலூர் தொடர் வண்டி நிலையத்தை ஒட்டிய இடத்தில் ''பெரியார் உணவு விடுதி'' தொடங்கி, நடத்தினார். அவ்விடம் பெரியார் தொண்டர்கள் கூடுமிடமாகவும் அமைந்தது. கடைவீதியில் ''பெரியார் ஜவுளி ஸ்டோர்'' தொடங்கி நடத்தினார். பின்னர் தன் மகனை நடத்தச் செய்தார்.

தம் துணிக்கடையில் விற்பனை செய்த கைப்பை களில் ''சாதி ஒழிய சமத்துவம் வளர, கடவுளை மற; மனிதனை நினை! சுயமரியாதை வாழ்வே, சுகவாழ்வு!'' - தந்தை பெரியார் என்றும் ''சாதி ஒழிய, சமத்துவம் வளர தமிழ்நாடு தமிழருக்கே! சுயமரியாதை வாழ்வே, சுகவாழ்வு!'' பெரியார் ஜவுளி ஸ்டோர், அரியலூர் என்றும் அச்சிட்டு வழங்கினார்.

தனது மைத்துனர், தம்பி திருமணங்களை புரோகிதமில்லாமல் நடத்தினார். தன் ஊரில் இரண்டு கைம்பெண் மறுமணங்களை முன்னின்று நடத்தினார். 1957 முதல் இலந்தங்குழியில் 90 விழுக்காடு மக்கள்

தங்கள் வீட்டு நிகழ்ச்சிகளை புரோகித மறுப்பு நிகழ்ச்சி களாக நடத்திடக் காரணராக விளங்கினார் ஆ.செ.த.

பாடகர், நடிகர், கவிஞர், பேச்சாளர், செயலாளர், உடலுழைப்பதில் - பணம் செலவுச் செய்வதில் சுணக்கம் காட்டாத மனிதர்; அரியலூரில் சிறிய வீடு, சிறிய கடை, எளிய தோற்றம், எளிய வாழ்வு, ஓய்வறியாத் தொண்டு, சிவந்த மேனி, கருப்புச்சட்டை, சிவப்புத் துண்டு! இவர் தான் ஆ.செ.தங்கவேலு! பெரியாரின் கொள்கை களைப் புரிந்துணர்ந்து, அதன்படி வளர்ந்து, வாழ்ந்து காட்டியவர்; வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் ஆ.செ.தங்கவேலு!

## தி.க.வில் ஆ.செ.த. பங்கேற்ற முதன்மை நிகழ்வுகள் சில

1. 1952 ஆகஸ்டு அரியலூரில் அஞ்சலகம், தொடர் வண்டி நிலையங்களில் இருந்த இந்தி எழுத்து களை தார்பூசி அழிப்பு.

2. 1953 இல் அல்லி நகரத்தில் பிள்ளையார் பொம்மை உடைப்புப் போராட்டம்.

3. 1954 ஏப்ரலில் பெரம்பலூரில் குலக்கல்வி எதிர்ப்பு மாநாடு நடத்தியது.

4. 1956 இல் இராமன் பட எரிப்புப் போராட்டம்.

5. 8.7.1972 இல் இலந்தங்குழியில் ‘பெரியார் அறிவு வளர்ச்சி மன்றம்’ சார்பில் பெரியார் உரை யாற்றியப் பொதுக்கூட்டம், கடவுள் மறுப்பு கல்வெட்டுத் திறப்பு, (இதுதான் முதலாவது என பெரியார் குறிப்பிட்டுள்ளார்.)

## மா.பெ.பொ.கட்சிப் பணிகள்

பெரியார் மறைவுக்குப் பின் தோழர் வே.ஆனை முத்து தலைமையில் உருவாக்கப்பட்ட பெரியார் சமஉரிமைக் கழகத்தில் இணைந்து, 3.10.1976 இல் திருச்சியில் நடந்தத் தொடக்க விழா முதல் தன் இறுதிக்காலம் வரை பிரிவுபடாதத் திருச்சி மாவட்டச் செயலாளராகப் பணியாற்றினார். தோழர் ஆ.செ.த.பங்கேற்ற முதன்மை நிகழ்வுகள் சில.

(1). 23.03.1979 இல் புதுதில்லியில் நடந்த பெரியார் நூற்றாண்டு விழாப் பேரணியின் முன் பதாகைப் பிடித்துச் சென்றார்.

(2). ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு இட ஒதுக்கீடு ஆணை பிறப்பிக்கக் கோரி 15.11.1979 இல் புதில்லியில் நடந்தப் போராட்டத்தில் பங்கேற்று மற்றத் தோழர்களுடன் கைது செய்யப்பட்டு, தில்லி-திகார் சிறையில் 15 நாள்கள் இருந்தார்.

(3). அதுவரையில்லாமல் தொழில் படிப்புகளில் சேருவதற்கு நுழைவுத் தேர்வு எழுதிட வேண்டும் என்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்நாடு அரசாணையை 12.6.1989 அன்று எரிக்கும் போராட்டத்தில் பங்கேற்றார்.

(4). தாராளமயம், தனியார்மயம், உலக மயத்திற்கு அடிகோலிய காட் (GATT) அமைப்பின் டங்கல் அறிக்கை எரிப்புப் போராட்டத்தில் 16.8.1993 அன்று பங்கேற்றார்.

(5). 26.01.1996 அன்று மண்டல் குழு பரிந்துரைப்படி இந்திய ஒன்றிய அரசுப் பணிகளில் சேர இட ஒதுக்கீடு பெறும் தகுதியிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் வளர்ந்த பிரிவினரை (கிரீமிலேயர்) விலக்கும் ஆணையை எரிக்கும் போராட்டத்தில் பங்கேற்றார்.

(6). எசனை என்ற இடத்தில் 04.02.1990 முதல் 09.02.1990 வரை 6 நாள்கள் கொள்கைப் பயிற்சி வகுப்பு நடத்திட ஆவன செய்தார். 13.05.1995 முதல் 25.05.1995 முடிய அரியலூர் அருகில் இலிங்கத்தடிமேட்டில் கொள்கைப் பயிற்சி வகுப்பு நடத்திட ஏற்பாடு செய்தார்.

## இறுதிக் காலம்

பெரியார் கொள்கையின் பெருந்தொண்டராகவும் தோழர் வே.ஆனைமுத்துவின் தோழராகவும் தொண்டராகவும் திகழ்ந்த ஆ.செ.தங்கவேலு அவர்களின் பெரியார் இயக்கப் பணிகள் பொன்விழாப் பாராட்டுக் கூட்டம் 19.06.1998 அன்று அரியலூர், ஆர்.டி.சி.திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நீரிழிவு நோயினால் மிகவும் வருந்தும் நிலை இருந்தும் இயக்கப் பணிகளைத் தொய்வில்லாமல் செய்து வந்தார். 27.09.1998 அன்று தனது 77ஆம் அகவையில் இவரது தொடர் செயற்பாட்டிலிருந்து இறுதி ஓய்வுப் பெற்றார். இவரது இறுதி ஊர்வலத்தில் “பெரியார் கொள்கை மறவர் ஆ.செ.தங்கவேலு இறுதி ஊர்வலம்” என்ற பதாகையும்,

“கடவுள இல்லாதது; மதம் பொல்லாதது;
சாதித் தேவை இல்லாதது; பெரியாரியமே சரியானது”

என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் எடுத்துச் செல்லப்பட்டது.

ஆ.செ.தங்கவேலு அவர்களின் எளிமை, கொள்கைப்பிடிப்பு, அர்ப்பணிப்பு, சோர்விலா உழைப்பு இயக்கப் பணிகளில் ஈடுபடும் தோழர்களுக்கு வழி காட்டுவன ஆகும்.

“நல்லதோர் அடையாளத்தை
நாட்டிலே காட்டீர் என்றால்
எல்லோரும் தங்கவேல் போல்
இருந்தாலே போதும் என்போம்”

என்று கவிஞர் தமிழேந்தி குறிப்பிட்டுள்ளது சாலப் பொருத்தமுடையது.

ஆ.செ.தங்கவேலு எழுதி, இசையோடு மேடையில் பாடல் ஒன்றின் சில பகுதிகள் இங்கே.

சுதந்தரமாம் சுதந்தரம்
சூதுநிறைந்த சுதந்தரம்
ஒடுக்கப்பட்ட மக்களுக்கு
உரிமையில்லா சுதந்தரம்!
சாதியை ஒழித்திடவே
சட்டம் போடாச் சுதந்திரம்
சாதித் தீயை விசிறிவிடும்
சதிநிறைந்த சுதந்தரம்!
பாடுபட்டு உழைத்து உருகும்
பாட்டாளிக்கா சுதந்தரம்?
டாடா, பிரலா, கொயாங்கா
கூட்டத்திற்கே சுதந்தரம்!

பெரியாரின் கொள்கை நெறியாளர் ஆ.செ.த. அவர்களின் வழிநடப்போம்! ■

## தமிழ்நாடு திருநாள் விழா

தமிழ்நாட்டு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் 18.07.2022 அன்று காலை ‘தமிழ்நாடு திருநாள் விழா’ கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கினார்.

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - தமிழ்நாடு நாள் உருவான வரலாறு, ஆழி செந்தில்நாதன் - மொழிவாரி மாகாணமும் தமிழ்நாட்டில் நடந்த போராட்டமும், வாலாசா வல்லவன் தமிழகத்துக்காக உயிர் கொடுத்த தியாகிகள், முனைவர் ம.இராசேந்திரன் - தாய்நாட்டுக்குப் பெயர் சூட்டிய தனயன், மருத்துவர் நா. எழிலன் - முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய நவீன தமிழ்நாடு ஆகியத் தலைப்புகளில் உரை யாற்றினர். தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் அவ்வவை ந.அருள் அனைவருக்கும் நூல்களை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் முன்னிலை வகித்தார். தமிழ் அறிஞர் பெருமக்களுக்கு சான்றிதழும், பொற்கிழியும் வழங்கப்பட்டன. நிறைவாக தமிழ்நாட்டு முதலமைச்சர் காணொலி வழியாக உரை நிகழ்த்தினார். தமிழரசு சார்பில் தமிழ்நாடு திருநாள் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

**கருத்துரிமைக் குறித்து உச்ச ஓய்வுபெற்ற நீதிபதியின் ஒப்புதல் வாக்குமூலம்**

**ஓய்வுபெற்ற உச்ச நீதி மன்ற நீதிபதி பி.என். ஸ்ரீ கிருஷ்ணா அண்மையில் அளித்த பேட்டியில் “இன்றைக்கு நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. இதை நான் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். பொதுமக்களுடன் நின்று பிரதமரை எனக்கு பிடிக்க வில்லை என்று நான் கூறினால், சிலர் என் வீட்டில் சோதனை நடத்தி, என்னை கைது செய்வர். எந்த காரணமும் சொல்லாமல் சிறையில் தள்ளிவர் நாம் இதை எதிர்க்க வேண்டும்” என்று பேசினார்.**

**தினமணி 5-9-22**

# தில்லைக் கோயிலும் தீட்சிதர் தொல்லையும்

மரு. இளமுருகு

சென்ற இதழின் அடுத்த இதழில்

11.05.1981 அன்று திரு. கே. நடராஜ குஞ்சிதா தீட்சிதர் ஒருவர் கோவிலில் பல நிதி, தங்கத் தகடுகள், தங்கக் காசுகள், தங்க நகைகள், முறைகேடுகள் நடந்ததாகக் கூறிய புகாரின் பேரில், இந்து சமய அறநிலையைத் துறையின் உதவி ஆணையர் தீட்சிதர்களிடம் கேட்டபோது, பொன் நகைகள், பொற்காசுகள் போன்றவற்றைக் காட்ட, பொது தீட்சிதர்கள் ஒரு வார கால அவகாசம் கேட்டனர். அதன் பின்னும் கணக்கு காட்ட மறுத்தனர். ஆனால், அவ்வாறு மறுத்தலைதயடுத்து, உதவி ஆணையர் கோவிலில் உள்ள அலமாரிகள் போன்ற இடங்களில் சோதனையிட்டதில், தங்கப் பொருட்கள் சிக்கியிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும், கைப்பற்றப்பட்ட தங்கப் பொருட்கள் தங்கள் குடும்பத்துக்குச் சொந்தமானது எனக் கூறி, அவற்றைப் பிரிந்து செல்ல மறுத்துவிட்டனர் பொது தீட்சிதர்கள். அதே நேரத்தில், இந்த நகைகள் யாரிடம் இருந்து பரிசாகப் பெறப்பட்டன என்பதை நிரூபிக்க முடியவில்லை. எனவே உதவி ஆணையரிடம் ரசீது எதுவும் காட்டப்படவில்லை. மேற்கண்ட தங்கப் பொருட்களை பறிமுதல் செய்த உதவி ஆணையர், 4717 கிராம் தங்கம் உருக்கி, எந்த அதிகாரிகளின் அனுமதியும் இன்றி தங்களிடம் வைத்திருப்பதை கண்டறிந்தார். இன்னும், உதவி ஆணையர், கோவில் ஆல்மிராக்களில் இருந்து கணக்கில் வராத தங்கப் பொருட்களையும் (குத்து விளக்கு) போன்ற நூற்றுக்கணக்கான வெள்ளி விளக்கு பொருட்களையும் கண்டுபிடித்தார்.

மேலும் தமிழில் தேவாரம் பாடி வழிபடும் உரிமை பற்றிய வழக்கில் திரு ப.சத்தியவேல் முருகன் மற்றும் திரு.உ.ஆறுமுகசாமி ஆகியோரை மனுதார்களாக அனுமதிப்பதில் தனி நீதிபதி தன்னிச்சையான அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

இந்த வழக்கில் திரு சுப்பிரமணியன்சாமி( இவர் ஒரு தொழில் முறை வழக்கறிஞர் அன்று) தன்னையும் ஒரு கட்சியாக மனுதாரராக இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கோரினார். அவர் தமக்கு இந்த வழக்கில் ஆர்வம் இருப்பதாகவும் ஷிரூர் மடம் பற்றிய வழக்கில் சில செய்திகள் தனக்கு; தெரியும் என்றும் வாதிட்டார். உயர் நீதிமன்ற அமர்வு அவருடைய வாதத்தை ஏற்றுக் கொண்டது. அதற்கு ஒப்புதல் அளித்தது.

ஆனால் மேல் முறையீட்டைத் தள்ளுபடி செய்துவிட்டது; தனி நீதிபதியின் தீர்ப்பை உறுதிசெய்து உத்தரவிட்டது.

தீட்சிதர்கள் மீண்டும் உச்ச நீதிமன்றம் சென்றனர்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் அந்தத் தீர்ப்புக்கு எவ்விதம் வந்தது என்பதையும் நாம் இனிக் காணலாம். அந்த வழக்கை விசாரித்த நீதியரசர்கள் திரு.பொப்படே மற்றும் சௌகான். கீழ்க்கண்டவாறு கூறினர்.

1) தீட்சிதர்கள் ஒரு தனி மதக் குழு என்பது ஏற்கனவே சட்ட ரீதியாக முடிவு செய்யப்பட்ட செய்தி . எனவே இதைப் பற்றி நாம் மீண்டும் விசாரிக்கத் தேவையில்லை இந்த சட்ட விதிக்கு ரெஸ் ஜுடிகா (சுநளதரனஉைய) என்று பெயர்..முடிந்த முடிவான உண்மைகளை நாம் மீண்டும் மீண்டும் வாதிட வேண்டியதில்லை. இந்த நிலைபாடு ஆங்கிலசாக்சொன் ஹபேடிளயஒடிே டயற சட்ட விதிகளினடி ஏற்பட்டது ஏறக்குறைய உலகமெங்கும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

1957 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு இந்து அற நிலையத்துறை சட்டத்தின் 27 விதியின் படி இந்து அற நிலையத்துறை ஆணையருக்கு கோவில் கணக்கு வழக்குகள் அதன் சொத்து விவரங்களை மேற்பார்வையிடஒரு செயல் அலுவலரை நியமிக்கும் உரிமை உண்டு என்று அரசின் தரப்பில் வாதிடப்பட்டது.

அதற்கு எதிராக தீட்சிதர்கள் தரப்பில் தாங்கள் (தீட்சிதர்கள்)ஒரு தனிமதம் சார்ந்தகுழு என்றும் அது (ஸ்மார்த்த ப்ராஹமின்ஸ்) ஸ்மார்த்த பார்ப்பனர்கள் என்ற பார்ப்பன உட்பிரிவை சேர்ந்தவர்கள் என்றும் அதனால் அவர்கள் ஒரு தனி மதக் குழுவாகக் கருதலாம் என்றும் வாதிடப்பட்டது. மத சிறுபான்மைக் குழு என்று வாதிட்டதின் மூலம் தீட்சிதர்கள் தங்கள் இந்துக்களின் ஒரு பிரிவு அல்ல என்று வாதிட்டதாகவே நாம் கருதலாம் (ஆசிரியர் குறிப்பு அது போன்றே தங்க ளால் உருவாக்கப்படாத அமைப்பாக இருந்தால் மதச் சிறுபான்மையினருக்கும் இந்த உரிமை அடிப்படை உரிமையாகாது என்றும் ஒரு உச்சநீதிமன்றத்

தீர்ப்பும் உண்டு. உத்தரப் பிரதேசத்தில் உள்ள அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம் பற்றிய வழக்கில் 1968 ஆம் ஆண்டு எஸ்.அசீஸ் பாட்சா எதிர் இந்திய ஒன்றிய அரசு மேற் சொன்ன பல்கலைக்கழகம் இசுலாமியர்களால் மட்டும் கட்டப்பட்டதல்ல. எனவே அதை நிர்வகிப்பதை இந்திய அரசியலமைப்புச் சட்டம் 26ஆம் விதியின் கீழ் அடிப்படை உரிமையாகக் கருத முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலும் முன்னர் ஷீரூர் மடம் சீவாளிப் பார்ப்பனர்கள் பற்றிய ஒரு தீர்ப்பில் ஒரு மதத் தலை வரைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்தினர் தங்களை ஒரு தனிக் குழுவாகக் கருதிக் கொள்ள முடியும். அப்படி இருப்பின் அவர்களது மதம் மற்றும் நிர்வாக உரிமை யானது அடிப்படை உரிமையாகும். இதில் முன்னது முழு முற்றான உரிமை. பின்னது அரசின் தற்காலிகக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது (இங்கு கவனிக்க வேண்டியது தற்காலிகம் என்ற சொல்லாகும்). தீட்சிதர்கள் ஒரு தனிப் பிரிவினர் என்றும் அவர்கள் ஸ்மார்த்த பார்ப்பனர்களாயிருந்தாலும் ஒரு இறுக்கமான கட்டுப்படுகளைக் கொண்ட தனிக் குழுவாக இயங்கி வருகிறது. அவர்கள் வேறு ஸ்மார்த்த பார்ப்பனர்களுடன் கொள்வினை கொடுப்பினை வைத்துக் கொள்வது கிடையாது. எனவே சென்னை உயர் நீதிமன்ற அமர்வு அளித்த தீர்ப்பானது (ஆடுது. 601 -606) அவர்களை ஒரு தனிக் குழுவாகவும் பல நூற்றாண்டுகள் தில்லைக் கோவிலில் வழிபடவும் நிர்வாகம்செய்யவும்முழுமுற்றானஉரிமைபடைத்தவர் களாகவும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த வகையில் அவர்கள் மாடாதிபதிகளைப் போன்றவர்கள். எனவே அவர்களின் மேல் முறையீட்டு மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்கது. இப்படியாக உச்ச நீதிமன்றம் அவர்களுடைய மனுவை விசரணைக்கு எற்றுக் கொண்டது.

தமிழ்நாடு இந்து அற நிலையத்துறையின் சார்பாக வைக்கப்பட்ட வாதத்தின் சுருக்கம் எப்படி உள்ளது என்பதைக் காண்போம். இந்த வாதமும் சிறந்த வழக்கறிஞர்களைக் கொண்டு உச்சநீதி மன்றத்தில் நேரடியாக செய்த வாதமல்ல. எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்ட வாதமாகும். முறையாக வழக்கறிஞர்களை நியமிக்காமல் அப்பொழுது ஆட்சியிலிருந்த செயலலிதா அரசு இந்த வழக்கை பொறுப்பற்ற வகையில் நடத்தியது.அங்கிருந்த இந்து அறநிலையத்துறை அதிகாரிகளும் உச்ச நீதி மன்றத்தின் கேள்விகளுக்கு முறையாக பதில் அளிக்க முயலவில்லை. அல்லது முடியவில்லை. இதற்குக் காரணம் தீட்சிதர்கள் ஜெயலலிதாவை தனியே சந்தித்து ‘‘முறையாக’’ முறையிட்டனர் என்பதே.



1)தீட்சிதர்கள் தில்லைக்கோவிலின் பரம்பரை யான பாதுகாவலர்கள் அல்லது தர்மகர்த்தாக்கள் (TRUSTEES) என்பதை அரசின் வாதம் ஒத்துக் கொள்கிறது.

அவர்களை இந்தபொறுப்பிலிருந்து நீக்குவது தமிழ் நாடு அரசின் நோக்கமல்ல; ஆணையருக்கு கோவில் கணக்கு வழக்குகள் அதன் சொத்து விவரங் களை நிர்வகிப்பதில் உதவி செய்வதும் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்வதும் கோவில் நிர்வாகத்தை நெறிப்படுத்துவதும் அதன் நோக்கமாகும்.

இந்தக் கருத்தை இறுகப் பற்றிக் கொண்ட உச்ச நீதிமன்றம் இத்தகைய முற்சி ஒரு தற்காலிகமான ஏற்பாடாக மட்டுமே இருக்க முடியும். (தவறு நேர்ந்தால் அதை சரிபடுத்தி விட்டு பிறகு அதை விட்டு அரசு ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்று பொருள் கொள்ளாலம்).

தில்லைக்கோவிலை தீட்சிதர்கள் கட்டவில்லை, அவர்கள் அதற்கு உரிமையாளர்கள் இல்லை. (அப்படி அவர்கள் கட்டியதாக தீட்சிதர்கள் கூறவும் இல்லை) இருந்தாலும் அவர்கள் தனி மதக்குழு என்ற வகையில் அதை நிர்வகிக்கும் உரிமைபெற்றவர்கள் பல நூற்றாண்டுகளாக அவர்கள் அதை நிர்வகித்து வருகின்ற காரணத்தால் அதை விட்டு அவர்களை நீக்குவது என்ற கேள்வியே எழவில்லை. மேலும் அவர்கள் மீது பலகுற்றச்சாட்டுகள் (நிர்வாகக் குறை பாடுகள், தவறுகள் களவு போன்ற) கூறப்பட்டாலும் அதைக் குறித்து இந்த நீதிமன்றம் எந்தகருத்தையும் தெரிவிக்க விரும்பவில்லை.மேலும் செயல் அலுவலரை நியமனம் செய்த உத்தரவில் எந்த குறிப்பிட்ட காரணத்திற்காக எந்த சூழ்நிலையில் இந்த உத்தரவு இடப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை. மேலும் இந்த உத்தரவு (செயல் அலுவலரை நியமிப்பது) எவ்வளவு

காலத்திற்கு நீடிக்கும் என்று கால அளவு நிர்ணயிக்காமல் வெளியிடப் பட்டுள்ளது .எனவே இந்த அரசாணை ஒரு தலைப்பட்சமானது சட்டத்திற்கும் நீதிக்கும் புறம்பானது . எனவே அது செல்லத்தக்கதல்ல என்பதே தீர்ப்பு.

இது உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் சாரமாகும்.

இந்த தீர்ப்பு 2019 இல் வெளியானது. நீதியரசர்கள் திரு.பொப்ப்டே, திரு.சௌகான் அவர்களைக் கொண்ட அமர்வு இந்ததீர்ப்பை வழங்கியது. இந்த தீர்ப்பை தீட்சிதர்கள் கோவிலின் உள்ளேயே பட்டாசு வெடித்துக் கொண்டாடினர். இந்த மூன்று ஆண்டுகளில் பல நிகழ்வுகள் தமிழக அரசியலில் ஏற்பட்டு விட்டன. ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட செ.செயலலிதா மரண மடைந்தார். அவர் மரணத்தைச் சுற்றியுள்ள மர்மத்திரை இன்னும் விலகவில்லை. திராவிட இயக்கத்தின் தலைவராகவும் பழுத்த அரசியல்வாதியாகவும் விளங்கிய கலைஞர் கருணாநிதி அவர்களும் மறைந்தார். ஆட்சி மாற்றமும் ஏற்பட்டது. அதிமுக அரசு போய். கலைஞர் மகனாகிய திரு.முத்துவேல் கருணானிதி ஸ்டாலின் முதல்வர் ஆகியுள்ளார் அவர் அமைச்சர வையில் இந்து அற நிலையத்துறை அமைச்சராக இருக்கும் திரு. சேகர் பாபு தில்லைக் கோவில் பற்றி சட்டப் போராட்டம் தொடரும் என்று கூறியுள்ளார். அது தொடரின் நல்லதே. இல்லையென்றால் கோவில் கொடியவர்களின் கூடாரமகும் நாள் வெகு தொலைவில் இல்லை. இது தில்லைக் கோவிலுக்கு மட்டுமல்ல; எல்லாக் கோவில்களுக்கும் பொருந்தும்.

உச்ச நீதி மன்றத்தின் இந்ததீர்ப்புக்கு வேறு தீர்வே இல்லையா? இருக்கிறது. அதற்கு வழியும் அந்த தீர்ப்பின் வாசகத்திலேயே இருக்கிறது.தேவை அரசியல் உறுதியும் சில நேர்மையான வழக்கறிஞர்களும்தான் . அறிஞர் அண்ணா கூறியது போல் சட்டம் ஒரு இருட்டறை தான். அதில் ஒளியைத் தேடித்தருவது வழக்கறிஞர்கள் வாதம்தான். சட்டம் முன்னால் சென்றால் கடிக்கும் பின்னால் சென்றால் உதைக்கும் என்று மேலை நாட்டு அறிஞர் கூறியதாக நினைவு . நாம் முன்னாலும் செல்லாமல் பின்னாலும் செல்லாமல் அதன் மீது சென்று நமது இலக்கை எட்ட வேண்டும் எட்டலாம்; இப்போது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு தில்லைக் கோவிலுக்கு இந்து அற நிலையத்துறையின் கட்டுப்பாடே கூடாது என்பதல்ல, அப்படி சொல்லவும் இயலாது. எந்த அடிப்படை உரிமை இருந்தாலும் அதற்கும் சில எல்லைகள் உண்டு. இந்திரா காந்தி அறிவித்த நெருக்கடி நிலையைப் பற்றிய தீர்ப்பில் நெருக்கடி காலத்தில் எல்லா உரிமைகளையும் ஒத்திவைக்கும் உரிமை உண்டு என்று உச்ச நீதி மன்றம் கூறியது. எல்லா அடிப்படை உரிமைகள் என்றால் உயிர் வாழும் உரிமை உட்பட எல்லாமும் தான். நெருக்கடி நிலைக்குப்பிறகு இது குடியரசுத் தலைவரின் விருப்பத்தைப் பொறுத்து என்பது சிறிது மாற்றப் பட்டுள்ளது இரண்டு அவைகளிலும் 2/3 பங்கு பெரும்பான்மையுடன் நெருக்கடி நிலை தீர்மானத்தை நிறைவேற்றி, பிறகு அறிவித்தால் இதையும் செய்ய முடியும்! நிலைஅப்படி இருக்க தில்லைக்கோவில் தீட்சிதர்கள் தொல்லையை ஒழிப்பது தான் பெரிய செய்தியா?

தீட்சிதர்கள் சிறுபான்மைக் குழு என்று உயர் நீதிமன்றம் ( 1951 ஆம் ஆண்டு தீர்ப்பு) கூறிவிட்டது எனவே அதை மாற்ற இயலாது என்று கூறியிருக்கிறது (Res Judica). இது தவறான வாதம். இந்துக்களில் ஒரு பிரிவினர் மட்டும் தனியான இனக் குழு என்றுக் கூறுவது சரியான வாதமாகுமா? தீட்சிதர்கள் தாங்கள் இந்துக்கள்தான் என்றுக் கூறிக்கொள்ளும் வரை அவர்கள் ஒரு போதும் தனி மதக்குழு என்று கூற இயலாது என்பது எனது கருத்தாகும். அவர்கள் நாங்கள் இந்துக்கள் இல்லை; நாங்கள் ஸ்மார்த்த பார்ப்பனர்கள் என்று அறிவித்தால் கோவில் அவர்களுக்கு உரிய இடமில்லை. தீ வளர்த்து வேள்வி செய்வதே அவர்கள் அடிப்படை உரிமையாகும்.அது செல்க. அதற்கு முன்னர் சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் பல சிதம்பரம் ஸ்ரீ சபானயகர் கோவில் பொதுக் கோவில் என்று தீர்ப்பளித்த விவரங்களை உச்ச நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை.

மேலும் உச்ச நீதி மன்றம் கூறியிருப்பது இன்னும் ஒரு எளிய வழியினையைக் காட்டுகிறது. தில்லைக் கோவில் தீட்சிதர்களின் தனி உடமை என்று வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் முறைகேடுகள் நடந்தால் தலையிட அரசுக்கு உரிமை உண்டு. இதை உச்ச நீதி மன்றம் தன்னுடைய தீர்ப்பில் பலதடவை கூறியிருக்கிறது. ஆனால் எம்ஜியார் கொண்டுவந்து கருணாநிதி ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட அரசாணை யில் இந்தவிதமானக் குற்றம் எதுவும் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. இது ஒரு முக்கிய காரணமாகும். இரண்டாவது தில்லைக் கோவிலுக்கு இந்து அற நிலையத்துறை செயல் அலுவலரை நியமிக்கலாம். ஆனால் எந்தக் குறிப்பிட்டக் காரணத்திற்காக , எவ்வளவு காலம் நியமிக்கப்படுகிறார் என்பது தெளிவாகக் கூறப்படவேண்டும், அப்படிக் கூறப்படாமல் அரசு மொட்டையாக ஒரு அரசாணையை வெளியிட்டது. எனவே அது செல்லத்தக்கதல்ல. இதுவேஉச்ச நீதி மன்றத் தீர்ப்பின் சாரமாகும். இதை எளிதில் தமிழ் நாடு அரசின் சட்டத்துறை கடந்துவிடமுடியும். எ.கா. தீட்சிதர்கள் அனுமதியோடு தில்லைக் கோவிலில் தொழிலதிபர்கள் இல்லத் திருமணம் நடைபெற்றுள்ளது

(2019.) இது ஒரு முறைகேடு. இதை விசாரிப்பதற்காக இந்து அற நிலையத்துறை அதை ஒரு செயல் அலுவலரை நியமிக்கலாம். அவர் இது குறித்து இரண்டு ஆண்டுகள் விசாரணை செய்து அறிக்கைத் தரவேண்டுமென்றும் அதுவரை தில்லைக் கோவிலின் நிர்வாகம் செயல் அலுவலரின் கையில் இருக்கும் என்று அரசாணை வெளியிட்டால் உச்ச நீதி மன்றம் சென்றாலும் அதைத் தடுக்க இயலாது. தீட்சிதர்களும் முறைகேடு செய்வது எங்கள் அடிப்படை உரிமை என்று வாதிட இயலாது. ஜெயேந்திர சங்கராச்சாரி சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டது ஒரு நல்ல முன்மாதிரியாகும். அது குற்றவியல் வழக்கு, இது குடிமையியல் வழக்கு என்பதெல்லாம் எடுபடாது. நீதி, அரசியலமைப்பு சட்டம் இந்த வேறுபாடுகளை யெல்லாம் பார்ப்பதில்லை. இது ஒரு எளிய புரிதலாக இருக்கலாம். இதில் சட்ட நுணுக்கங்கள் பல இருக்கலாம் ஆனால் எல்லா வழிகளையும் உச்ச நீதி மன்றம் அடைத்துவிட்டது என்ற சோர்வோ அல்லது சாக்குப் போக்கு சொல்லும் மனபான்மையோ தேவை இல்லை. எல்லா சட்டங்களும் மக்கள் நலன் முன்னிட்டே!

மாநில அரசு மத வழிபாட்டிற்கு இடையூறு செய்யாமல் சட்டம் இயற்றலாம். 1959ஆம் ஆண்டின் சட்டத்தின்படி நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டாலும் எதற்காக நியமிக்கப்படுகிறார் என்று தெளிவாக குறிப்பிட வில்லை; என்ன காரணத்தினால் அந்த நியமனம் தேவைப்பட்டது என்பதும் குறிப்பிடப்படவில்லை; எவ்வளவு நாளைக்கு அந்த நியமனம் செல்லும் என்பதும் குறிப்பிடப்படவில்லை. எனவே அந்த அரசாணை தன்னிச்சையானது, சட்ட விரோதமானது, அநீதியானது. எனவே அது செல்லாது இதுதான் உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பின் சாரம். அந்த அரசாணையில் சில பிழைகளுக்காக அரசாணையை முற்றிலுமாக தள்ளி விட்டது. அந்த பிழைகள் வேண்டுமேன்றெ கூட செய்யப் பட்டிருக்கலாம். ஆனால் முதலில் மதச் சிறுபான்மை என்றெல்லாம் முழங்கிய உச்ச நீதிமன்றம் இறுதியில் அரசாணையில் உள்ள சிறு தவறுகளைச் சுட்டிக்காட்டி வழக்கை முற்றிலுமாகத் தள்ளுபடி செய்து விட்டது .

1987 ஆம் ஆண்டு சட்டம் நிர்வாக அதிகாரி எவ்வளவு நாளைக்கு செயல் படுவார் என்பதைத் தெளிவாகக் கூறவில்லை. எவ்வளவு நாளைக்கு என்று குறிப்பிட்டு 1987ஆம் ஆண்டு சட்டத்தைத்திருத்தி அல்லது மேல் முறையீட்டு மனுவைத் திருத்தி திரும்ப முறையிடலாம். இதுவும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் வாசகம் தான்(49-50 பத்தி) தீர்ப்பையும் வழங்கி விட்டு அதை எப்படி மேல் முறையீடு செய்வது என்பதையும் அதுவே கூறுகிறது. முறையான தேதியிட்டு முறையான கால அளவு நிர்ணயம் செய்து அரசாணை புதியதாக வெளியிட்டு விட்டு பிறகு மேல் முறையீடு செய்யுங்கள் என்று உச்ச நீதிமன்றம் கூறாமல் கூறுகிறது. ஆனால் கேளாசெவிகள் புரியாதது போல நடிக்கின்றன என்று தானே பொருள்!

சட்ட மன்றத்தைக்கூட்டி தீர்மானம் நிறை வேற்றி தில்லைக் கோவில் தனியார்க் கோவில் அல்ல; அது பொதுக் கோவில் என்று அறிவிக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து 2014-2019 வழக்கின் தீர்ப்பை தள்ளுபடி செய்யக் கோர வேண்டும். பொதுமக்கள் கருத்து தீட்சிதர்களுக்கு எதிராக உள்ளது. இதைப் பயன்படுத்தி மக்கள் திரள் போரட்டங்களை நடத்தி தீட்சிதர்களின் திருட்டுப் போக்கினை வெளிப்படுத்த வேண்டும்.

■

## ‘அரசியல் தெளிவோம்’
### கருத்தரங்கம்




**‘அரசியல் தெளிவோம்’ கருத்தரங்கம், 21.08.2022 அன்று காலை 10 மணிக்கு மேடவாக்கம் பாவேலரேறு தமிழ்க்களத்தில் நடைபெற்றத. முனைவர் முத்தமிழ் தலைமையில் நடந்த நிகழ்வில், தோழர் உதயன் தொடக்க உரையாற்றினார்.**

**பெரியாரியமும் தமிழ்த்தேசியமும் என்றத் தலைப்பில் வாலாசா வல்லவன் அவர்களும் மார்க்சியமும் தமிழ்த் தேசியமும் என்றத் தலைப்பில் பொழிலன் அவர்களும் உரை நிகழ்த்தினர். நண்பகல் 1.30 மணிக்கு கரத்தரங்கம் நிறைவுற்றது.**

# பில்கிஸ்பானு வழக்கில் குற்றவாளிகள்
## “11 பேர் அவசர விடுதலை ஏன்?”

**வாலாசா வல்லவன்**

மோடி குசராத்தில் முதல்வராக இருந்த போது 2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ஆம் நாள் அயோத்தியிலிருந்து வந்த சபர்மதி விரைவுத் தொடர்வண்டி, குசராத் மாநிலம் கோத்ரா தொடர்வண்டி நிலையத்தில் தீ வைத்து எரிக்கப்பட்டது. அதில் 57 இந்து பக்தர்கள் தீயில் இறந்தனர். இந்த இரயில் எரிப்புச் சம்பவம் இசுலாமியர்களால் நடத்தப்பட்டது என்றுக்கூறி இந்து மதவெறி அமைப்பினர், இசுலாமியர்களுக்கு எதிரான மாபெரும் வன்முறைகளை அரங்கேற்றினர்.

இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசுலாமியர் வீடுகளும், கடைகளும் சூறையாடபபட்டன; இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசுலாமியர்கள் படுகொலைச் செய்யப்பட்டனர்; தொடர்ந்து வன்முறைகள் அதிகரித்து வந்தச் சூழலில் இந்து வெறியர்களிடம் இருந்து தப்பி உயிர்பிழைப்பதற்காக பில்கிஸ்பானுவின் குடும்பத்தினர்

2002 மார்ச்! மாதம் 3ஆம் நாள் தாகோடு மாவட்டம் ரன்திக்பூரிலிருந்து வெளியேறி அடுத்த ஊரை நோக்கிச் சென்றனர். அப்போது சுமார் 30 பேர் கொண்ட இந்து மதவெறிக் கும்பல் அவர்களைச் சுற்றி வளைத்தது. பில்கிஸ் பானுவுடன் சென்றவர்களில் பதினான்கு பேர் படுகொலைச் செய்யப்பட்டனர்.

5 மாதம் கருவுற்றிருந்த பில்கிஸ்பானு அந்த மதவெறிகும்பலால் கூட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார். அவருடைய மற்ற நான்கு பெண்களும்கூட்டுப்பாலியல்வன்முறைக்குஉள்ளாக்கப் பட்டனர். அவர்கள் இறந்துவிட்டார்கள் என நினைத்து விட்டுச் சென்றனர். பில்கிஸ் பானுவின் மூன்று வயது மகள் சலேகாவை இவர் கண் எதிரிலேயே சுவற்றில் மோதி சாகடித்தனர்.

தப்பிப்பிழைத்த பில்கிஸ்பானுவும் அவருடைய கணவரும் பலமுறை வீடு மாறவேண்டி நிலையே ஏற்பட்டது. மனித உரிமை ஆணையத்தின் உதவியுடன் தொடர்ந்து போராடி, குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்தார்.

உச்சநீதி மன்றம் இந்த வழக்கை விசாரித்து ஒன்றிய அரசின் புலனாய்வுக்கு (CBI) மாற்றியது. குசராத்தில் வழக்கு நடைபெற்றால் தனக்கு நீதி கிடைக்காது என்ற பில்கிஸ் பானுவின் கோரிக்கையை ஏற்று வழக்கை மும்பைக்கு மாற்றியது உச்சநீதிமன்றம்.



இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முதன்மைக் குற்றவாளிகள் 11 பேரை 2004 சனவரி 11 அன்று சி.பி.ஐ. சிறப்புக் காவல் துறையினர் கைது செய்தனர். மும்பை ஒன்றியப் புலனாய்வு சிறப்பு நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

குற்றம் நிரூபிக்கப்பட்டு, 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆம் நாள் குற்றம் சாட்டப்பட்ட 11 பேருக்கும் வாழ்நாள் தண்டனை அளிக்கப்பட்டது. குற்றவாளிகளின் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து, உறுதி செய்தது 2017இல் மும்பை உயர்நீதி மன்றம்.

பில்கிஸ்பானு வழக்கில் தண்டனை அடைந்த ஜஸ்வந்த்பாய், கோவிந்த்பாய், ஷைலேஷ்பட், ராதேஷ்யாம்ஷா, பிபின்சந்திரா ஜோசி, கேசர் பாய், வோஹானியா, பிரதீப் மோர்த்தியா, பகபாய், வோஹானியா, ராஜ்பாய் சோனி, மிதேஷ்பட் மற்றும் ரமேஷ் ரூபபாய் ஆகிய 11 பேரும் சிறையில் அடைக்கப் பட்டனர்.

ரமேஷ்போய் என்பவர் 2013ஆம் ஆண்டு தன்னை விடுதலைச் செய்யவேண்டம் என்று மும்பை உயர்நீதி மன்றத்தில் வழக்குத்தொடுத்தார். குசராத்து அரசு தான் இதைத் தீர்மானிக்க முடியும் என்று நீதி மன்றம் கூறிவிட்டது.

ரதிஷயாம் சா என்ற குற்றவாளி தன்னை விடுதலைச் செய்ய வேண்டும் குசராத்து உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். “உங்கள் வழக்கு விசாரணை மராட்டியத்தில் நடைபெற்றதால் நீங்கள் அங்குதான் இதற்கு தீர்வுகாண வேண்டும்” என்று




தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே இவர் உச்சநீதி மன்றத்தை நாடினார். உச்சநீதி மன்றத்தில் இவருடை மனுவை இருவர் அமர்வு விசாரணைக்கு ஏற்றுக்கொண்டனர். குற்றவாளிகள் 14 ஆண்டுகள் சிறையில் கழித்துவிட்ட-தால் குசராத்து அரசு ஒரு ஆய்வுக்குழுவை அமைத்து இவர்கள் விடுதலையை இரண்டு மாதத்தில் முடிவு செய்யவேண்டும் என்று 22.05.2022 அன்று தீர்ப்புக் கூறியது.

குசராத்து அரசு 10 பேர் கொண்ட குழுவை அமைத்தது. அதில் 5 பேர் பா.ச.க.வைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் பா.ச.க. ஆதரவானவர்கள். குற்றவாளிகள் 14 ஆண்டுகள் சிறைத்தன்டனை அனுபவித்து விட்டனர். அவர்களின் நன்டைத்தையின் காரணமாக 1992ஆம் ஆண்டின் சிறைத் தண்டனைக் குறைப்புச் சட்டன்படி இவர்களை விடதலைச் செய்யலாம் என முடிவு செய்தனர். அதன் அடிப்படையில் 15.8.2022 அன்று குற்றவாளிகள் 11 பேரும் விடுதலைச் செய்யப்பட்டனர்.

குசராத்து அரசின் இந்தச் செயல் மனித உரிமை ஆர்வலர்கள் பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. குற்றவாளிகள் அனைவரையும் மீண்டும் சிறையில் அடைக்க வேண்டும் என உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு கடிதங்கள் அனுப்பி உள்ளனர். ஓய்வு பெற்ற இ.ஆ.ப., இ.கா.ப. அலுவலர்கள் 134 பேர் கூட்டாகக் கையொப்பமிட்டு உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதிக்கு கடிதங்கள் எழுதி உள்ளனர்.

11 பேரின் விடுதலையை எதிர்த்து இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா ர்க்சிஸ்ட்) மகளிர் அமைப்பு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. சமூக ஆர்வலர் அபர்ணாபட் சார்பில் மூத்த வழக்குரைஞர் கபில்சிபல் வழக்குத் தொடுத்துள்ளார். உச்சநீதி மன்றம் விசாரணைக் ஏற்று! ஒன்றிய அரசுக்கும், குசராத்து அரசுக்கும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பி உள்ளது.

குசாரத்து கோத்ரா தொகுதியின் பா.ச.க. சட்டமன்ற உறுப்பினர் சி.கே.ரவுல் ஜி, குற்றவாளிகள் விடுதலைக் குறித்து பேசிய போது

‘‘தண்டனை விதிக்கப்பட்டவர்கள் பிராமணர்கள்; அவர்கள் நல்ல கலாச்சாரம் கொண்டவர்கள். அவர்கள், தவறான நோக்கங்களால் கூட தண்டனை பெற்றிருக்-கலாம் என்று கூறினார்.’’ (பி.பி.சி. தமிழ் 21.08.2022) குற்றவாளிகளின் விடுதலையைக் கொண்டாடும் பா.ச.க.வினரை என்னவென்பது?

## ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும்

இராசீவ் காந்தி கொலையில் தொடர்புடையவர்கள் ஒன்றிய அரசின் அனுமதியில்லாமல் விடுவிக்கக் கூடாது என்று நீதி மன்றங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இன்னும் நளினி, முருகன், சாந்தன், இராபர்ட் பயஸ், செயகுமார், இரவிச்சந்திரன் ஆகிய ஆறு பேர் சிறையிலேயே உள்ளனர். பல்கிஸ்பானு வழக்கும் ஒன்றியப் புலணாய்வு (CBI) சிறப்பு நீதி மன்றம் தான் தண்டனை வழங்கியது. குசராத்து கைதிகள் மட்டும் 14 ஆண்டுகள் முடிந்தவுடன் வெளியே வந்து விடலாமா? அவர்கள் பார்ப்பனர்கள் என்பதால்? தமிழ்நாட்டில் உள்ளவர்கள் பார்ப்பனரல்லாத தமிழர்கள் ஒன்றிய அரசின் புலனாய்வுக் குழுவால் (CBI) தண்டனை வழங்கப்பட்டவர்கள்தானே?.

■

# விமான விபத்து

**வாலாசா வல்லவன்**

1995ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் ஒரு நாள் இலண்டன் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சித் திட்டத் துறையில் (Development Planning Unit) பொருளாதாரமும் அரசியல் கோட்பாட்டியலும் பட்ட மேற்படிப்பு (M.Sc. in Economics and Political Science) வகுப்பில் படித்துக் கொண்டு இருந்த இருபத்தைந்து மாணவர்களும் வியப்பில் மூழ்கி இருந்தனர். கடந்த ஆறு மாதங்களில் எப்பொழுதுமே ஒரு வகுப்பு கூடத் தவறாமல் அரை மணி நேரம் முன்னதாகவே வந்து, முதல் வரிசையில் அமர்ந்து, மிக்க ஆர்வத்துடன் பாடம் கேட்கும் சங்கர பாண்டி அன்று வகுப்புக்கு வராதது உடன் படிக்கும் மாணவர்களை மட்டும் அல்லா-மல், வகுப்பு எடுக்கும் ஆசிரியர்களையும் வியப்பில் ஆழ்த்தியது. ஆசிரியர்கள் ஒருவர் விடாமல் "சங்கர பாண்டிக்கு என்ன ஆயிற்று?" என்று விசாரித்தனர்.

அன்றைய வகுப்புகள் முடிந்த பின் இராபர்ட் சுதா (Robert Chutha) என்ற கென்ய நாட்டு மாணவனும், அலிசன் திர்க்கல் (Allyson Thirkell) என்ற இங்கிலாந்து மாணவியும், ஜி பும் ஹாங் (Gi Bum Hong) என்ற தென் கொரிய மாணவனும், கன்சாலோ ரியாஸ் (Gonzolo Rios) என்ற பெரு நாட்டு மாணவனும் சங்கர பாண்டியை நேரில் பார்த்து விசாரிப்பது என்று முடிவு செய்தனர். சங்கர பாண்டி கல்லூரியில் இருந்து 300 மீட்டர் தொலைவிலேயே இருந்த இந்திய இளம் ஆடவர்கள் கிருத்துவர் சங்கம் (Indian YMCA = Indian Young Men Christian Association) நடத்திக் கொண்டு இருக்கும் விடுதியில் தங்கி இருந்தான். எட்டு நிமிடங்களில் நடந்து போய் விடலாம்.

நான்கு நண்பர்களும் அங்கு சென்று அவன் தங்கி இருக்கும் அறைக் கதவைத் தட்டினார்கள். சிறிது நேரத்தில் சங்கர பாண்டி கதவைத் திறந்தான். அவனைக் கண்டதும் நால்வருடைய முகங்களும் அதிர்ச்சியில் கருத்துப் போயின. அவனுடைய முகம் அழுது அழுது வீங்கியும் சிவந்தும் போய் இருந்தது. அவனுடைய நெருங்கிய உறவினர் யாராவது இறந்து போய் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத் தார்கள். சங்கர பாண்டி முகத்தைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்து அனைவரையும் வரவேற்பு அறைக்கு அழைத்துச் சென்றான். அந்த விடுதியில் தங்கி இருக்கும் ஆணோ பெண்ணோ தங்கள் எதிர்பாலின நண்பர்களைத் தங்கள் அறைக்குள் அழைத்துப் பேசக் கூடாது என்றும், வரவேற்பு அறையில் சந்தித்துத் தான் பேச வேண்டும் என்றும் ஒரு விதியை விடுதியின் பொதுச் செயலாளர் முத்தையா கண்டிப்புடன் செயல் படுத்திக் கொண்டு இருந்தார். இந்தியாவில் இருந்து தங்கள் பெண்களை நம்பிக்கையுடன் வெளி நாட்டுக்கு அனுப்பும் பெற்றோர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பதற்கு இந்த விதி முதன்மையானது என்பது அவருடைய நிலைப்பாடு. வரவேற்பு அறைக்கு வந்ததும் நண்பர்கள் பதற்றத்துடன் என்ன நடந்தது என்று விசாரித்தனர்.

தனக்கு நண்பர், தத்துவ வழிகாட்டி, ஆசானாக விளங்கும் இரு பெண்கள் விமான விபத்தில் இறந்து விட்டதாகக் கூறி விம்மி விம்மி அழத் தொடங்கினான். சிறிது நேர அழுகைக்குப் பின் கன்சாலோ ரியாஸ், சங்கர பாண்டிக்கு மிக அருகில் சென்று அவன் முதுகைத் தடவிக் கொண்டே "எந்த ஒரு துன்பம் என்றாலும் அதைத் தாங்கிக் கொண்டு தானே ஆக வேண்டும்? மனதைத் திடப் படுத்திக் கொள்" என்று அன்புடன் கூற, மற்ற நண்பர்களும் அதையே கூறினார்கள். சிறிது நேர அமைதிக்குப் பின் நால்வரும் "அந்த இரு பெண்கள் யார்? அவர்கள் எப்படி விமான விபத்தில் சிக்கினார்கள்?" என்று முழு விரங்களைக் கூறுமாறு கேட்டார்கள். சங்கர பாண்டியும் கூறத் தொடங்கினான்.

நான் சிறு வயதில் ஒழுங்காகப் படிக்க மாட்டேன். மனம் போன போக்கில் திரிந்தும் விடலைப் பருவக் கோளாறினால் பெண்களைக் கேலி செய்து கொண்டும் இருந்தேன். நான் ஒன்பதாவது வகுப்பு படித்துக் கொண்டு இருந்த போது கலா, மாலா என்ற இரு பெண்கள் என் வகுப்பில் இருந்தனர். அவர்கள் இருவரும் மதுரை (கிழக்கு) தொடர் வண்டி நிலையத்திற்கு அருகே உள்ள ஒரு குடிசைப் பகுதியில் வாழ்ந்து கொண்டு இருந்தார்கள். மிகவும் நன்றாகப் படிப்பார்கள். உலக நடப்புகளைப் புரிந்து கொள்வதிலும் அபாரமான திறமைசாலிகள். அது மட்டும் அல்ல; பள்ளி நேரம் போக மிகுதி நேரங்களில் தங்கள் உடன் படிக்கும் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். எங்கள் மொழியில் 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர மணம்' என்று ஒரு பழமொழி உண்டு. அதைப் போல் அவர்களுடைய பெருமை அறியாமல் நான் அவர்களைச் சீண்டி வந்தேன். அதே நேரத்தில் நான்

சரியாகப் படிக்கவில்லை என்பதற்காக என் தந்தை கோபத்தில் என்னை மிகவும் பலமாக அடித்து விட்டார். அவர் ஒரு காவல் துறை அதிகாரி. அவர் அடியை என்னால் தாங்க முடியவில்லை. இச் செய்தி எங்கள் பள்ளியில் பரவி அனைவரும் என்னைக் கேலி செய்தார்கள். ஆனால் கலாவும் மாலாவும் ஆறுதல் கூறி எனக்குத் தனியாகப் பாடம் சொல்லிக் கொடுத் தார்கள். அன்று முதல் என் குறும்புத்தனம் முடிவுக்கு வந்தது. நான் நன்றாகப் படிக்கத் தொடங்கினேன். எனக்கு ஒரு செய்தி நன்றாகப் புரிந்தது, அதாவது படிப்பதும் படிக்காமல் கெட்டுப் போவதும் அவரவர்கள் கைகளில் தான் இருக்கிறது. பிறர் எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டார்கள் என்று. படிக்காத நான் நன்றாகப் படித்து ஆசிரியர்களிடம் நல்ல பெயர் எடுக்கத் தொடங்கி விட்டேன். அந்த இரு பெண்களையும் நான் நண்பர்களாக, தத்துவ வழிகாட்டிகளாக, ஆசான்களாக மனதார ஏற்றுக் கொண்டு விட்டேன்.

எங்கள் இந்தியச் சமூகத்தில் ஒரு மிகப் பெரிய நோய் உண்டு. அது தான் சாதி என்பது. பார்ப்பனர்கள் என்பவர்கள் மிக உயர்ந்த சாதி என்று சொல்லிக் கொள்வார்கள். எங்களைப் போன்ற சிலர் - சிலர் அல்ல பலர் சூத்திரர்கள் - இடைநிலைச் சாதியினர் இருக்கிறார்கள். கலாவும் மாலாவும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு எல்லாம் தொழில்கள் அது போலவே அமையும். அதாவது பார்ப்பனர்கள் உயர்நிலை வேலைகளைப் பெறுவார்கள்; எங்களைப் போன்றோர் இடைநிலை வேலை களைப் பெறுவோம். தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் கீழ் நிலை வேலைகளைச் செய்ய வேண்டும். இதற்கு எதிராக நடந்த நீண்ட நெடிய போராட்டங்களின் விளைவாக இடைநிலைச் சாதியினரிலும், தாழ்த்தப் பட்ட வகுப்பினரிலும் சிலர் உயர் நிலை வேலை களைப் பெற முடிந்து இருக்கிறது. இதைக் கண்டு பொறாத பார்ப்பனர்கள் அதற்கு எதிராகப் பலவிதமான சதிச் செயல்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

கலாவும் மாலாவும் பள்ளியிலேயே மிகவும் அறிவுத் திறன் கொண்ட மாணவிகள் என்று பெயர் எடுத்து இருப்பது பார்ப்பனர்களுக்கு எரிச்சலாக இருந்தது. அவ்விருவரும் மற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்து நன்றாகப் படிக்க வைப்பது அவர்களுக்கு மேலும் எரிச்சலாக இருந்தது. பதின்மப் பருவத்தில் தோன்றும் ஆசைகளில் அவ்விருவரையும் மயக்கி, படிப்பில் கவனம் செலுத்த விடாமல் தடுக்க, அவர்கள் செய்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடையவே, பார்ப்பனர் கள் எரிச்சலின் உச்ச நிலையையே அடைந்து விட்டனர்.

எப்படியாவது அந்த இரு பெண்களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தியே தீர வேண்டும் என்று முடிவு செய்து இருந்தார்கள் போலும். ஒவ்வொரு மாணவனுக்கும் பள்ளி இறுதித் தேர்வு வாழ்வின் முதன்மையான படிக்கல் அதில் பெறும் வெற்றி தோல்வி, அதில் பெறும் மதிப்பெண் தான் ஒருவனுடைய கல்விப் பயணத்தின் திசையை முடிவு செய்யும். அந்தத் தேர்வு வந்தது.

தேர்வு அறைக்குள் நுழையும் முன் ஒவ்வொரு மாணவ மாணவியையும் அவர்கள் தங்களுடன் ஏதாவது துண்டுச் சீட்டு வைத்துக் கொண்டு உள்ளார்களா என்று சோதித்துப் பார்க்கும் பழக்கம் இருக்கிறது. அதில் பெண்களைச் சோதித்துப் பார்க்கும் பணிக்கு பிரீத்தி சர்மா (Preethi Sharma) ரேஷ்மா சேமையா (Reshma Semaiya) என்ற இரு பார்ப்பன ஆசிரியைகள் வேறு பள்ளியில் இருந்து வரவழைக்கப் பட்டுப் பணி அமர்த்தப்பட்டு இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் பரிசோதித்து இருக்கைகளில் அமர அனுமதித்தார்கள். கலா மாலா இருவரை மட்டும் மிகக் கடுமையாகச் சோதித்தார்கள். அதாவது அவர்கள் இருவரையும் அனைவர் முன்னிலையிலும் உடை களைக் களைந்து நிர்வாணமாக நிற்க வைத்து அதன் பின் அனுமதித்தார்கள்.

இதைச் சங்கர பாண்டி சொல்லிக் கொண்டு இருக்கும் போதே ‘‘இது என்ன அயோக்கியத்தனம்? ஒரு பெண் அதுவும் ஆசிரியையாக இருப்பவர் இத்தகைய கீழ்த் தரமான குற்றங்களையும் இழைக்க முடியுமா?’’ என்று அலிசன் திர்க்கல் தன்னை மறந்து கத்தி விட்டாள். அவர்களில் சற்று முரடன் என்று பெயர் பெற்ற இராபர்ட் சுதாவின் கண்களில் நீர் வழிந்து கொண்டு இருந்தது. மற்ற இரு நண்பர்களும் கருத்து கூற முடியாத அளவில் அதிர்ச்சி அடைந்து இருந்தார்கள். சங்கர பாண்டி தொடர்ந்தான்.

நானும் சில நண்பர்களும் ஆட்சேபம் தெரிவித் தோம். ஆனால் எங்களைப் புறம் தள்ளி விட்டு அந்த ஆசிரியைகள் அமைதியாகத் தங்கள் வேலையைச் செய்தனர். அவமானத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்து போன கலாவும் மாலாவும் தேர்வு எழுதாமலேயே வீட்டிற்குச் சென்று விட்டனர். தேர்வு முடிந்த உடன் நானும் சில நண்பர்களும் நேராக என் தந்தையைப் பார்த்து விவரத்தைக் கூறி அந்த ஆசிரியைகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டோம். முழு விவரத்தைக் கேட்ட அவர், அந்த ஆசிரியைகள் பார்ப்ப னர்கள் என்று தெரிந்து கொண்ட உடன் நடவடிக்கை எடுக்கத் தயங்கினார். எங்களுக்கு அதிர்ச்சியாகவும் அவமானமாகவும் இருந்தது. அன்றிலிருந்து நான் தந்தை சொல் கேளாத முரடன் ஆகி விட்டேன். என் தந்தை என்னைப் பொறியியல் படிக்கச் சொன்னார். நான் பொருளாதாரம் படித்தேன். பட்டப் படிப்பு முடிந்த பின் பட்ட மேற்படிப்பு படிக்கச் சொன்னார். நான் படிக்க மறுத்து விட்டேன்.

அவமானத்தில் குன்றிப் போன கலாவும் மாலாவும் சில காலம் கழித்து அதிர்ச்சியில் இருந்து மீண்டார்கள். இனி முழு நேரமும் மக்களுக்குத் தத்தவப் பயிற்சி வகுப்புகள் நடத்த முடிவு எடுத்து அதன் படியே அம்பேத்கர் - பெரியார் தத்துவப் பள்ளி என்ற பெயரில் ஒரு பயிற்சிக் கூடத்தை நடத்தி வந்தார்கள். நான் பட்டப் படிப்பை முடித்த உடன் அவர்களுடன் போய்ச் சேர்ந்து கொண்டேன். என் தந்தை வேலைக்குப் போக வேண்டும் என்று சொன்னதையும் நான் கேட்கவில்லை. வேலைக்குப் போகா விட்டால் யார் திருமணம் செய்து கொள்வார்கள் என்று என் தந்தை கேட்ட போது இனி நான் பொதுச் சேவையில் காலம் கழிக்கப் போவதாகவும் திருமணம் செய்து கொள்ளும் உத்தேசம் இல்லை எனவும் சொல்லி விட்டேன். இவ்வாறு இருக்கும் நிலையில் தான் என் தந்தை இலண்டன் பல்கலைக் கழகத்தில் இந்தப் படிப்பு படிக்கச் சொல்லி வற்புறுத்தினார்.

கலா, மாலாவை ஓராண்டு பார்க்காமல் இருந்தால் என்னுடைய பொது வாழ்வு ஈடுபாட்டில் பிடிமானம் தளரும் என்று அவர் நினைப்பதாக என் தாயார் மூலம் நான் அறிந்து கொண்டேன். நான் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் இதைக் கேள்விப்பட்ட கலாவும் மாலாவும் நான் இலண்டன் பல்கலைக் கழகப் படிப்பை ஏற்பது நல்லது என்று அறிவுறுத்தினார்கள். தங்கள் பயிற்சிக் கூடத்தில் இலண்டன் பல்கலைக் கழகப் பட்டதாரி ஒருவர் இருந்தால் அது பயிற்சிக் கூடத்தின் மதிப்பை உயர்த்தும் என்றும், அதில் இணைந்து கற்கப் பலர் முன் வருவார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள். உடனே ஒப்புக் கொண்டு இப்பொழுது இங்கு வந்து படித்துக் கொண்டு இருக்கிறேன் என்று தன் பேச்சை முடித்தான்.

நண்பர்கள் நடுவில் ஓர் இறுக்கமான அமைதி நிலவியது. அமைதியை உடைத்துக் கொண்டு வாருங்கள் நாம் தேநீர் அருந்தலாம்'' என்று கூறி, சங்கர பாண்டி தன் நண்பர்களை உணவுக் கூடத்திற்கு அழைத்துச் சென்றான். தேநீர் அருந்திக் கொண்டு இருக்கும் போது கலாவும் மாலாவும் சென்ற விமானம் விபத்துக்கு உள்ளானதைப் பற்றி ஜி பும் ஹாங் விசாரித்தான். சங்கர பாண்டி அதைப் பற்றி விரிவாகக் கூறினான்.

முன் காலத்தில் இந்தியாவில் இருந்து அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு உயர் கல்வி கற்கவோ, வேலை வாய்ப்பு பெறவோ பெரும்பாலும் பார்ப்பனர்களால் மட்டுமே முடிந்தது. பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் சீரிய முயற்சியினால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கும் அவ்வாய்ப்புகள் கிடைக்கத் தொடங்கி உள்ளன. இதைக் கண்டு வயிற் றெரிச்சல் கொண்ட பார்ப்பனர்கள், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் இது போன்ற வாய்ப்புகளில் ஊக்கம் பெற்று விடக் கூடாது என்று, அயல் நாட்டு வாழ்க்கையில் முதலில் நிம்மதி போய்விடும் என்றும், நம் பண்பாட்டை மறந்து விடுவோம் என்றும் பிரச்சாரம் செய்து பார்த்தனர். ஆனால் அவர்களுடைய பிரச்சாரத்தையும் மீறி ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் தங்களுக்குக் கிடைத்த அயல் நாட்டு வாய்ப்புகளை விடாமல் பயன் படுத்திக் கொண்டனர்.

அயல் நாடுகளில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் எண்ணிக்கை பொருட்படுத்தத்தக்க அளவு உயர்ந்த பின், இந்தியாவில் கையாண்டு வரும் ஒடுக்குமுறை உத்திகளை அங்கும் நடைமுறைப்படுத்தத் தொடங்கினர். அதாவது தங்கள் ஆளுகைக்குக் கீழ் வரும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களைச் சரியாக வேலை செய்ய விடாமல் இடையூறு செய்வது, திறமை அற்றவர்கள் என்று பொய்யாக முத்திரை குத்துவது, மேலதிகாரிகளிடம் கோள் மூட்டி விடுவது போன்ற உத்திகளைக் கையாண்டனர். இதனால் அயல் நாடுகளில் வாழும் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இந்தியர்கள், பார்ப்பனர்களுக்கு எதிராக ஒன்று திரள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. ஆங்காங்கே பல குழுக்களும் தோன்றி விட்டன. அப்படித் தோன்றிய குழுக்களில் ஒன்று தான் சான் ஃபிரான்சிஸ்கோ நகரில் உள்ள அம்பேத்கர் கிங் படிப்பு வட்டம் (Ambedkar King Study Circle).

இந்தியாவில் சாதியக் கொடுமைகளுக்கு எதிராகப் பெரும் போராட்டத்தை முன்னெடுத்துப் பல முனை களில் வெற்றி கண்டவர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர். அமெரிக்காவில் இன ஒதுக்கலுக்கு எதிராகப் பெரும் போராட்டத்தை முன்னெடுத்து வெற்றி கண்டவர் மார்ட்டின் லூதர் கிங். இருவருமே வன்முறையைக் கையில் எடுக்காமல் அமைதி வழியில் உறுதியாகப் போராடி மாபெரும் வெற்றியைக் கண்டவர்கள். இந்த மாபெரும் போராளிகளின் பெயரில் உள்ள இந்த அமைப்பின் மூலம் தங்களைச் சுற்றி உள்ள மக்களுக்கு நாடு, இனம், மொழி என எந்த வேறுபாடும் பாராமல் ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்தியலைப் பரப்பும் பணியைச் செய்து கொண்டு இருக்கின்றனர். இதன் ஒரு பகுதியாக ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் சிறந்த போராளிகளை அழைத்து அங்கு உள்ள மக்களிடையே பேச வைக்கின்றனர். அந்த முறையில் சில நாட்களுக்கு முன்பு கலாவையும் மாலாவையும் அழைத்துப் பேச வைத்து இருக்கின்றனர்.

கலாவும் மாலாவும் மிகவும் இளையவர்களாக இருந்தாலும் உயர்ந்த அறிவுத் திறத்துடன் பேசுவதாக ஒரு கருத்து பரவி இருந்ததால் அவர்களுடைய

பேச்சைக் கேட்பதற்குப் பெரும் கூட்டம் கூடி இருக்கிறது. மேலும் அவர்கள் பேசுவதாக மட்டும் இல்லாமல், கூட்டத்திற்கு வருபவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடை அளிப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டு இருந்ததால் மாற்றுக் கருத்து கொண்டவர்களும் மிகுந்த எண்ணிக்கையில் வந்து இருக்கிறார்கள். முதலில் கலா பேசி இருக்கிறாள்.

சாதியக் கொடுமைகளின் முதன்மையான பிரச்சினையே சாதி அடிப்படையில் தொழில் அமைவது தான். திறமை இருக்கிறதோ இல்லையோ பார்ப்பனர்கள் உயர் நிலை வேலைகளை ஆக்கிரமித்துக் கொள் கிறார்கள். மற்ற வகுப்பு மக்களோ எவ்வளவு திறமை வாய்ந்தவர்களாக இருந்தாலும் அடுத்த நிலை வேலை களைத் தான் பெற முடிகிறது. இவ்வாறு திறமை மிகுந்த ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் கீழ் நிலை வேலைகளைச் செய்ய நேர்வதால் மனித வளம் கொடூரமான அளவில் வீணாகிறது. அதை விட ஆபத்தானது திறமைக் குறைவான பார்ப்பனர்கள் உயர் நிலை வேலை களில் ஆக்கிரமிப்பது தான். அவர்களுடைய திறமைக் குறைவினால் உயர் நிலை வேலைகளில் நிகழும் சிறு தவறும் அனைத்து நிலைகளிலும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடைகள் ஏற்படக் காரணமாகி விடுகிறது. இதைத் தவிர்க்க ஒரே வழி, பொதுப் போட்டி முறையை முற்றிலும் ஒழித்து விட்டுத் தனியார்த் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் கீழ் நிலை-லயில் இருந்து மேல் நிலை வரை அனைத்து நிலை வேலைகளையும் பார்ப்பனர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடி மக்கள், மத சிறுபான்மையினர் ஆகியோருக்கு அவரவர் மக்கள் தொகை விகிதத்தில் பிரித்துக் கொடுப்பது தான்.

கலா இவ்வாறு பேசிக் கொண்டு இருக்கும் பொழுது ஒருவர் இடைமறித்து வினாக்களைத் தொடுக்கத் தொடங்கினார். தொடுக்கப்பட்ட வினாக்களுக்குக் கலாவும் மாலாவும் மாறி மாறி விடை அளித்தார்கள்.

''பொதுப் போட்டியை ஒழித்து விட்டால் திறமை சாலிகளுக்கு வாய்ப்பு இல்லாமல் போய் நிர்வாகம் கெட்டுப் போய் விடுமே? நிர்வாகம் கெட்டுப் போனால் அனைத்தும் கெட்டுப் போகும் அல்லவா?''

''அப்படியா? சரி! அறிவும் திறமையும் ஏதோ ஒரு வகுப்பு மக்களுக்கு மட்டுமே உரியதா? அல்லது அனைத்து வகுப்பு மக்களுக்கும் உரியதா?''

''________''

''இப்படி மவுனம் சாதித்தால் எப்படி? விடை கூறுங்கள்.''

''அனைத்து வகுப்பு மக்களுக்கும் உரியது தான்.''

''அது மாற்ற முடியாத இயற்கை நியதி என்பதையும் ஒப்புக் கொள்கிறீர்களா?''

''ம்''

''அப்படி என்றால் பொதுப் போட்டி முறையில் ஏன் அனைத்து வகுப்பு மக்களும் தேர்ந்து எடுக்கப் படுவது இல்லை?''

திறமைசாலிகள் மற்றும் கடுமையாக உழைப்பவர்கள் தான் தேர்ந்து எடுக்கப் படுகிறார்கள். தேர்ந்து எடுக்கப் படாதவர்களுக்குத் திறமை இல்லை என்றும் அவர்கள் கடுமையாக உழைக்கவில்லை என்றும் புரிந்து கொள்ள வேண்டும்''

''முன்னுக்குப் பின் முரணாக ஏன் பேசுகிறீர்கள்? அனைத்து வகுப்பு மக்களிலும் அனைத்து நிலைத் திறமை உடையவர்கள் இருப்பதாகவும், அது மாற்ற முடியாத இயற்கை நியதி என்றும் ஒப்புக் கொண்டீர்கள் அல்லவா? அந்த இயற்கை நியதியின்படி அனைத்து வகுப்பு மக்களும் அனைத்து நிலைகளிலும் தேர்ந்து எடுக்கப்பட வேண்டும் அல்லவா? அப்படி நடக்கவில்லை என்றால் போட்டி முறையில் ஏதோ சூது பின்னிப் பிணைந்து உள்ளது என்று புரிந்து கொள்வதில் இருந்து உங்களை எது தடுக்கிறது?''

''________''

''உங்கள் மவுனம் பொதுப் போட்டி முறையில் சூது பின்னிப் பிணைந்து உள்ளதை உங்களால் மறுக்க முடியவில்லை என்பதையே காட்டுகிறது. அப்படிப்பட்ட சூது நிறைந்த முறையை ஒழித்துக் கட்டுவதில் என்ன தவறு?''

''நீங்கள் பேசுவது கற்பனை செய்யத் தான் நன்றாக இருக்கும். நடைமுறையாக்கி விட்டால் அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும்.''

''அப்படியா? இந்தியாவில் தமிழ் நாட்டில் இட ஒதுக்கீடு முறை நன்றாகச் செயல்பட்டு இருக்கிறது என்பதையும், மற்ற மாநிலங்களில் குறிப்பாக வட மாநிலங்களில் முறையாகச் செயல் படுத்தப் படவில்லை என்பதையும் அறிவீர்கள் அல்லவா?''

''ஆம். அதற்காக நாங்கள் தமிழ் நாட்டு நண்பர்களைப் பல முறை கேலி செய்ததும் உண்டு.''

''அப்படியா? மிக்க நன்றி. மற்ற மாநிலங்களை விட அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வளர்ச்சி மிகுந்த மாநிலமாக உள்ளதே? எப்படி? மருத்துவத் துறையை எடுத்துக் கொள்வோம். தமிழ் நாட்டில் அனைத்து வகுப்பைச் சேர்ந்தவர்களும் மருத்துவர் களாக உள்ளனர். மற்ற மாநிலங்களில் பெரும்பாலும்

பார்ப்பனர்களும் மற்ற உயர் சாதியினருமே மருத்துவர்களாக உள்ளனர். இன்று உலகம் எங்கிலும் இருந்தும் மக்கள் சிகிச்சை பெறுவதற்காகத் தமிழ் நாட்டிற்கு வருகின்றனர். உயர் சாதிக் கும்பலினரே மருத்துவர்களாக உள்ள வட மாநிலங்களை நோக்கி யாருமே போவது இல்லை. இதில் இருந்து என்ன தெரிகிறது?''

''உயர் சாதியினரில் இருந்து மட்டுமே மருத்துவப் படிப்புக்கு மாணவர்களைத் தேர்ந்து எடுப்பதால் அவர்களில் உள்ள திறமைக் குறைவானவர்களையும் தேர்ந்து எடுத்தே தீர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்பதும், இப்படிப் பட்ட திறமைக் குறைவானவர்கள் மருத்துவர்கள் ஆகிறார்கள் என்றும், அதனால் மருத்துவச் சிகிச்சையின் தரம் குறைகிறது என்றும் தெரிகிறது அல்லவா? ஆனால் தமிழ் நாட்டில் இட ஒதுக்கீடு செயல்படுத்தப்படுவதால், வட மாநிலங்களில் செய்வது போல் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களிடையே உள்ள திறமைசாலிகளைப் புறம் தள்ளி விட முடிவது இல்லை. இதனால் தமிழ் நாட்டில் மருத்துவப் பணியின் திறன் மிகுந்து வட மாநிலங்களில் இருந்து மட்டும் அல்லாமல் உலகின் பல பகுதிகளில் இருந்தும் மருத்துவச் சிகிச்சைக்காகத் தமிழ் நாட்டிற்கு மக்கள் வருகிறார்கள் என்று புரியவில்லையா? இந்தப் பட்டறிவு பொதுப் போட்டி மூலம் திறமைசாலிகளைத் தேர்ந்து எடுக்க முடிவது இல்லை என்றும், ஆகவே அது ஒழித்துக் கட்டப்பட வேண்டும் என்றும் உணர்த்தவில்லையா?''

''நன்றாக இருக்கிறதோ அதற்காக நாங்கள் பொதுப் போட்டி முறையை ஒழிக்க உங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றா எதிர்பார்க்கிறீர்கள்? இது உங்களுக்கே வேடிக்கையாகத் தோன்றவில்லையா?''

''நமக்கு நல்லது அல்லது கெட்டது எது வேண்டுமானாலும் நாம் உழைத்துத் தான் பெற வேண்டும் என்றும் தெரியும்; பிறர் தந்து பெற முடியாது என்றும் தெரியும். நம் நலன்களுக்காக நாம் போராடுகிறோம். அதற்கான விழிப்புணர்வையும் பொதுக் கருத்தையும் ஏற்படுத்த முயல்கிறோம். மூன்று தலைமுறைக்கு முன் எங்கள் மக்கள் எழுதப் படிக்கவே தெரியாமல் இருந்தார்கள். ஆனால் இன்று நம்மில் பொறியாளர்கள், மருத்துவர்கள், நிர்வாக அதிகாரிகள் இன்னும் பல உயர் நிலைப் பணிகளில் இருக்கிறோம். அது மட்டும் அல்ல, பல முன்னேறிய வகுப்பு மக்களை விட நாங்கள் தான் திறமைசாலிகள் என்று பல இடங்களில் மெய்ப்பித்தும் இருக்கிறோம். இந்த உயர்வு எல்லாம் எங்கள் உழைப்பினால் கிடைத்ததே ஒழிய மற்றவர்கள் தந்து கிடைக்கவில்லை.''

கேள்வி கேட்டவர் மவுனமாக அமர்ந்து விட்டார். அப்பொழுது ஒரு இந்தியர் தன் கருப்பின நண்பரின் காதில் ஏதோ கூற, அந்த நண்பர் எழுந்து நீங்கள் இந்து மதத்தை மட்டுமே எதிர்க்கிறீர்களாமே? கிருத்துவ இஸ்லாம் மதங்களை எதிர்த்துப் பேச அச்சப் படுவீர்களாமே?'' என்று கேட்டார்.

உடனே மாலா ''அது பொய் நாங்கள் அனைத்து மத மூட நம்பிக்கைகளையும் வெளிப்படையாகவே எதிர்க்கிறோம். எங்கள் மீது குறை சொல்லியே ஆக வேண்டும் என்று ஆசைப் படும் எங்கள் நாட்டு நண்பர்கள் இந்து மத எதிர்ப்பை மட்டுமே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றனர். சரி! அது ஒரு புறம் இருக்கட்டும். உங்களுக்கு பெர்ட்ரண்ட் ரஸ்ஸ லைத் (Bertrand Russel) தெரியுமா?''

''தெரியும்''

''அவர் ஏன் கிருத்துவ மதத்தை மட்டுமே எதிர்த்தார்? என்று உங்கள் இந்திய நண்பரைக் கேளுங்களேன்.''

''அவரை என்ன கேட்பது? எனக்கே தெரியும். அவர் வாழ்ந்த சமூகச் சூழலில் ஆதிக்கம் செலுத்தியது கிருத்துவ மதமே. ஆகவே அவர் கிருத்துவ மதத்தை மட்டுமே எதிர்த்தார்.''

''உங்களுக்கு தஸ்லிமா நஸ்ரினைத் (Taslima Nasrin) தெரியுமா?''

நீங்கள் என்ன கேட்க வருகிறீர்கள் என்று புரிகிறது. அவர் ஏன் இஸ்லாம் மதத்தை மட்டுமே எதிர்த்தார் என்று தானே? அவர் இஸ்லாம் மதத்தினால் தான் பாதிக்கப் பட்டார். ஆகவே இஸ்லாம் மதத்தை மட்டும் எதிர்த்தார்.''

''அது போல நாங்கள் அதிகமாக - அதிகமாக என்பது சரியான சொல்லாக இருக்காது; கொடூரமாகப் - பாதிக்கப் படுவது இந்து மதத்தினால் தான். ஆகவே அதனை மற்ற மதங்களை விடக் கடுமையாக எதிர்க்க வேண்டி உள்ளது.''

அந்தக் கருப்பின நண்பர் சிரித்துக் கொண்டே அமர்ந்து விட்டார். அப்பொழுது ஒருவர் எழுந்து ஈவேரா பிள்ளையார் சிலையை உடைத்தார். அதை நீங்கள் வரவேற்கிறீர்கள். ஆனால் நாங்கள் ஈவேரா சிலையையோ அம்பேத்கர் சிலையையோ உடைத்தால் மட்டும் ஏதோ மகா பாவம் செய்வது போல் கூக்குரல் இடுகிறீர்களே ஏன்?'' என்று கேட்டார்.

''பெரியார் தன் கைக்காசு செலவு செய்து, பிள்ளையார் சிலையை வாங்குகிறார். பின் இந்தச் சிலையில் எந்த ஒரு அருளும் இல்லை ; ஆற்றலும் இல்லை; வெங்காயமும் இல்லை; இதற்குள் மந்திர

சக்தி இருப்பதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்து வைத்து இருக்கிறார்கள்; இது வெறும் கல் தான்; இதை உடைப்பதனால் யாருக்கும் எந்தக் கெடுதலும் ஏற்படாது; இதோ பாருங்கள் உடைக்கிறேன், என்று கூறி விட்டு அனைவரும் அறிய அதை உடைக்கிறார். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? மற்றவர்கள் செய்து வைத்த சிலையை, ஏன் உடைத்தார் என்ற காரணம் தெரியாம லேயே, யாருக்கும் தெரியாமல் உடைத்து விட்டுப் போகிறீர்கள். நீங்களும் உங்கள் கைக்காசு செலவு செய்து பெரியார் சிலையையோ அம்பேத்கர் சிலையையோ வாங்கி, அதை ஏன் உடைக்கிறோம் என்று காரணம் சொல்லி, அனைவரின் முன்னிலை யிலும் உடையுங்களேன்.''

அப்படிச் செய்தால் நீங்கள் சும்மா இருப்பீர்களா?''

''அதெப்படி சும்மா இருக்க முடியும்? ஏன் உடைக்கிறீர்கள் என்று நீங்கள் சொல்லும் காரணம் சரியாக இல்லை என்றால், அது சரியில்லை என்று எடுத்துக் காட்டத் தான் செய்வோம்.''

''நான் அதைக் கேட்கவில்லை . அது உங்கள் மனதைப் புண் படுத்தாதா? சிலை உடைத்தது தவறு என்று சண்டைக்கு வர மாட்டீர்களா?''

''அது வெறும் கல் தான் என்று எங்களுக்குத் தெரியும். ஆகவே நீங்கள் செலவு செய்து வாங்கிய சிலையை நீங்கள் உடைத்தால் அதற்கு நாங்கள் ஏன் சண்டைக்கு வரப் போகிறோம்?''

அது வெறும் கல் என்று புரிந்தும், அவ்வப்போது அந்தக் கல்லுக்கு நீங்கள் ஏன் மாலை அணிவித்துப் பூசை செய்கிறீர்கள்? நாங்கள் கடவுளுக்கு மாலை அணிவித்துப் பூசை செய்தால் மட்டும் கேலி செய்கிறீர்கள். இது முரண்பாடாக இருக்கிறதே?''

''நாங்கள் பெரியார் சிலைக்கும், அம்பேத்கர் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்வது உண்மை தான். அது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அல்ல.

அவர்கள் நமக்கு ஆற்றிய பணிகளை நினைவு கொள்வதற்கும், அவர்கள் சொல்லி விட்டுச் சென்ற பாதையில் நடை போடுவதற்கான மன உறுதியை வலுப்படுத்திக் கொள்வதற்கும் தான். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அந்தச் சிலைகளுக்கு மாலை அணிவிப்பதாலும், பூசை செய்வதாலும், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டு ஏதோ கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் திணித்தும் வளர்த்தும் மனித முயற்சிகளைச் சிதைக்கிறீர்கள். இது போல் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டு ஏதோ நடக்கும் என்ற நம்பிக்கைகளைத் திணிப்பதையும் வளர்ப்பதையும் தான் நாம் எதிர்க்கிறோம்.''

இவ்வாறு கலாவும் மாலாவும் விடை கூறிய பின் சிறிது நேரம் அமைதி நிலவியது. வேறு ஏதாவது வினாக்கள் உண்டா என்று கேட்ட போது அனைவரும் அமைதியாகவே இருந்தனர். அப்பொழுது ஒரு வெள்ளை இன அமெரிக்கர் எழுந்து, தான் கிருத்துவ மத நம்பிக்கை கொண்டவன் என்றும், ஆனால் இன ஒதுக்கலை ஏற்றுக் கொள்ளாதவன் என்றும் மார்ட்டின் லூதர் கிங் அவர்களின் விடுதலை உணர்வையும், வன்முறை தவிர்த்த அறவழிப் போராட்ட முறையையும் ஆராதிப்பவன் என்றும் கூறினார். அன்று இரு இளம் பெண்களின் பேச்சைக் கேட்டு அம்பேத்கர் பற்றியும், பெரியார் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டு இருப்பதாகவும், அவர்களுடைய பேச்சைக் கேட்க வாய்ப்பு அளித்த அம்பேத்கர் கிங் படிப்பு வட்டத்திற்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறி அமர்ந்தார். அவரைத் தொடர்ந்து சில கருப்பின அமெரிக்கர்களும் கலா, மாலா இருவரையும் பாராட்டி, நன்றி கூறி அம்பேத்கரையும் பெரியாரையும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை வெளியிட்டனர். பின் கூட்டம் முடிந்ததாக அறிவிக்கப் பட்டது.

இரண்டு நாட்கள் கழித்து கலாவும் மாலாவும் இந்தியாவிற்குப் புறப்பட்டார்கள். அவர்களுடைய பயணம் சான் ஃபிரான்சிஸ்கோவில் இருந்து புது தில்லிக்கும், அங்கிருந்து மதுரைக்கும் செல்லுமாறு திட்டமிடப்பட்டு இருந்தது. அவர்கள் புது தில்லிக்குப் போய்ச் சேர்ந்த பின் அங்கிருந்து மதுரைக்குப் புறப்பட்ட விமானம் தான் விபத்துக்கு உள்ளாகி இருக்கிறது.

சங்கர பாண்டியின் நண்பர்கள் இவ்வளவு விவரங்களையும் கேட்டு விட்டு, அவனுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் அமைதியாக இருந்தார்கள். அப்பொழுது விடுதியின் ஒலி பெருக்கியில் சங்கர பாண்டிக்கு ஒரு தொலைப் பேசி அழைப்பு வந்து இருப்பதாக அறிவிப்பு வந்தது. மன வலி பொறுக்க முடியாத நிலையில் இருந்த சங்கர பாண்டி மெதுவாகச் சென்று தொலைப் பேசியைக் கையில் எடுத்தான். தொலைப் பேசியில் ''சங்கர பாண்டி! நான் மாலா பேசுகிறேன்'' என்ற குரலைக் கேட்டு அவன் அதிர்ச்சி அடைந்தான். அது இன்ப அதிர்ச்சியாகவே இருந்தாலும் அவனால் தொடர்ந்து பேச முடியாமல் தத்தளித்தான்; வெகு விரைவில் தன் உணர்வு நிலைக்குத் திரும்பிய அவன் மேற்கொண்டு விவரத்தைக் கேட்டான். கலாவும் மாலாவும் புது தில்லி விமான நிலையத்திற்குச் சென்ற போது, ஒருவர் தன் தந்தை மதுரையில் இறந்து விட்டதாகச் செய்தி வந்து அவரும் அவருடைய மனைவியும் அவசரமாக மதுரை செல்ல விமான நிலையத்திற்கு வந்து இருந்தார்கள். ஆனால் விமானத்தில் இடம் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டு இருந்தார்கள். இதைக் கேள்விப்பட்ட கலாவும்

மாலாவும் தங்கள் இடத்தை விட்டுக் கொடுத்து அந்த இணையரின் பயணத்திற்கு வழி செய்து கொடுத்து இருக்கிறார்கள். அதனால் விமான விபத்தில் சிக்காமல் அவர்கள் தப்பித்து விட்டார்கள்.

மிக மிக ஆழ்ந்த துயரத்தில் மூழ்கி இருந்ததால் சங்கர பாண்டிக்கு இந்த மகிழ்ச்சியான செய்தி கேட்ட பிறகும், அந்தத் துயர மனநிலையில் இருந்து மீள ஓரிரு நிமிடங்கள் பிடித்தன. பின் முகத்தில் மகிழ்ச்சி பொங்க, தன் நண்பர்களைப் பார்த்து முழு விவரங்களையும் கூறினான். அவனுடைய நண்பர்களும் இனி கவலை இல்லாமல் ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி கூறி விட்டுச் சென்றார்கள்.

(இக்கதையில் தேர்வு எழுத வந்த மாணவிகளின் உடைகளை உருவிச் சோதனை செய்த நிகழ்வு அதீத கற்பனையாகத் தோன்றலாம். ஆனால் 15.3.2012 அன்று மத்தியப் பிரதேச மாநிலத்தில் நடந்த உண்மையான நிகழ்வு தான் இக்கதையில் புனையப்பட்டு உள்ளது. ஐயம் கொள்பவர்கள் இணையத்தில் சரி பார்த்துக் கொள்வதற்காகவே அந்த அருவருப்பான செயலைச் செய்த ஆசிரியை களின் பெயர்களே இக்கதையிலும் பயன்படுத்தப்பட்டு உள்ளது).

■



## திராவிடர் விடுதலைக்கழகம் பயிலரங்கம்




**25.07.2022 திங்கள் அன்று திருச்சி டான்பாஸ்கோ பள்ளியில் நடைபெற்ற திராவிடர் விடுதலைக் கழகத்தின் மூன்று நாள் பயிலரங்கில் இறுதி நாளான திங்கள் அன்று தமிழ் தேசியர் பொய்யுரைகள் கற்பிதங்கள் என்றத் தலைப்பில் வாலாசாவல்லவன் கலந்துகொண்டு பயிற்றுவித்தார்.**

# மக்கள் தமிழகம்

## கட்சி தொடக்க விழா....

### வெல்லும் தமிழ்நாடு மாநாடு



சூலை 17, அன்று சிதம்பரத்தில்.,. மக்கள் தமிழகம் கட்சி - தொடக்க நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது.. மக்கள் தமிழகம் கட்சியின் கொள்கை அறிக்கை, கொடி - அறிமுகம் செய்யப்பட்டன.. தோழர நிலவழகன் தலைவ ராகவும், தோழர் செவ்வேள் பொதுச்செயலாளரா கவும் தேர்வு செய்யப்பட்டனர்... மக்கள் தமிழகம் கட்சி அறிவிப்பு மாநாடு மண்டபத்திலும், வெல்லும் தமிழ்நாடு - மாநாடு பொதுவெளியிலும் எழுச்சியுடன் நடைபெற்றது.. 13 தீர்மானங்கள் முன் மொழியப்பெற்றன.. இரவு 11 மணிக்கு முடிவற்றது.. தோழர்கள் தயாநிதி, தாசு, கடலூர் தமிழரசன், விடுதலைச் செல்வன் உள்ளிட்ட மாநாட்டுப் பொறுப்புத் தோழர்களின் வழிகாட்டலில் எண்ணற்ற இளைஞர்கள் ஒருங்கிணைந்து பேருழைப்புச் செலுத்தி மாநாட்டை வெற்றியாக நடத்தினர்.. பெரும்பான்மைத் தலைவர்கள் வந்து கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் மா.பெ.பொ.க. தோழர் தீ.கோபாலகிருட்டிணனின் தந்தை
# வ.தீனதயாளன் மறைவு



மா.பெ.பொ.க. வின் காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர் தீ.கோபாலகிருட்டிணனின் தந்தை வ.தீனதயாளன் வயது முதிர்வு காரணமாக 12.08.2022 அன்று காலை காஞ்சிபுரம் நெல்லுக்காரத் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் மறைவுற்றார். அவர் அச்சு இயந்திரம் பழுது செப்பனிடும் பணியாற்றியவர். சிந்தனையாளன் அலுவலகத்தில் இருந்த பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமத்தின் அச்சு இயந்திரத்தை இரண்டு முறை பழுது நீக்கி இயக்க வைத்தார். கோபால கிருட்டிணன் செந்தாமரை இணையர் சுயமரியாதை திருமணம் செய்து கொள்ளவும் உறுதுணையாக இருந்தார். காஞ்சிபுரத்தில் செயல்படும் முற்போக்கு அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டனர். மா.பெ.பொ.க. சார்பில் வாலாசாவல்லவன், சி.நடராசன், நாராணயமூர்த்தி சம்பந்த சிவக்குமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். அவரை இழந்து வருந்தும் அன்னாரின் குடும்பத்தினருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தி. சி.நடராசன்

## காஞ்சிபுரம் ஆ.சோதி அவர்களின் தாயார்
# ஆ.ஏகாத்தம்மாள் மறைவு



காஞ்சிபுரத்தில் மா.பெ.பொ.க., புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், திருக்குறள் பேரவை உள்ளிட்ட அமைப்புகளில் செயல்பட்டு வரும் தோழர் ஆ.சோதியின் (குறள் அமிழ்தன்) தாயார் ஆ.ஏகாதம்மாள் வயது முதிர்வு காரணமாக 11.08.2022 அன்று மாலை மறைவுற்றார். அரிமா சங்கம் மூலம் கண்கள் கொடையாக வழங்கப்பட்டது. 12.08.2022 அன்று மாலை போரூர் இராமசந்திரா மருத்துவமனைக்கு உடல் கொடையும் வழங்கப்பட்டது. காஞ்சிபுரம் நகரில் உள்ள முற்போக்கு இயக்கங்களை சேர்ந்த தோழர்கள் அனைவரும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டனர். மா.பெ.பொ.க. சார்பில் தோழர்கள் வாலாசா வல்லவன், சி.நடராசன், நாராயணமூர்த்தி, சம்பந்தசிவக்குமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். அம்மையாரை இழந்து துன்பத்தில் வருந்தும் தோழர் ஆ.சோதி மற்றும் அவருடைய குடும்பத்தினருக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

செய்தி சி.நடராசன்

# வேலூர் அய்.து.பாபுமாசிலாமணி மறைந்தார்.

**பெரியாரிய – அம்பேத்கரிய கொள்கை மறவர்!**




பாவேந்தர் பாரதிதாசன், தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் பால் பேரன்பு பூண்டவர்! மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சியின் சார்பில் 1980 தொடக்கத்தில் பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவை ஒட்டி, கல்லூரி மாணவர்களுக்கான சொற்பொழிவுப் போட்டியில் ஊரிசுக் கல்லூரி மாணவராகப் பங்கேற்றுப் பரிசு வென்றவர்.

மேதை அம்பேத்கரின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஒட்டி 1992இல் “டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு” ஆங்கில நூலை நற்றமிழ் நடையில் தமிழாக்கம் செய்த தோழர் க.முகிலன் அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்திப் பெருமை செய்தவர்.

ஆயராகப் பணிபுரிந்தாலும் மா.பெ.பொ.க., புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம் நடத்தும் பொதுக் கூட்டங்களிலும் கருத்தரங்குகளில் தவறாமல் கலந்துகொள்பவர். நம் செயல்பாடுகளுக்குத் தொடர்ந்து ஊக்கம் அளித்து வந்தவர். தமிழ்ப் பற்று மிக்கக் கவிஞரும் சீரிய பொழிவாளருமான அன்பிற்கும் மதிப்புக்குரிய ஆயர் அய்.து.மாசிலாமணி 25.07.2022அன்று மறைந்தார் எனற செய்தி மிகவும் துயரத்தைத் தருகிறது. அவரது இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரைப் பகிர்கிறோம்.

**மார்க்சிப் பெரியாரியப் பொதுவுடைமைகட்சி          புரட்சிக் கவிஞர் கலைஇலக்கிய மன்றம்.**



## அரசியல்வாதிகளானால் அயோக்கியர்களாக மாறி விடுகின்றனர்.

**யார் ஒருவன் நல்லவன் ஒழுக்கசீலன் யோக்கியன் என்று போற்றப்படுகிறானோ, அவனை அயோக்கியனாக்க வேண்டுமென்றால் அவனைச் சட்டசபைக்கு அல்லது லோக்சபைக்கு அனுப்பினால் போதும். அவன் எப்பேர்ப்பட்ட அறிவாளியாகவோ புத்திசாலியாகவோ யோக்கியனாகவோ இருந்தாலும் தேர்தலில் பிரவேசித்தவுடனேயே அவன் அயோக்கியத்தனங்களுக்கு ஆளாகாமல் இருக்க முடியாது. தேர்தல் ஆசை வந்து விட்டால் அன்று முதல் அவன் பித்தலாட்டத்தைக் கற்றுக் கொள்கிறான். போக்கிரித்தனம், மகாபித்தலாட்டம் இவைகளைக் கற்க வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் நம் நாட்டு அரசாங்க முறை அப்படி அமைந்து விட்டது.**

**(விடுதலை, 25.12.1955)**



## இந்து என்பது முகமதியர் கொடுத்த பெயர்தான்

**“இந்து சமூகம் என்பதே வெறும் கற்பனை என்பதுதான். இந்து என்ற பெயரே ஓர் அன்னியப் பெயர்தான். இந்த நாட்டு மக்களிடமிருந்து தங்களைத் தனித்து காட்டுவதற்கு முகமதியர் வைத்த பெயர்தான் இந்து என்பது. முகமதியரின் படையெடுப்புக்கு முந்தைய எந்த சமஸ்கிருத நூலிலும் இந்து என்ற சொல் காணப்படவில்லை.”**

**– பாபா சாகேப்**
**அம்பேத்கர் எழுத்தும் பேச்சும்**
**தொகுதி – 1 பக்கம் 72**

# பாலாறு ஏ.சி.வெங்கடேசன் அவர்களின் படத்திறப்பு நினைவேந்தல் நிகழ்வு.



திருப்பதூர் மாவட்டம் வாணியம்பாடி. மேட்டிப்பாளையத்தில் 31.07.1959 ஆம் ஆணடு சின்னராசு - கமலாம்மாள் இணையருக் மூன்றாம் மகனாக பிறந்த ஏ.சி.வெங்கடேசன் தம் 62ஆம் அகவையில் 3.6.2022 அன்று உடல் நலமின்றி மறைந்தார். அவருக்கு மனைவியும் மூன்று மகன்களும் உள்ளனர்.

ஏ.சி.வெங்கடேசன் மா.பெ.பொ.க-வின் ஆதரவாளர். அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களின் மீது அன்பு கொண்டவர். 2008 ஆம் ஆண்டு பெரியார் ஈ.வெ.ரா நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையும். செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனமும் இணைந்து திருநெல்வேலி பாளையங் கோட்டையில் நடத்திய ஆதிச்ச நல்லூர் அகழாய்வு மூன்று நாள் கருத்தரங்கில் வேலூர் தோழர்களோடு பங்கேற்றார், நம் கட்சியின் மாநாடு. கருத்தரங்கம் போன்ற நிகழ்வுகளில் ஆர்வமோடு பங்கேற்பார்.




2017 ஆம் ஆண்டு மா.பெ.பொ.க மாநாடு பொங்கல் மலர் வெளியீடு வாணியம்பாடியில் நடத்துவதற்கு கட்சி தோழர்களுக்கு தூண்டுதளாகவும், மாநாடு நிதி திரட்டலுக்கும் திட்டமிடலுக்கும் துணையாக இருந்தவர். வாணியம்பாடி தமிழ்ச் சிந்தனையாளர் மன்றத்தின் துணைத் தலைவராகவும். பாலாறு பாதுகாப்பு சங்கத்தின் தலைவராகவும் இருந்த்வர். தன் இறுதி காலத்தில் பாலாற்ற காக்க தயங்காது பாடாற்றியவர். எழுத்தாளர், கவிஞர் பேச்சாளர் ஆய்வாளர் என பன்முகத் தன்மை கொண்ட திரு. ஏ.சி.வெங்கடேசன் அவர்கள் இதய அறுவை சிகிச்சைக்குப்பின் மிகுந்த அக்கரையும் கடுப்பாடும் உடலின் மீது சாட்டாததால் அவரின் இறப்பிற்கு அவரே காரணமாகிவிட்டது பெருந்துயரம்.

அவரின் நினைவை போற்றும் வகையில் தமிழ்ச் சிந்தனையாளர் மனற்த்தின் சார்பில், வாணியம்பாடி சி.எல்.சாலை, எண்.4, டவர் கூபி அரங்கில் படத்திறப்பும் நினைவேந்தல் நிகழ்வும் நடைபெற்றது நிகழ்விற்கு மன்றத்தின் தலைவர் புலவர் அ,சகாதேவன் தலைமை வகித்தார், முப்பெரும் உழவர் பெருந்தலைவர் விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே.எம்.வெங்கடேசன் அவர்கள் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

மன்றத்தின் செயலாளர் நா,மதனகவி தொடக்கவுரையாற்ற பொருளாளர் ந,முகமது நசீம் செயற்குழு உறுப்பினர்கள், த.வேலு. அ,கசேந்திரன், மு,சரவணன், மக்கள் தமிழகம் கட்சியின் பொதுச் செயலாளர் ந,செவ்வேற் தமிழ்நாடு தொழிற்சங்க பொதுச் செயற்யாளர் தோழர் உரூபன், புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர் மு.பிரதாபன், பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்க தோழர் காஞ்சி அமுதன் இசுலாமியா கல்லூரி பேராசிரியர் த,அபுல்பாசல், மா.பெ.பொ.க தலைமைக்குழு உறுப்பினர், தோழர் சா.குப்பன் ஆகியோர் ஏ.சி.வெங்கடேசன அவர்களை நினைவை ஏந்தி உரையாற்றினர். மன்றத்தின் துணைத் தலைவர் இரா.முல்லை நினைவுரை யாற்றினார். மன்றத்தின் இணைச் செயலாளர் சோலை இளம்பிரியன் நன்றியுரையாற்றினார், நிகழ்வு நிறைவுற்றது.



# சாதியை ஒழிக்க வேண்டும்.

*- பெரியார் ஈ.வெ.ரா*

நம் நாட்டின் மக்களுக்கு நன்மை பெறவே, நமக்கு வேண்டியவர்களை வைத்து ஆட்சி செலுத்த வேண்டும்.

இன்றைய தினம் நடப்பது நீதியின் ஆட்சியா? காசு செலவு செய்தால் கழுதை கூட மந்திரி ஆகலாம் என்று இருக்கிறது. இப்படி அது ஆட்சி செய்தால் நாம் அதில் இருப்பது அர்த்தமா? ஒருவன் கூட யோக்யமானவன் இல்லையே! பணம் செலவு செய்தால் மந்திரி.

பார்ப்பான் காலைக் கழுவி குடித்தால் அவனும் மந்திரியாகி விடுகிறான். மக்களைப் பற்றி கவலை யில்லை. நான் 5-வருடம் மந்திரியாக இருந்தால் போதும் என்று நினைக்கிறான். 1947 ஆகஸ்டு 15-ஆம் தேதி சுதந்திர நாள் என்றார்கள்.நான் தான் அதை துக்க நாள்;கேடு பயக்கும் நாள்; நமது பரம்பரை எதிரி களான பார்ப்பனர்கள் ஆதிக்கத்திற்கு வரும் நாள் என்றேன். ஆட்சிக்கு வந்தவுடன் சட்டமியற்றிக் கொண்டார்கள்.அதை பார்த்தவுடன் நான் இது மனுதர்ம சட்டம் என்றேன்.

இது பொய்யா? அன்று முதல் இன்று வரை அதை எதிர்த்தே வந்துள்ளேன். இந்த இந்திய நாட்டில் இருந்து நாம் பிரிய வேண்டும். முதலாவதாக இந்த வடநாட்டு பார்ப்பானின் ஆட்சியில் இருந்து பிரிய அதாவது தமிழ்நாடு சுதந்திர நாடாக பிரியவேண்டும். அதற்காக இந்திய நாட்டின் படத்தை எரித்து, அதன் சாம்பலை பிரதம மந்திரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். எதற்காக என்றால், உன் ஆட்சியில் இருக்க எங்களுக்கு பிரியமில்லை. மனுதர்ம அடிப்படையில் சட்டம் உள்ளது அதனால் எங்கள் நாட்டை எங்களுக்கு பிரித்துக் கொடுத்து விடு என்று கேட்பதன் அறிகுறியாக இந்த போராட்டத்தை நடத்தியாக வேண்டும் நாள் குறித்த வுடன் தயாராக இருங்கள்.அரசாங்கம் இதற்காக அதிகப்படியான தண்டனை என்றாலும் அதை நாம் வரவேற்க வேண்டும்.

அரசியலமைப்பு சட்டத்தை 12000- பேர்கள் கொளுத்தினர்.4000-பேரைப் பிடித்து சிறையில் போட்டனர்.இனி அதற்கும் மேலான அடக்கு முறைக்கு ஆளாகி மடிய வேண்டியது தான். மோசடி செய்து நம்மை இந்த கொடுமையான நிலைக்கு கொண்டு வந்துவிட்டார்கள். காந்தி, ஏமாற்றிப் பெற்றுக் கொண்ட "மகாத்மா" பட்டத்தைக் காப்பாற்றிக் கொண்டு உலகத்தில் இருக்கவே நம்மை காட்டிக் கொடுத்து விட்டார்.

இந்த நாட்டில் சாதி ஒழியக்கூடாது என்று காந்தி வாயிலிருந்து தான் முதலில் வந்தது. மக்களை ஏமாற்றமே தீண்டாமை ஒழிய வேண்டும் என்றார்.அதனால் தான் இங்கு ஒரு முன்னேற்றக் காரியமும் ஆகவில்லை.அதற்கு முன் இருந்தது போலவே உள்ளது.

தீண்டாமை ஒழிப்பிற்கு பிறகு ஒன்றும் புதிய தாக இல்லை. பொது கிணறு, ரோடு வசதி, கோயில் பிரவேசம் இவற்றிற்கும் காந்திக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.யாராவது முன்வந்து என்னிடம் சம்பந்த முண்டு என்று சொல்ல முடியுமா? காந்தியாருக்கு முன்பே ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியின் போது தீண்டாமை அனுசரித்தால், ரூபாய் ஐம்பது அபராதம் என்பது போன்ற சட்டத்தை செய்து வைத்திருந்தார்கள். தீண்டாமை சம்பந்தமான கிளர்ச்சி-யின் போது காந்தி தெளிவாக கூறினார்.தீண்டாமைக்கும் சாதி ஒழிப்பிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சாதி ஒழிக்கப்பட மாட்டாது என்றும் தீண்டாமை தான் ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னார். இது பற்றி" யங் இந்தியா" போன்ற பத்திரிகைகளில் அவரே எழுதியும் உள்ளார்.சமபந்தி போஜனம்-கலப்புத் திருமணங்கள் இவற்றிற்கும் தீண்டாமைக்கும சம்பந்தமில்லை என்கிறார். இன்று நாம் மிகப்பெரிய சதித்திட்டத்திற்கு ஆளானோம்.

சுதந்திரம் அடைந்த பின்னரும் சாதியை ஒழிக்க முடியாவிட்டால் என்ன பயன்?

(14-09-1958-அன்று திருச்சியில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)

# ஊர் இழுத்த ஒரு தலைவர்

**– பேரா.இரா.சோதிவாணன்**



செங்கதிரின் உள்ளாடைக் கருந்துளையாம்.
செம்பெரியார் மேலாடைக் கருஞ்சட்டையாம்
வெண்முகத்தின் சுடர்நெற்றி வெள்ளி வீதியாம்
வியன் கன்னம் இரண்டில் வெண்முகில் புரளுமாம்
பொன் கைவிரல் இதழ்ப்பற்றிச் செந்தடி பொங்குமாம்
போர்ப்பண்பின் ‘கருவண்ணம்’ திராவிடக் குறியீடாம்
வெஞ்சிறைகள் போராட்டக் காவல் கோட்டைகளாம்.
வேங்கைக்கும் பெரியார்க்கும் ‘பாய்ச்சல்’ வேட்டைகளாம்.

தீப்பந்தாம் வெங்கதிரில் பிதிர்ந்து வீழ்ந்த
தீப்பிழம்பின் உருண்டைதான் பூமியாகும்
பூப்பந்தாய் ஆவதற்குக் கோடி ஆண்டாம்.
புத்துயிரின் வளர்ச்சியிலே மாந்தன் தானே
மாக்களினும் ஆறாம் அறிவினால் தேர்ந்தான்
மாப்பொய்யர் ஆரியர் அவ்வறிவை ஏய்த்தார்.
நோக்குற்ற பெரியார்தாம் வெண்டெழுந்த
நூற்றாண்டாய் அவ் ஏய்ப்பைச் சுட்டித் தீய்த்தார்.

தேர் இழுத்தார் மண்தெருவில் ஆத்திகர்கள்
தெளிவுடைய பகுத்தறிவுப் பாதை தன்னில்
ஊர் இழுத்தார் நாத்திகத்தின் தலைவர் தாமே.
உயிருடனே வயிற்றதனை வளர்க்கப் பூணூல்
மார்பினத்தார் மதமாயை தனை வளர்த்தார்
மடத்தனத்தின் கீழ்மைதனை வெளிப் படுத்திச்
சீரினத்துத் திருக்குறளை மனுநூலுக்குச்
செருப்புரட்சி நூலென்றே பெரியார் ஆர்த்தார்.

ஒரு பெரியார் விழிப்பினாலே பல நூற்றாண்டின்
ஒரு கோடித் தலைமுறைகள் உறக்கம் தீர்ந்து
தெருக்கோடிப் புழுதியாகக் கண்ணில் வீழ்ந்து
நெருக்கடியாய் உறுத்திய ஆரியத்தைத் தட்டிப்
பெரும்புரட்சித் தமிழ்நிலத்தில் வெடித்ததாமே.
பெருமாற்றப் போர்க்குரல் வான் கிழித்ததாமே
மருட்டிநின்ற பார்ப்பனியம் வெருண்டதாமே
மறுமலர்ச்சிப் புதுவிடியல் ஒளிர்ந்ததாமே.

ஈராயிரம் ஆண்டாய் விளையா மானம்
ஈரோட்டில் பயிராகி மக்கள் பெற்றார்.
போராயிரங் களங்கள் புரிந்திட்டாலும்
பூக்காத குமுகமாற்றம் ‘ஒருவர்’ செய்தார்.
தேர்; ஆயிரங்கோயில்; கடவுள் இல்லை
திராவிடத் தலைவன் மானுடத்தின் எல்லை
ஓராயிரம் தடை வரினும் பெரியாற்றார்
ஓடி ஓடிப் பல துறைகள் மலர வைத்தார்.

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் : வாலாசா வல்லவன், எண். 2/12, சி.என்.கே.சந்து,
சேப்பாக்கம், சென்னை – 600005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014. பேசி : 044 – 2848 2441

Editor & Published by Valasa Vallavan, No. 2/12, C.N.K.Lane, Chepauk, Chennai - 600005.Mobile : 8668109047
Printed by Pavai Printers (P).Ltd.,
16, (142), Jani Jankhan Road, Royapettah, Chennai - 600 014. Phone : 044 - 2848 2441